# அகஸ்தியர் யாத்திரை

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

அகஸ்தியர் யாத்திரை

நவயுகப் பிரசுராலயம்,
காரைக்குடி.

விலை ரூ. 1—10—0

பதிப்புரிமை

முதற் பதிப்பு: ஜனவரி 1945

மதராஸ் ரிப்பன் பிரஸ், இராமச்சந்திரபுரம்

# பதிப்புரை

"அகஸ்தியர் யாத்திரை" என்னும் இக் கற்பனை நூல், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டி நடத்துவது. தமிழ் முனியாகிய அகஸ்தியர் தமது உலகயாத்திரையின் வரலாற்றை, இந்நூலில் பேசுகிறார்.

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள், முற்கால தற்கால நன்மை தீமைகளை மிகவும் தெளிவாக, கதைப் போக்காக, இந்நூலில் நகைச்சுவை ததும்ப நன்கு விளக்கியிருக்கிறார்கள். பாரதநாட்டின் தருமசக்தியும் வெண்ணாட்டின் கருமசக்தியும் ஒன்றுபட்டு மனித சமுதாயம் புதுவாழ்வு பெறவேண்டும் என்பது அடிகளின் கருத்து. மனித ஜாதியின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் நாகரிகத்திற்கும் உரிய எல்லாத் துறைகளும் இதில் அடங்கி யுள்ளன. தமிழர் நெஞ்சிலுதிக்கும் கேள்விகளுக்கெல்லாம் அகஸ்தியரே தமது அனுபவத்தால் பதில் சொல்லுவதுபோல், இதில் அழகாகக் கற்பனை செய்து எழுதப்பெற்றுள்ளது.

இந்நூலைத் தமிழர் கற்றறிந்து பயன் பெறுக.

அன்பு நிலயத்தார்.

இராமச்சந்திரபுரம்,
1—1—1945

அஅ—க—தூ

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தந்தோம் வரம்! | ... | 7 |
| 2. | போகர் செய்த கெடுபிடி | ... | 20 |
| 3. | அகஸ்தியர் "அகஸ்டஸ்" ஆனார்! | ... | 30 |
| 4. | ஆங்கில நெடுங்கணக்கு | ... | 43 |
| 5. | கர்ம பூமி | ... | 50 |
| 6. | மேற்கும் கிழக்கும் | ... | 58 |
| 7. | ஆங்கிலத்தில் பேசினேன்! | ... | 65 |
| 8. | நமது நாடு | ... | 70 |
| 9. | நமது சமயக் கதை | ... | 76 |
| 10. | உலக சமய ஆராய்ச்சி | ... | 80 |
| 11. | சுத்தாத்வைதம் | ... | 87 |
| 12. | நாம் வீழ்ந்ததேன்? | ... | 93 |
| 13. | நாட்டில் பாதி | ... | 102 |
| 14. | எனது திண்டாட்டம் | ... | 109 |
| 15. | முடிவுரை | ... | 115 |

# அகஸ்தியர் யாத்திரை

## 1. தந்தோம் வரம்!

“அகஸ்தியர் ரேடியோவில் பேசுகிறார்”! மெய்தானா? புரளியா? மெய்தான்! போங்காணும், கனவில் உளறுகிறீர்...அகஸ்தியர் இருக்கிறாரோ? பேசுவாரோ? எங்கிருந்தாம்? என்னவாம்? இந்த விதமாகக் கேள்விகள் கிளம்புவதால், உங்களுக்குத் தூக்கம் சுழற்றாதபடி, கொஞ்சம் முன்னுரை பேசுகிறேன்:

க

முன்னே இந்துசமுத்திரம் பொங்கி யெழுந்து தமிழகத்தை அழித்ததன்றோ? அதைப்போன்று இன்னொரு சமுத்திரம் பொங்கியெழுந்து, நம் தாய்நாட்டையும், மொழியையும், நாகரிகத்தையும் அடியோடு அழித்து விழுங்கக் குமுறியது. ‘ஐயோ தமிழர்களே!’ என்று கூவினேன். “சட், சத்தம் போடாதே, தூக்கம் கெடுகிறது” என்றனர் நம் அருமைச் சகோதரர்!

—தமிழர்களே, ஆபத்து!

—சை, தனித் தமிழிற் பேசுங்காணும்...‘இடர்’ என்று...

—சரி, இடர் வந்துவிட்டது......நம் கலைகளெல்லாம், நாகரிகமெல்லாம், கல்வி, தொழில், வாணிகம், அருளுணர்ச்சிகளெல்லாம் பாழாகின்றனவே...!

—சை, உளறாதேயும்! குறளும்; சிலப்பதிகாரமும் இருக்குமட்டும், நம்மை யார் அசைக்க முடியுங்காணும்? பேசாமல் வாயை மூடி உறங்கும்...!

—தமிழர்களே, நல்லது சொல்லுகிறேன்...

—உம் உரையை யாம் கொள்ளேம்...

—என்னருமைத் தமிழர்களே, நாம் இரண்டரைக் கோடி பேரும், நெல்லிக்காய் மூட்டையை உதறியது போல் மூலைக் கொருவராய் ஓடிப்பிரிந்து வாழுகிறோமே......நாம் ஒற்றுமையாயிருக்க வேண்டாமா?

—நீர் யார் சொல்பவர்? யார் உம்மை அப்படிச் சொல்லச் சொன்னார்கள்? "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்று எம் வள்ளுவர் முன்பே சொல்லி விட்டார்......வாயை மூடும்!

—ஐயா, காலத்திற் கேற்றபடி புதுமை பெறவேண்டும். ......நாடு விடுதலை பெறவேண்டும்.

—தொல்காப்பியத்தில் அதற்குச் சூத்திரங்காட்டும்...!

—ஐயா, இருபதாம் நூற்றாண்டைக் கண்விழித்துப் பாருங்கள்...!

—இரண்டாம் நூற்றாண்டிற்கு வந்துபாருங்கள்...!

—ஐயா, நாம் கல்வி தொழில்களில், காலத்திற்கேற்ற வளமை பெறவேண்டும்......இது ரேடியோக் காலம்...

—போங்காணும், பைத்தியமே. "கலந்தரு திருவிற் புலம் பெயர் மாக்கள்......பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்......" படியும் சிலப்பதிகாரத்தை......பிறகு பிதற்றமாட்டீர்.

—ஐயா, இக்காலம் அறிவும் ஆராய்ச்சியும் அற்புத முன்னேற்ற மடைந்திருக்கின்றன. உலக மேதாவிகளைப் பின்பற்றி நாமும் முன்னேறுவோம்...

—அப்படியா......வாரும்; பொற்றாமரையில் குதித்துச் சங்கப் பலகையைத் தேடுவோம்......அதில் வீற்றிருந்த புலவர் மாண்பைக் காண்போம். திருக்குறளுடன் தற்கால நூல்களையெல்லாம் அதில் வையும். எல்லா நூல்களும் பொற்றாமரைச் சேற்றிற் புதைந்தொழியும்......குறள் ஒன்றுதான் பலகையில் நிற்கும்......

இந்தமாதிரி எதற்கெடுத்தாலும் கம்பனுக்கு வம்ப

னாக ஏதாயினும் சொல்லிக் கொண்டிருந்தால், சீர்திருத்த மும், முன்னேற்றமும் எப்படி நிகழும்? காலவெள்ளம் அங்காந்து நம்மை விழுங்கிக்கொண்டிருக்கிறது. தகுந்த தலைவர் மூலம் தமிழருக்குப் புத்தி சொல்ல வேண்டு மென்று பார்த்தேன். நம்மில் யார் சொன்னாலும் ஏறுவ தில்லை. எல்லாம் "சூழ்ச்சி, புரட்டு" என்று மீண்டும் குறட்டை வாங்கச் சென்று விட்டனர் அருமைச் சகோ தரர்.

தக்க தலைவரைப்பிடித்துத் தகுந்த முறையில் தமி ழருக்கு உணர்ச்சி வருவிக்க வேண்டும் என்று ஊர் ஊராகச் சென்றேன். எங்கே சென்றாலும், சண்டை, தூக்கம்; தூக்கம், சண்டை......இதுவே நிலைமையாயி ருந்தது. சரி, இதெல்லாம் நமக்கென்ன வம்பு? பேசா மல் பாணதீர்த்தத்தில் முழுகிவிட்டு, அந்த நீர்வீழ்ச்சி யுடன் ஒரு பாட்டம் அழுது, நமது கண்ணீரையும் அதில் கலக்கிப் பேசாமல் மலையில் தவம் புரிந்து மௌனியாகச் 'சும்மா' இருப்போம் என்று விரைந் தேன்.

௨

ஆடிப் பெருக்கு; பொதிகைமலைமேல் ஏறினேன். எங் கும் பசுங்காட்சி. 'ஜேஜே' யென்று ஜனக்கூட்டம். வழியில் ஒரு பழங்கோயில் இருந்தது. அங்கே பாமர ஜனங்கள் பலிபோட்டு, சாமி கும்பிட்டனர்; வேப்பிலை கட்டிக்கொண்டு, பறைகொட்டிக் கூத்தாடினர். அப் போது, "அஞ்ஞானிகளே, எங்கள் கருத்தர் உங்கள் பாபத்திற்காகச் சிலுவை யேறினார்..." என்று கிறிஸ்து மதபோதகர் சிலர் கூட்டங்கூட்டி, ஜனங்களின் மனத்தைக் கரைத்துக் கொண்டிருந்தனர். ஒரு பாதிரி "ஏசு வந்தாரே! ஏற்றந் தந்தாரே!" என்று பிடிவிழுத்துப் பரவசமாகப் பாடிக்கொண்டிருந்தார். அந்தப் பாட்டில் பலர் உருகி நிற்கையில், இன்னொரு

பாதிரி யோவான் சுவிசேஷத்தைக் காலணுவிற்கு விற்றுக்கொண்டிருந்தார். இதைக் கண்டதும், நாமும் சைவ மதப் பிரசாரம் பண்ணுவோம் என்ற ஆத்திரம் எழுந்தது. 'அறியானை, அந்தணர்தம் சிந்தையானை, தரனனு!' என்று திருத்தாண்டகம் ஒரு பிர்க்கா இழுத்தேன்...அதற்குள் "டொண்டொணக்கு, டொணக்கு, டொணக்கு" என்று நம்மவர் தம்பட்டம், பறை, தமுக்கு இவற்றை அடித்தனர்; "பூம் பூம்" என்று கொம்பூதினர். பூசாரி வெறி நடித்தான். வேப்பிலை கட்டிக்கொண்டு நம் சகோதரரும் சகோதரிகளும் நேர்த்திக்கடன் செய்தனர். 'ஆஹா, ஹா' என்று காற்றெல்லாம் அலறியது. பூசாரி வாள், இரத்தம் சொரிந்தது. ஆடு கோழிகள் ஹதம் ...... ஐயோ ஐயையோ! என் "அறியானை' இந்த அறியாமையைக் கண்டு அழுகையாக மாறியது. அந்தக் கண்ணீரையும் பாணதீர்த்தத்திலேயே கரைத்துவிடுவோம் என்று அலறியடித்து மேலே ஓடினேன்.

௩

பாண அருவி யொன்றே என்னை 'வா, வா' என்றழைத்தது. "வந்தேன் அருவியே" என்று நானும் முகமலர்ந்தேன். அருவியில் மூழ்கிப் புண்ணியம் பெற ஆயிரக்கணக்கான தமிழர் வந்திருந்தனர். அவர்களுக்காயினும் எனது தமிழார்வத்தைச் சொல்லித் தலை முழுகுவோம் என்று, "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும்" பாடினேன். "நாளை ஜமீந்தார் சமாராதனை யாமே......இரண்டணு தட்சிணையும் உண்டாம். வடை பாயாசம், அப்பளம் வறுவலுடன் தாட்டான சாப்பாடு......சமையலுக்கு......கல்லிடை சாமண்ணு சகோதரர் வந்திருக்கிறார்கள். சாமான் சப்ளையெல்லாம் எமது ஜமீன் காரியம் சின்னசாமி ஐயர் பொறுப்பு..." என்றொருவர் கிளம்பினார். "ஓய்! உமது ஊர் ஓசத்

தியோ? இருபது வருஷத்திற்கு முன்னே நடந்த புதுக் கோட்டை நவராத்திரி பிராமண போஜனத்திற்கு ஈடு வராதுங்காணும்! யானையடி அப்பளம், பனங்காய்ப் பெருமன் லட்டு, மிந்திரிப்பருப்புப் பாயசம்" என்று வர்ணனையில் பிடித்து......நாக்கைச் சப்புக்கொட்டினார் இன்னொருவர். "மலையாளம் பப்படாம்" வர்ணனையிற் பிடித்தார் மற்றொருவர். இவற்றிற்கிடையே எனது "தொண்டர் நாதன்" தூது பலிக்கவில்லை.

இராத்திரி இருக்க வேண்டுமே!......இடம்? சுற்றிப் பார்த்தேன். எல்லாரும் புல் குடில் அமைத்துக் கொண்டிருந்தனர்; மூக்கைப் பிடித்துக் கொண்டே அக்குடில்களைச் சுற்றி வந்தேன். "அட, நம்ம பாட்டையாடா!" என்றொரு குரல் கேட்டது; சட்டெனத் திரும்பினேன்... யாரோ என் கண்ணைப் பொத்தி "நானார்?" என்றார். "யார், யார்?" என்றேன். இன்னொருவர் என் கையைப் பிடித்து இழுத்து, எங்கோ கொண்டு சென்றார். "இதென்னடா உபத்திரவம்?......தமிழுக்குத்தான் மோசம் வந்தது என்றால், ஆளுக்குமா வந்தது! ஐயோ! யார்?" என்றலறினேன். "வாடா பாட்டையா; எப்போ வந்தாய்?" என்று பொத்திய கண்ணைவிட்டு, இடிபோல் நகைத்து நின்றான் எனது நண்பன் **தமாஷ் ரங்கன்.** என்னைச் சுற்றிப் பார்த்தேன். அங்கிருந்த பத்துப் பேரும் எனது நண்பர்கள். அவர்களில் எனக்குப் பள்ளிப் பருவத்திலேயே பாட்டையாப் (பாட்டுப் பாடும் ஐயா) பட்டம் சூட்டிய பரமசிவமும் இருந்தான். இவர்கள் நல்ல நண்பர்களே; ஆனால், ஆளைச் செல்லமாக நாலறை கொடுத்துத் தோளில் கைபோட்டுக் கழுத்தை முறித்து "அடாபுடா" என்று தடபுடலாக வைது திட்டிக் கிண்டல் செய்துதான் நட்பாடுவர். இவர்களில் என் மனமறிந்து கேலிசெய்யாமல் நெஞ்சைத் தொட்டுப் பேசுவோன் இராமண்ணாதான். இராமண்ணா இப்போது யானைக்

குட்டிமாதிரிப் பெருத்துப்போனான். அன்று என்னுடன் 'பலீன் சடுகுடு' விளையாடிய இராமண்ணா, இன்று நாலு பிள்ளைகுட்டிக்காரனா யிருக்கிறான். இராமண்ணா ரேடியோக்கலையிற் சிறந்து, சென்னையிலும் திருச்சியிலும் பேர் பெற்று விளங்கினான். தமாஷ் ரங்கனும், பரமசிவனும் ரேடியோ யந்திர நிபுணராயிருந்தனர். என் தமிழ் அழுகையை யெல்லாம் கேட்டு, "வேண்டாண்டா பாட்டையா...அழாதே; இதோ வாழைப்பழம் தருகிறேன்" என்று மலைவாழைப்பழமும், அண்டிக் கொட்டையும் எனக்குத் தந்தார் நண்பர். நான் சாப்பிடும்போதே, தம் விருத்தாந்தங்களையும் விரிவாகச் சொல்லி... "தைரியமாயிரு பாட்டையா; உன்னை ரேடியோ முன்னே ஒருநாள் நிறுத்திவிடுகிறேன். நீ பாட்டுக்குச் செந்தமிழில் அழவேண்டிய தெல்லாம் பாட்டம் பாட்டமாக அழு; நம் நேயர்களுக்குச் சுகமாகத் தூக்கமாவது வரட்டும்" என்று ஆறுதல் சொன்னார்கள். எல்லாரும் தருப்பைப் புல் வெட்டி, எங்கள் பர்ணசாலையை விசாலமாக்கிக் கொண்டோம்.

ஃ

மறுநாள் பாண தீர்த்தமாடினோம்; அங்கே முழுகுவோருக்கு உதவி செய்தோம்; ஜனங்களை ஒழுங்காக அருவிக்கு அழைத்துச் சென்று, ஐந்தைந்து பேராக முழுகச் செய்து, மீண்டும் முழுகினவர்களை வெளியே கொண்டு விட்டோம். எல்லாரும் "ஹரி: சிவ சிவ... பாரதவர்ஷே பரத: கண்டே" என்றெல்லாம் சொல்லி அருவியாடினார்கள். நான் "எந்தாய் வாழ்க!" என்று தமிழ்த்தாயை நினைத்தே முழுகினேன். சிலப்பதிகாரம் **குன்றக்குரவை**யை மந்திரம் போல் ஒப்பித்தேன். தமாஷ் ரங்கன் "அடே, தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல் சொல்லி பாணதீர்த்தமாடுடா, பாட்டையா!" என்று ஏகக் கேலி செய்தான். "ஐயா, 'தமிழ்த் தாய்

வாழ்க!' என்று முழுகுங்கள்" என்று வருவோரிடமெல்லாம் நான் சொல்லி நின்றேன். செல்வோரிடமெல்லாம் "ஐயா, அம்மா, தமிழில் மந்திரம் சொல்லுங்கள்" என்றேன். என்னைச் சிலர் ஏதடா பைத்தியம் என்று முறைத்துப் பார்த்து, சங்கற்பம் சொல்லிக் கொள்ள ஓடினர். "ஹிரண்யகர்ப கர்பஸ்த"த்திற்குத்தான் செவி சாய்த்துச் சில்லறைகளைப் பொழிந்தனரே யொழிய, எனது தமிழ்த் தாயை யாரும் ஏறிட்டுப் பார்க்கவில்லை; 'சரி வரட்டும், பிராமண போஜனம் நடக்கும்போது வெளுத்து வாங்குவோம்' என்றிருந்தேன்.

௫

மணி ஒன்று. கொட்டகையில் ஏகக் கூச்சல், தர்க்கம்...சிவன் வடமனு? அஷ்டசஹஸ்ரமா? என்று திருநெல்வேலிக்காரரொருவரும் தஞ்சாவூர்க்காரரொருவரும் "ஓய்—ஏண்டாலே" போட்டு வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தனர். ஸ்ரீமந் நாராயணன் வடகலை ஐயங்காரா, தென்கலை ஐயங்காரா என்று மற்ருெருபுறம் மடியில் கூழாங்கற்களை வைத்துக்கொண்டு வழக்காடினார்கள். எங்களுக்குள்ளும் இங்கே ஒரு தர்க்கம் நடந்தது. நாங்கள் எல்லாரும் சேர்ந்து சாப்பிட விரும்பினேம். ஆனல், தமாஷ்ரங்கன் பரமசிவம் இருவரும் பிராமண போஜனத்திற்கு வர முடியாது...பூணூல் இல்லை. "அட பார்ப்பான்! நீ போய் வயிற்றை நிரப்பிவா... நாங்கள் எப்படியாவது சாகிறேம்" என்ருன் தமாஷ்ரங்கன். "வாருங்கள் நீங்களும். உங்களை விட்டு நான் மட்டும் போகமாட்டேன்" என்றேன். "அங்கே பார்ப்பாரப் பசிக்குத்தான் சோறுண்டு...மற்றவர் பசி வெளியே காத்திருந்து கையில் உருட்டிப் போடுவதை வாங்கித்தான் சாப்பிட வேண்டும். அப்படியிருக்கிறது சாதிச்செருக்கு..." என்று தமாஷ்ரங்கன் பெரிய சமூக சீர்திருத்தப் பிரசங்கம் செய்தான். "ரங்கா!

உனக்கும் இக்காலப் பார்ப்பாருக்கும் வித்தியாசம், மூனு வடம் அழுக்குப் பூணூல் தானேடா? இதோ பூணூல் தயார் செய்து மாட்டுகிறேன்'' என்று என் கிழிந்த கதர் வேட்டியில் நூல்நூலாக எடுத்துப் பேருக்கு ஒரு பிரம்ம முடிச்சுப் போட்டு ரங்கனுக்கு மாட்டினேன்; நெற்றி நிரம்ப விபூதியிட்டேன்; சந்தனப் பொட்டும் குங்குமப் பொட்டும் வைத்தேன்...பஞ்ச கச்சம் வைத்து வேட்டி யணியச் செய்தேன்; கையில் பளபள வென்று தேய்த்த கிண்டியைத் தந்தேன்; இராமண்ணுவின் பூணூல் மூன்றில் ஒன்றெடுத்துப் பரமசிவனுக்கு மாட்டினேன்; 'வாருங்கள் இப்போது' என்று சமாராதனைக்கு அழைத்துச் சென்றேன்.

வாசலிலிருப்பவர் ஒரு பேச்சுப் பேசவில்லை. தமாஷ் ரங்கன் ''தத்ஸவி துர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி'' என்று பிரமாதமாக முணுமுணுத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான். பரமசிவன் 'சிவோஹம் சிவோஹம்' என்று உருக்கமாகச் சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தான். நான் ''சந்தமா ரகிலொடும்'' முணுமுணுத்தேன். ''வாருங்கள் சாஸ்திரிகாள்'' என்று எங்களை உபசரித்து நல்ல இடத்தில் உட்கார வைத்தார் சின்னசாமி ஐயர். பரமசிவம் ரங்கன் மார்பில் கைவைத்தான். ''அட சம் சயாத்மா விநச்யதி...சும்மா இரு'' என்று சாடை காட்டினேன். ரங்கன் போட்ட வெளிச்சத்தில் அவனைப் பக்கா மடிசஞ்சி என்று எல்லாரும் எண்ணினார்கள். ''வாயைத் திறக்காதே, நான் செய்கிறபடி தண்ணீர் சுற்றிப் பிராணுகுதி போட்டுக்கொண்டு சாப்பிடு!'' என்று முன்பே சொல்லிவைத்தேன். அரங்கன் அசல் கனபாடிகள்போலவே நடித்தான். சாப்பிடும்போதும் பேச்சு நிற்பதில்லை. பருப்புஞ்சாதம் சாப்பிட்டதும், கொஞ்சம் கலகல வென்று கூச்சல்...உலக விருத்தாந்தம் எத்தனையுண்டோ அத்தனையும் நடக்கும். இரசம் வரும். 'உர் ரூர்' என்று

எல்லாரும் உறிஞ்சி யுறிஞ்சிச் சாப்பிடுவர். 'ஹேவ்' என்று வயிறு ரசீது கொடுக்கும். மீண்டும் 'சாமு, ராமு, சுப்பு,சேஷு, அந்தப்பயல் அப்படியாமே, உங்கள் மாமா இப்படிப் பண்ணினுனமே, ஹேவ்" என்றெல்லாம் பலபட்டரைப் பேச்சுகள் முழங்கும்.

அப்பளாம் வந்தது...இல்லே, பப்படாம்! அதைப் பாயசத்தில் ஊறப்போட்டுச் சாப்பிடவேண்டுமென்று சிலர் காத்திருந்தனர். கொட்டகை முழுதும் "நொறு நொறு"வென்று அப்பளாம் நொறுங்கும் சத்தம் கேட்டது.

எங்கள் எதிரேயிருந்தவர்...தமாஷ் ரங்கனைக் குறிப்பாகப் பார்த்தார். எனக்குத் 'திக்'கென்றது. 'மௌனம்' என்று ஜாடை காட்டினேன். தமாஷ் ரங்கன் யோகி மாதிரி ஒரே விறைப்பாகப் பத்மாசனத்தில் அமர்ந்து கண்ணை மூடிக்கொண்டான். பாயசம் வந்தால்தான் அவன் நிஷ்டை கலையும். எதிரேயிருந்த திருநெல்வேலிக்காரர், "ஓய், இவர் யாருங்காணும்?" என்று என்னைக் கேட்டார். "அவர் ஓர் இராஜயோகி...இங்கே கொஞ்ச நாள் ஏகாந்த வாசம் செய்ய வந்திருக்கிறுர்; சாப்பிடும்போது பேசமாட்டார்" என்று சொல்லிவைத்தேன். "ஓய், எல்லா யோகியும் எங்கள் திருநெல்வேலி ஜில்லாவுக்கு வந்துதாங்காணும் சித்திபெற வேணும். பொதிய மலையைவிடத் தவத்திற்கு ஏற்ற இடமில்லே. ஓய், அகத்துக்காரி உத்திரவு கொடுத்தால், நான்கூட இப்படித்தான் தவம்புரிய வந்துவிடலாமென்று வெகு நாளாக எண்ணியிருக்கிறேன். இங்கே **அகஸ்தியர் தபஸ்** செய்கிறுராக்கும்" என்று நீளப்பேசினுர்.

**'அகஸ்தியர்'** என்றதும் எனக்கு ஒரு புதிய உணர்ச்சி பிறந்தது. "ஐயா, அகஸ்தியரைக் காணலாமா?" என்றேன். "ஆகா, நான்கு மணிக்குச் சென்று நான்கு மைல் மேலே போவோம். அங்கே எத்தனையோ சித்தர்கள்

இருக்கிறார்கள். அகஸ்தியரைப்பற்றிக் கேட்போம்'' என்றார் ஐயர். எனக்கொரு புதிய உற்சாகம் பிறந்தது: "இத்தனை நாளாக ஜனங்களுக்குத் 'தமிழ் தமிழ்' என்று கதறித் தொண்டைத்தண்ணீர் வற்றி மனமுடைந்தோமே; பாண தீர்த்தத்தில் நமது கவலையெல்லாம் கரைத்து விட்டோம்; சரி, இனிமேல் தமிழைத் தந்த அகத்தியரிடம் போய் முறையிட்டுத் தீர்ப்போம்; அவர் ஏதாவது ஒரு வழி சொன்னால் பார்ப்போம்'' என்று என் மனம் துள்ளிக் குதித்தது.

பிராமண போஜனம் ஆனது. தமாஷ் ரங்கன் சாத்திரப்படி முப்பத்திரண்டு தடவை வாயைக் கொப்புளித்துக் கை கழுவினான். நாங்களெல்லாரும் ஐயருடன் எங்கள் பர்ணசாலைக்குப் போனோம். உண்ட மயக்கத்தில் கொஞ்சம் தலையைக் கீழே போட்டு ஐயர் உறங்கினார். எனக்கும் கொஞ்சம் தலை சுழன்றது...ஆனால் தமாஷ் ரங்கன் தனது முழு விகடச் சரக்குகளையும் அவிழ்த்து விட்டான். தூக்கம் மண்ணானது; மணி நான்கடித்தது. ஐயரை எழுப்பினேன்...புறப்பட்டோம் அகஸ்திய மலைக்கு...

சா

ஒருமைல் சென்றோம். அங்கே ஓர் ஆழமான ஊற்று; அதனருகே ஒரு பெரிய தட்டைப்பாறை; அதன் மேல் பரதேசிகள் சிலர் உட்கார்ந்திருந்தனர். 'அகஸ்தியர் இங்கே தான் இருக்கவேண்டும்' என்று பார்த்தேன். அந்த ஊற்றிற் சிலர் முழுகினர். "சிவம் சிவம், புண்ணியம். போடு காலணா; உன் பாவந் தொலையும்; போடப்பா கை நிறையக் காசு; பாவந் தொலைக்கவந்த இடத்திலே கூட உன் கருமித்தனம் போகவில்லையா ? செய்யப்பா தருமம் துறவிகளுக்கு'' என்று அப் பரதேசிகள் குளித்துச் செல்பவரைத் துரத்திப் பணங்கேட்டு வாங்கினர். அகஸ்தியர் இப்படிப் பிச்சை யெடுக்கமாட்டார் என்றெண்ணி, மேலே சென்றோம். மற்றொரு பாறையூற்று. அதன்

கரையில் நெகிடி...அதைச் சுற்றிப் பத்துத் துறவிகள் பங்கியடித்தனர். நாங்கள் சென்றதும், "பாரப்பா செந்தமிழைப் படைத்த தேவன்...அகத்தியரைப் பாரப்பா பொதிகை தன்னில், கேட்டவரம் தந்திடுவார் கேட்கு முன்னே...கூசாமல் காணிக்கை கொடுத்துக் கேளே..." என்று கஞ்சாப் புகையுடன் கவியும் பாடினர். அங்கே நாங்கள் சிறிது தாமதித்தோம். அரங்கன் அவர்களுக்கு நொண்டிச்சிந்தில் பாடிப் பல விநோதக்கேள்வி கேட்டுத் தமாஷ் பண்ணினன். நான் அகஸ்தியர் தேவாரம் சொல்லி அவர்கள் கவனத்தை இழுத்தேன். பணம் கேட்பதை விட்டு, அவர்கள் எங்கள் நட்புறவை விரும்பினர். அவர்களுள் ஒரு கிழட்டுத் துறவி நல்ல அறிவாளியாயிருந்தான். அவன் நெடுங்காலமாக அந்த மலையில் காய் கனி கிழங்குகளையே உண்டு வசித்தவன். அவனையே அகஸ்தியர் என்று கூறி இந்தத் துறவிகள் பணம் தேடிப் பிழைத்து வந்தனர். நான் அக் கிழவனுரிடம் ஆருத்துயருடன் என் தமிழார்வத்தைச் சொன்னேன். அகஸ்தியரைப் பார்க்கவேண்டும் என்றேன். "மேலே பல சித்தர்கள் இருக்கிருர்கள்...அவர்களைக் கொண்டு அகஸ்தியரைத் தரிசிக்கலாம்" என்ருர் கிழவர்.

எல்லாரும் மேலே சென்ருேம். அங்கே உண்மையாகவே தவம்புரியும் ஒரு முனிவர் இருந்தார். என்னைக் கண்டதும், அவர் அகஸ்தியர் பேச்சை யெடுத்தார். அவருடன் எல்லாரும் இன்னும் மேலே சென்ருேம். மணி ஆருனது. அரங்கன் தமாஷெல்லாம் போய்விட்டது. இராமண்ணு, "அடே நான் பிள்ளை குட்டிக்காரன், புலி நரி வந்து பிடுங்கினுல் என்னடா செய்வது? அகஸ்தியருமாச்சு, புலஸ்தியருமாச்சு, வா திரும்பி, பைத்தியமே!" என்று என்னைப் பிடித்திழுத்தான். 'உயிர் போனுலும் அகஸ்தியருடன் என் குறைகளைச் சொல்லாமல் வரமாட்டேன்' என்றேன். அச் சமயம், ஒரு குகைமுன்னே நின்றுகொண்டிருந்தோம்.

குகைக்குள் இருந்து ஒரு கம்பீரமான சத்தம் வந்தது. "புலி" என்றுன் ரங்கன். "சிங்கம்" என்றுன் சிவம். "வேங்கை" என்றுன் இராமண்ணு. "அகஸ்தியர்" என்றேன் நான்...எங்களுடன் இருந்த கிழட்டுச் சாமியார் தைரியமாக உள்ளே சென்று, "வாருங்கள்" என்ருர். நான் மட்டுமே தைரியமாகச் சென்றேன். உள்ளே சந்தனக்கட்டை யெரிந்தது. அதன்முன் ஒரு முனிவர் நிஷ்டையிலிருந்தார். ஆள் கட்டுக் குட்டென்றிருந்தார். தாடி வயிற்றைத் தொட்டது. பெரிய கண்களைத் திறந்து அவர் என்னை நோக்கிஞர்.

நான் "வணக்கம், அகத்தியரே வணக்கம், வணக்கம்; தமிழைக் காப்பாற்ற வேண்டும், எந்தமிழருக்குப் புத்தி சொல்லவேண்டும்..." என்று விழுந்து விழுந்து கும்பிட்டேன். முனிவர் புன்னகை பூத்தார்; எனது நெற்றியில் திருநீறிட்டார்; என் மனமறிந்து அவரே பேசத்தொடங்கிஞர். "உன்னை யறிந்தோம், அன்பா! தமிழுக்கு நல்ல காலம் வந்தது. நாம் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்த்து வந்தோம். காலநிலை யறிந்தோம். எம் குருநாதர் அகஸ்தியரிடம் எல்லாம் சொன்ஞேம். அவரும் பிரயாண குளிகை சாப்பிட்டு, யார் கண்ணிலும் தட்டுப்படாமல் உலக சஞ்சாரம் செய்கிருர். ஐரோப்பா, அமெரிக்காவுக்கும் சென்று யந்திரசாத்திரங்களும் அறிந்தார். இப்போது கைலையில் சிவபெருமானிடம் தமிழர் உய்விற்காக யோசனை கேட்டுக்கொண்டிருக்கிருர். தற்காலம் வழங்கும் புதுத்தமிழையும் கற்றுக்கொண்டு, இங்கே அடுத்த மாதம் வருவார். அப்போது தங்கள் முறையீடுகளைக் கவனிப்பார்" என்றெல்லாம் நீளப் பேசிஞர். "முனிவரே, எனக்கு ஒரு வரம் கொடுக்க வேண்டும். அகஸ்தியர் சித்தர்; ஒரு குளிகை வாயில் போட்டுக்கொண்டு கண்ணைமூடித் திறக்குமுன்னே அவர் திருச்சியில் இருப்பார். திருச்சியில் தமிழருக்காகவே ரேடியோ நிலையம்

வைத்திருக்கிறார்கள். அதில் எனது நண்பர்கள் வேலை பார்க்கிறார்கள். "மாதம் ஒரு பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்கிறோம். அகஸ்திய முனிவர் தோன்றியோ மறைந்தோ அதில் வந்து தமிழருக்குப் பேசவேண்டும்" என்றேன். "**தந்தோம் வரம்!**" என்று திருநீறு கொடுத்து யோக தண்டத்தால் இலேசாக என் மண்டையில் தட்டி ஆசீர் வதித்தார். இராமண்ணாவையும், ரங்கனையும், சிவனையும் கூப்பிட்டு விவரம் சொன்னேன். அவர்களும் முதலில் 'கப்ஸா' என்று வாதாடிப் பிறகு முனிவர் உரையை நம்பினர். "தமிழையீன்ற தவமுனியே, தந்தைதான் இன்று தமிழ்மக்களைக் காக்கவேண்டும். வேறு யார் சொன்னாலும் அவர்கள் கேளார்கள். பிரதிமாதம் முதல் தேதி, தாங்கள் குளிகை சாப்பிட்டுக் ககனமார்க்கத்தில் வந்து, எமது திருச்சி ரேடியோவில் இரவு 8 மணிக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுகிறோம்—அன்பர் வணக்கம்" என்று சீட்டெழுதி வைத்து நாங்கள் திரும்பினோம்.

எ

"அகஸ்தியர் தமிழர் முன்னேற்ற விஷயமாகப் பேசுவார்" என்று எங்கும் விளம்பரங்கள் பறந்தன. தமிழ்நாடு முழுதும் இதே பேச்சு..."யாரோ கட்டிவிட்டிருக்கிறான்" என்பர் சிலர். "அட இது மூடக்கொள்கையடா" என்பர் சிலர். சிலர், "அடுத்த மாதம் பார்ப்போமே இந்தப் புருடாவை" என்பர்.

எப்படியாவது இருக்கட்டும். உலகம் பலவிதம். ஆவணி முதல் தேதி—இரவு ஏழுமணி...ரேடியோ நிலயத்தில் ஒரு விறுவிறுப்பு உண்டானது. யாரோ மைக்கினருகே நின்றது போலுணர்ந்தனர். 'டிங் டிங்,' என்றொரு சத்தம்; பிறகு 'கிள் கிள்' என்று ஐந்து கிள்; பிறகு 'கண கண' என்றொரு மணியடித்தது. 'ஓம் சிவம் சிவம்' என்றோர் ஒலி பிறந்தது. எல்லாரும் வியந்தார்கள். ஒரு நிமிஷங் கழித்து..."அருமைத் தமிழர், அருமைத்

தமிழீர் !'' என்றோர் ஒலி கேட்டது. 'கொஞ்சம் இந்தக் காலத் தமிழில் பேச வேண்டும்' என்று வெளியேயிருந்து நான் கூவினேன்.

"நாம் அகஸ்தியர்; தமிழுக்கு மீண்டும் உயிர் கொடுக்க இப்படி அருவாக நின்று பேசுகிறோம்...'' என்று கேட்டது. "என்னப்பனே பேசு...என் மனங்குளிரப் பேசு!'' என்றேன் வெளியேயிருந்து. "அடுத்த மாதம் முதல் சொற்பொழிவு நிகழ்த்துவோம். ஒற்றுமையா யிருந்து தமிழுணர்வுடன் கேளுங்கள்!'' என்று ஒலி மறைந்தது. அகஸ்தியரும் மறைந்தார். ஒரு மாதத்தில் ரேடியோக் கம்பெனிகளுக்கு ஏராளமான இலாபந்தான்.

---

## 2. போகர் செய்த கெடுபிடி

**கொஞ்சம் முன்னுரை:—**

சென்ற மாதம், அகஸ்தியர் பேசி மறைந்தார் :

அவர் பேசியது நாலே வார்த்தை. அஃது ஒரு கலகமாக வளர்ந்தது. வந்தவர் அகஸ்தியரா நாரதரா என்றுகூடச் சந்தேகித்தேன். ஏற்கெனவே தமிழுலகம் சதா கலகமா யிருக்கிறது — நாரதர் வேறே வந்து விட்டாரே என்று ஏங்கினேன். மறுநாளே என்னை ஒரு வாய்வெடிப் பட்டாளம் சூழ்ந்து கொண்டது.

—அடே பாட்டையா !

—ஐயோ ஏன் ?

—சொல், அகஸ்தியரை எங்கே பிடித்தாய்? இதெல்லாம் உன் கப்ஸா !

—இதெல்லாம் பகுத்தறிவுக் கெட்டாது. ஓமாம் சிவமாம்! ரேடியோ என்ன சைவமடமா ? இது பகுத்தறிவால் அமைந்த நுண்பொறியாயிற்றே. அதில் அறிஞர் அறியாத ஒரு சொல்லை எங்ஙனம் சொன்னான் அந்தப் பார்ப்பனக் குள்ளன் ?

—சிவமாம்—சர்வம் விஷ்ணுமயம் ஜகத் அன்றே!
—சை, சர்வம் காதல் மயம் ஜகத் என்று சொல்! காதலில்லாவிட்டால் நீர் நான் இந்தப் பாட்டையா முதல் அந்த அகஸ்தியர் வரையில் யார் இருக்க முடியும்?
—அதெல்லாம் இருக்கட்டும். "நாம் அகஸ்தியர்" என்றீரே; என்ன இறுமாப்பு இந்தக் குமரிக்கண்டப் பேர்வழிக்கு! இந்தப் பொதுவுடைமைக் காலத்தில் தோழர் அகஸ்தியர் இப்படிச் சொல்லலாமா?
—அட பாட்டையா, அதெல்லாம் இருக்கட்டும்; நாங்கள் மறுமலர்ச்சிக்காரர்—எளிய நடைவீரர். உன் அகஸ்தியர் தொல்காப்பிய நடையில் "இமிழ்கடல் ஞாலத்து" என்றீரோ, அத்தனை பேருக்கும் நீ தான் அமிர்தாஞ்சனம் வாங்கித் தரவேண்டும்.
—அது கிடக்கிறது; "கேளப்பா, நாளப்பா" என்று பழைய மாமூலில் பாட்டுக் கிளப்பினீரோ உன் அகஸ்தியரைச் சும்மா விடமாட்டேன். இலக்கணம் கிலக்கணமெல்லாம் பொதியமலையிலேயே புதைத்து வந்து, குளத்தங்கரை நடை, சந்தைக்கடை நடை, ஜட்காவண்டி நடை, ரிக்ஷா நடையில் பேச வேண்டும்; தெரியுமா......
—அட பாட்டையா, உன் அகஸ்தியர், காலத்திற்குரிய விஷயங்களைப் பேச வேண்டும். ஏதாவது வேதாந்தம் சித்தாந்தம், சுத்தாந்தம், பித்தாந்தம் ஆரம்பித்தாரோ, உன் சிண்டைப்பிடித்துத் தூக்கி உச்சிப் பிள்ளையார் கோயிலிலிருந்து தெப்பக்குளத்தில் வீசுவேன்...கபர்தார்!

இந்த மாதிரி எனக்கு நாலு பக்கமும் இடி; பத்திரிகைக்காரர் வேறே தலையங்கத்தில் என் மண்டையை உருட்டினர். எனக்கு உதறலெடுத்து விட்டது. பகவான் அகஸ்தியரைத் தியானம் பண்ணினேன். "பகவானே நீர் அங்குஷ்டப் பிரமாணம்; ரேடியோவுக்

குள்ளே நுழைந்துகூட ஓடிப்போவீர்; ஏதாவது அசம்பா விதமாக நடந்தால், என்னை நேயர் சும்மாவிட மாட்டார்; எனக்குத் தைரியம் சொல்ல வேண்டும்" என்று முறையிட்ட வாக்கில் குறட்டை விட்டேன். கனவு, கனவு. தமிழரெல்லாம் பாணுத்தடியும் பத்திரிகைச் சுருளும் எடுத்து என்னை மொத்துவது போலிருந்தது; வாயம்புகளுக்குக் கணக்கில்லை. "ஔா ஔா ஔா ஔா" என்று நான் உளறிக்கொண்டேன். மணி மூன்று; முனிவரொருவர் கனவில் தோன்றினர். "யார்" என்றேன்.

"அப்பனே அஞ்சாதே கவலை வேண்டாம்;
அகஸ்தியர்யாம் பொதிகைமலை அகத்திலுள்ளோம்."

என்று அகஸ்தியர் ஆசிரிய விருத்தத்தில் பிடித்தார். நான் ஆயிரந்தடவை விழுந்து விழுந்து கும்பிட்டேன்.

"யாது வரம் வேண்டுகிருய்? போதும் அன்பா" என்ருர் மகானுபாவர். "பகவானே நாளை ரேடியோவில் இப்படி எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் ஆரம்பிக்காமல் கிருபை செய்யவேண்டும். மற்ருென்று; தொல்காப்பிய நடையில் சொற்பொழிந்தால், இந்தக்காலம் சங்கநடை அக்கினியாஸ்திரம் போலிருக்கும். தமிழரில் நூற்றுக்குப் பத்துப் பேரே எழுத்தறிந்தவர். அவர்களுள் இலக்கணந் தெரிந்தவர் ஆயிரத்திற்கு ஒருவர்கூட இல்லை. இலக்கணத்தைக்கூடப் பாட்டாகத் திட்டி விட்டார்கள் நம் பழம்புலவர்கள். பேச்சு நடையிலேயே பகவான் திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்று மீண்டும் தெண்டனிட்டேன். "அன்பா தொல்காப்பியருக்கும் நமக்கும் ஆகாது என்பதை அறியாயோ? நமது இலக்கணம் மறைந்தது. இன்று உலகெல்லாம் சுற்றிக் காலத்திற்கேற்ற கல்வியறிவும் பெற்ருேம். நாம் இன்று புது நடையில் எளிய நடையில் பேசுவோம். பார் நாளை..."

"கேளப்பா நாமொன்று கிளத்த வந்தோம்,
கிளர்ந்தின்று புதியதமிழ் ஆக்கவந்தோம்,
நாளைப்பார் நாம்கொண்ட கருத்தை யெல்லாம்
நன்ருகத் தமிழகமே நவிலுவோமே!"...

சிவமயம்! என்று மறைந்தார் அகத்தியர்.

"பகவானே, மற்ருெரு விண்ணப்பம். சிவம், விஷ்ணு என்றும் பேசவேண்டாம்; பகுத்தறிவுத் தோழர் என் மண்டையை உடைப்பர்" என்று கூவினேன். "தமிழ் வாழ்க!" என்ருெரு சத்தம் கேட்டது. நானும் நிம்மதியாக உறங்கினேன்.

மறுநாள் இரவு 8-மணி; ரேடியோ நிலயம் வியந்து நிற்கிறது. இராமண்ணு, "ஏண்டா பாட்டையா, உன் அகஸ்தியர் எங்கே!" என்று மிரட்டினுன். நான் கொஞ்சம் ஜபம் செய்தேன். ரேடியோவிற்கருகே ஒரு விறுவிறுப்புண்டானது; ஒளி யொன்று தோன்றியது; பேச்சுத் தொடங்கியது; என் பீடிகைத் தொல்லேயும் ஒழிந்தது. இனி எல்லாம் அகஸ்தியர் பேச்சுத்தான்.

## க. பூர்வ கதை

"எனதருமைத் தமிழீர்,

ஒரு பாட்டனுர் தமது பேரன்மாருடன் பேசுவது போலே, அன்புடன் உங்களுக்கு நல்ல வார்த்தை சொல்லுகிறேன். நான் திரேதாயுகத் தமிழ் பேசுவேனென்று பயப்படாதீர்கள். காலத்திற்கேற்ற தமிழை எளிய நடையிற் பேசுவேன். அக்காலம், தமிழும் வடமொழியும் தேர்ந்து பல நூல்களைச் செய்தேன். எனது நூல்களை யெல்லாம் கடல் கொண்டுபோயிற்று. இப்போது என் பெயரால் எத்தனையோ சில்லரைக்கடைகள் புத்தகங்கள் விற்கின்றன; அவற்றையெல்லாம் மன்னித்து விடுகிறேன். இப்போது வடமொழி தென்மொழியுடன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், லத்தீன், கிரீக், பார்ஸி, ஹிந்துஸ்தானி, வங்காளி, மராதி, குஜராத்தி, தெலுங்கு, கன்ன

டம், மலையாளம், ஜப்பானியம் முதலிய பல மொழிகளைக் கற்று அவ்வவற்றிலுள்ள சாத்திரங்களையும் படித்துத் தேர்ந்திருக்கிறேன்.

நான் சத்தியயுகப் பேர்வழி; உங்களை மீண்டும் சத்திய யுகத்திற்கு நடத்தவே வந்திருக்கிறேன். நான் குமரிக் கண்டத்தில் வசித்திருக்கிறேன்; அப்போது தமிழுலகம் ஆசியாக்கண்டம்போலப் பரந்து விரிந்திருந்தது. இக்காலம் ஆங்கிலம் வழங்குவதுபோல அக்காலம் தனித் தமிழ் எங்கும் வழங்கியது. சிவபெருமானும் முருகனும் தமிழைப் போற்றினர். அப்போது நான் எண்ணிறந்த நூல்களை இயற்றிக் குவித்திருந்தேன். அரியபெரிய இலக்கணம், இலக்கியங்கள், இசைநூல்கள், வைத்தியநூல்கள், மூலிகைநூல்கள், 64 கலைநூல்கள், யோகசாத்திரங்கள் எல்லாம் ஏராளமாகச் செய்து எனது மாணவருக்கும் பயிற்றினேன். குமரிக்கண்டம் முழுதும் எனது ஏட்டுச்சுவடிகளைப் படித்தது. நான் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களுக்கும் சென்றதுண்டு. ஆனால் அப்போது அக்கண்டங்கள் வெறும் பொட்டலாயிருந்தன. கலியுகத்திலேதான் அங்கே ஜனசஞ்சாரம் ஏற்பட்டது. அக்கண்டங்களுக்கு இப்போதுள்ள பேர்கூட அப்போதில்லை. ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களில் நமது தமிழரே யிருந்தனர். அக்காலம் தமிழ்நாடே உயிருள்ள உலகமாக விளங்கியது. ஒரு நாள் குமரிக்கண்டத்தை இந்து மகாசமுத்திரம் உண்டு தீர்த்தது. அக்காட்சி இன்னும் எனது நெஞ்சில் உறுத்துகிறது. ஊர் ஊராகக் கடலில் மூழ்கின. எண்ணிறந்த வீரர் ஆர்கலியில் மறைந்தனர். எனது கலைச்செல்வங்களெல்லாம் கடலுக்கு இரையாயின. எனக்குக் கோபம் வந்துவிட்டது. 'இரு கடல்-பகாசுரா' என்று குடங்கையால் மூன்று தடவை எடுத்துக் குடித்துக் கடலை வற்றடித்தேன்! அதனடியில் நானிழந்த தமிழ் நூல்களைத் தேடினேன்.

கோடிக்கணக்கான தமிழர் உடல்களுடன் நூல்களும் அழிந்தொழிந்து சேருயின. என்ன பரிதாபம்! நான் சிவனிடம் ஓடினேன். "அஞ்சேல் முனிவ, நமது அருந் தமிழ் மீண்டும் செழிக்கும்; பொதிகையிலூன்றித் தமிழ்க் கற்பகத்தை மீண்டும் வளர்ப்பாயாக!" என்றருளினுன் சிவபிரான். நான் பொதியமலையில் நீண்ட தவம் செய்து, மீண்டும் வடமொழியிலும் தென்மொழியிலும் பல நூல் களை எழுதினேன்; பல சீடரைப் பயிற்றினேன். அக் காலம் இராமபிரான் என்னைப் பார்த்தார். அவருக்கு நான் மந்திரக்கணைகள் அளித்தேன்; பிறகு **ஆதித்ய ஹ்ருதயம்** உபதேசித்தேன். இராமாயணத்தைப் புரட் டிப் பாருங்கள்; உண்மை விளங்கும். இராமர், இராமேஸ் வரத்தில் சிவவணக்கம் செய்து, விமானத்திற் செல்லும் போது, எனது பொதியமலை ஆசிரமத்தைச் சீதைக்குக் காட்டினுர். துவாபரயுகத்தில் நான் பதினெட்டு நாள் பாரத யுத்தமும் பார்த்தேன். நமது பாண்டிய மன்னனே போர் வீரருக்குச் சோறளித்தான்; அதன் பிறகு நாட்டில் தருமராஜ்யம் ஏற்படுமென்று எதிர்பார்த்தேன். கண்ண னும் பாண்டவரும் சொற்பகாலத்தில் விண்ணேறினர். கலியுகம் வந்து விட்டது. எனது நண்பர் போகருடன் உலக யாத்திரை செய்தேன். போகர் ஐரோப்பா கண்டத் தில் தங்கினுர். நான் சிவபிரானிடம் சென்று, "கலி வந்துவிட்டதே, என்ன செய்வது?" என்று கேட்டேன். "சில காலம் நமது நாடும், தமிழும் மங்கும்; அன்னிய மோகம் பிடித்து நம்மவர் தாயையும், தாய்மொழியையும் மறப்பர்; பிறகு விழித்துக்கொள்வர்; அப்போது, நீ காலத்திற்கேற்ற கோலம் பூண்டு, மறுபடியும் தமிழ் வாழப் பணி செய்" என்றருளினுர். சிவனைக் கும்பிட்டுப் பொதியமலைக்கு வந்தேன். எனது நூல்கள் பல மீண்டும் மறைந்தன. அக்காலம் என் சீடன் தொல்காப்பியன் இலக்கணம் செய்தான். அதுவே இன்று மிகப் பழைய

தமிழ் நூல். நான் சில காலம் தமிழ்ச் சங்கத்தில் வீற்றிருந்து பணிபுரிந்தேன்; அக்கால மூவேந்தர் வீரத்தையும், அறிவாற்றல்களையும் நான் நேராகக் கண்டேன்; கடைச்சங்கம் கலைந்த பிறகு, நானும் தவம்புரியச் சென்றேன்; நீண்ட காலம் தவம் புரிந்தபின் ஒரு நாள் குற்றுலம் வந்தேன். அங்கே திருஞானசம்பந்தர் இனிய தேவாரம் பாடினர்; திருத்தொண்டர் வரலாறுகளையும் பாசுரங்களையும் கேட்டு மகிழ்ந்தேன்! அப்பாசுரங்களில் முதன்மையானவற்றை ஏட்டிலெழுதித் தமிழருக்களித்தேன். திருத்தொண்டர் பணியால் தமிழும் சமயமும் முன்னேறுமெனக் கருதி, நான் பொதிகைக் குகையில் துரியாதீத நிலையில் ஆழ்ந்துவிட்டேன். மௌனம், மௌனம், மௌனம், நீண்ட மௌனம்!

## உ. போகர் கெடுபிடி

ஒரு நாள் யாரோ என்னைப்பிடித்து குலுக்கி, என் சமாதியைக் கலைத்தார். கண்ணைத் திறந்தேன்; எதிரே புதியாரொருவர் இருந்தார்; பூட்ஸ், கால்சராய், சட்டை, தொப்பி மாட்டியிருந்தார்; கையில் கடிகாரம் கட்டியிருந்தார். இதென்ன புதுமை என்று வியந்தேன்! ஆள் என்னைப் பார்த்து கடகடவெனச் சிரித்தார்.

—நீர் யார்?

—ஹ ஹ ஹ ஹ—என்னைத் தெரியவில்லையா? நானே போகர்; உமது நண்பர்; என்னை **ஃபோக் துரை** என்பர்.

—ஆ, போகமுனிவரா? இதென்ன கோலம்? பெயரில் ஏன் இவ்வளவு வக்கிரம்?

—இதுதான் இக்கால நாகரிகம்!

—இதென்ன காலம்?

—இது இருபதாவது நூற்றுண்டு; நவநாகரிக காலம்.

—அப்படியா? இந்தச் சட்டை தொப்பி யெல்லாம் எங்கே சம்பாதித்தீர்? எங்கிருந்து வருகிறீர்?

—எல்லாம் எனது மாணவர் செய்து கொடுத்தது; நான் ஐரோப்பாவிலிருந்து வருகிறேன்.
—ஐரோப்பாவா? அஃதென்ன நாடு?
—ஹ ஹ ஹ—நன்ருய்த் தூங்கினீர்! உலகம் எவ்வளவோ முன்னேறி விட்டது! இப்போது நீர் சொல்வதைக் கேட்டால் சிறு பிள்ளைகூடச் சிரிக்கும். அறிவு அவ்வளவு முற்றிப்போனது. முன்னே நாம் யவனத்திற்குப் போனது நினைப்பிருக்கிறதா?
—ஆம் போனேம்; அங்கே திராய் வீரரையும் செந்தோர் (Centaur) முனிவரையும் பார்த்தோம்.
—அந்த யவனத்தை இன்று கிரேக்கு ரோம் என்பர். பிறகு ஜன்யு தேசத்திற்கும் போனேமே?
—ஆம், அங்கே காட்டுமிராண்டிகள் இருந்தனர்.
—அதுவே இப்போது ஜெர்மனி. இன்று அதைப் பார்த்தால் சொக்கிப் போவீர். சரி, பிருகு தேசத்திற்குப் போனேமே, நினைப்பிருக்கிறதா?
—ஆம், அங்கே இலை தழைகளையே கட்டித்திரிந்த மனிதப் பிராணிகளைக் கண்டோம். அவர்கள் பச்சையூனைத் தின்றனர். அங்கே நிலக்கரியும் இரும்பும் தவிர வேறில்லை. சிறுசிறு புதர்களில் நரிகள் ஊளையிடும். வேெருன்றும் விசேஷமில்லை.
—அகோ, கேளீர் அகத்தியமுனிவரே, அந்த பிருகு நாடு தான் இன்று பிருத்தனை விளங்குகிறது. இன்று அதைப் பார்த்தால் திகைத்து நிற்பீர். அந்த பிருத்தனே இன்று இந்தியாவை ஆளுகிறது.
—இந்தியாவா? அஃதெங்கே யிருக்கிறது?
—அதுகூடத் தெரியாதா? நமது பாரதபூமிதான் இந்தியா!
—யார் அப்படிப் பேரை மாற்றியது?
—காலம்...
—நான் சமாதியில் ஆழ்ந்தபோது, தக்ஷணபாரதத்தை

மூவேந்தர் ஆண்டனர்; வடக்கிலும் தமிழ்க்கொடி பறந்ததே!

—நல்ல சமாதியில் இருந்தீர்! அந்தக்காலம் மலையேறிப் புல் மூண்டு போனதையா. நமது நாட்டை இஸ்லாமியர் ஆண்டனர்; இப்போது இங்கிலீஷ் ராஜ்யம் நடக்கிறது.

—இங்கிலீஷா?...அதென்ன சொல்லையா?

—பிருத்தனின் ஒரு பகுதி இங்கிலாந்து; அதிலுள்ளவர் இங்கிலீஷ்காரர். பிறகு சொல்லுகிறேன்; வந்த காரியம் நடக்கட்டும்.

—நீர் திடுதிப்பென்று இங்கே எப்படி வந்தீர்? குளிகை சாப்பிட்டா?

குளிகையெல்லாம் உமது காலம்; நான் ஆகாசக் கப்பலில் வந்தேன்.

—புஷ்பக விமானத்திலா? இராமபிரான் இலங்காபுரியிலிருந்து வந்த விமானத்தை உம்மிடம் தந்தானோ?

—அந்த விமானமெல்லாம் இராமருடன் போய்விட்டது. இப்போது இலட்சக்கணக்கான விமானங்கள் விதவிதமாகப் பறக்கின்றன. இரயில், மோட்டார், டிராம், பெரியபெரிய கப்பல்கள், ஆகாசக் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், தந்தி, ஆகாசத்தந்தி, வானொலி முதலிய அற்புதங்கள் அமளிபடுகின்றன; நீர் குகையில் அடைபட்டுக் கிடக்கிறீரே! வாருங்காணும், யந்திரவுலகைப் பாரும்.

—அதிசயமாயிருக்கிறதே! இந்த யந்திரங்களெல்லாம் யார் செய்தவை? பிரம்மாவா, மயனா?

—ஹ ஹ, நானே இவற்றிற்கு வழி காட்டினேன்; மனித மூளையைத் தூண்டினேன்; அது "ஸயன்ஸ்" (*Science*) ஞானத்தால் இப்படியெல்லாம் செய்கிறது.

—இருக்கட்டும்; முன்னே நீர் தனித்தமிழ் ஆசிரிய விருத்தத்திலன்றோ பேசினீர்; இப்போது உமது பேச்சே புதிதாயிருக்கிறதே!

—ஆசிரிய விருத்தம் நீட்டிநெளிக்க இதுகாலமில்லை; அப்படிப் பேசினால் குறட்டைதான் பதில் வரும். இது அறிவும், தெளிவும், சுருக்கவிளக்கமும் கொண்டு பேசுங்காலம்...வந்து பாரும்.

—இப்படியே வரவா?

—சை; கூடாது: உம்மைக் கண்டால் காட்சிசாலையில் கொண்டு வைத்து 'லிலிபுட்' என்று எழுதி ஒட்டுவர்! உமது குள்ளமும் மரவுரியும் தாடியும் சடையும் பரிகாசத்திற்கு இடமாகும். கரிமா சித்தியால் உடம்பை நீட்டும், பெருக்கும், உமது வேஷத்தைக் கழற்றும்; உச்சி முதல் உள்ளங்கால் வரையில், உம்மைப் புது மோஸ்தரில் சிங்காரிக்கிறேன்; பிறகு பாரும்!

"நீர் என்னவேண்டுமானாலும் செய்யும்" என்று நான் உருவைப் பெருக்கிக்கொண்டு சமாதியில் ஆழ்ந்தேன். தலையில்ஏதோ அழுத்தியது; கண்ணைத் திறந்து பார்த்தேன். என்ன கோலம்? உடம்பு முழுதும் தம்புராவுக்கு உறை போட்டதுபோல் அங்கி; தலையில் ஒரு கூடை, இல்லை தொப்பி! தாடி ஜடை போய்விட்டது; நறுக்கு மீசைதான் இருந்தது! தொப்பியைத் தூக்கிப் பார்த்தேன் ... ஐயோ, இதென்ன போகரே! தலை வழித்து ஐங்குடுமி வைத்தீரே? என்னை அவமானப்படுத்தவா இப்படிச் செய்தீர்?...உம்...என்றேன்;...."சை; சும்மாயிரும்...இது தான்...நாகரிகம் (*Fashion*)" என்றார் போகர். "அட சிகையில்லாமல் எப்படி பிராமணன் சந்தி மாத்யானம் பண்ணுவது?" என்று கூவினேன்.

—"வந்துபாரும்... சிகையில்லாத மூளை செய்யும் ஸயன்ஸ் அற்புதங்களை!" என்று என்னை ஒரே தூக்காகக் கிளப்பி ஆகாசக்கப்பலில் வைத்தார் போகர். "டுர் பட பட" வென்றது....மூன்றே நாள்....ஒரு தீவில் கப்பல் இறங்கியது.

—இதென்ன தீவு?

—பிரித்தன் (*Britain*)

—இதென்ன ஊர்?

—லண்டன் (*London*).

[ தொடர்ச்சி அடுத்த நடவை ]

## 3. அகஸ்தியர் "அகஸ்டஸ்" ஆனார்!

இதோ குளிகை சாப்பிட்டு அகஸ்தியர் வந்து விடுவார். அதற்குள் ஒரு பீடிகை: நான் விட்டாலும் அது என்னை விடமாட்டேனென்கிறது. மஹா ஜனங்கள் அதை என் மேல் துரத்திவிட்டார்கள். இப்போது விஷவாயுவுக்கு பயந்து பூச்சாண்டி மாதிரி முகமூடி போட்டுக் கொள்கிறார்களல்லவா? நான் சென்ற மாதம் கண்மூடி போட்டுக் கொண்டேன். ஏன்? **மிளகாய்ப் பொடிக்குப்** பயந்து! கேளுங்கள்: சென்ற மாதம் அகஸ்தியர் பேசி அந்தர்த்தானமானார்; ஒரு சநாதனப் புயல் என்னைச் சூழ்ந்து கொண்டது. கண்ணை இறுக்கி மூடிக்கொண்டேன்; காதில் காரமான சொல்லம்புகள் தைத்தன.

—அடே பாட்டையா, நீ நாசமாய்ப்போக...

—ஐயோ, சபிக்காதீர்கள்!

—உன்னை ஜாதிப்ரஷ்டம் பண்ணுகிறோம்.

—நான் அப்பாவி; ஒரு மூலையிலே தமிழ் ஜபம் பண்ணிக் கொண்டிருக்கிறேன்; என் மேல் ஏன் இவ்வளவு காரம்?

—உன் தமிழ் குட்டிச்சுவராய்ப் போக! மகரிஷி அகஸ்தியருக்கு, ஃபோக முனிவர் தலை வழித்தாராம், முக க்ஷவரம் பண்ணினாராம், சட்டை தொப்பி மாட்டினாராம்; இரண்டு முனிவரும் ஆகாசக்கப்பலில் மிலேச்ச தேசத்திற்குப் போனார்களாம். அடா மனுத்ரோகி! ஹா—ஹூம் தாம் தூம்!

—பகவான் அகஸ்தியர் சீமைக்குப் போனால் நானென்ன செய்வேன்?

—உன்னாலேதான் இந்த அநாசாரத்தைக் கேட்டோம்?

—ரேடியோ வந்து உங்கள் காதில் பேசினால் நானென்ன செய்வேன்?

—ரேடியோ தலையிலே இடிவிழ! பயலே ஒரு **படி பஞ்ச கவ்யம்** சாப்பிட்டு, சங்கற்பம் சொல்லிப் பிராயச்சித்தம் செய்து கொள்.

—அதை அகஸ்தியருக்குத்தான் தரவேண்டும்; அவர்தாமே சீமைக்குப் போனவர், போனதாகச் சொன்னவர். அவர் உங்கள் கண்ணுக்குத் தட்டுப்படமாட்டார். அவர் பேச்சைப் பரப்பிய ரேடியோவுக்குப் பஞ்சகவ்ய அபிஷேகம் செய்யுங்களேன்!

—நீ ஏன் மஹரிஷியை ரேடியோ நிலயத்திற்கு அழைத்தாய்?

—ரேடியோ திருக்கோயிலில்லே; பகவான் தீண்டாதார் அல்லர்; மிளகாய்ப்பொடி தூவும் சண்டித்தனமும் இங்கேயில்லே. மஹரிஷி விரும்பினார்; பொது ஜனங்கள் விரும்பினர்; ரேடியோ அதிகாரிகள் வரவேற்றனர்; காரியம் நடக்கிறது.

—எங்களைப் பேசவிட்டால் சரியான பதில் சொல்லுவோம். மஹரிஷி சட்டை தொப்பி மாட்டி அன்னிய தேசத்திற்குப் போக, எந்த ஸ்மிருதி ஆதாரம் என்று கேட்போம்.

—ஏன்? நீங்களும் பெருமாள் சந்நிதியில் ஒரு ஒலிக்கருவியை இணைத்து வெளுத்து வாங்கலாமே; என்மேல் ஏன் பாய்கிறீர்கள்?

—எல்லாம் உன் திரிசமன்.........ப்ரஷ்டா! அஹோ பத மஹத் பாபம்!

## கனவில் காட்சி!

சநாதனிகள் சென்றதும் என் பந்துக்கள் புலியாய்ப் பிடித்துக்கொண்டு, "ஏண்டா, உனக்கிந்த ஊர் வம்பெல்லாம்?" என்று என்னைத் துளைத்தனர். நான் எல்லா வசவையும் அகஸ்திய பகவானுக்கே அர்ப்பணம் பண்ணி, கண்ணுடன் காதையும் மூடிக்கொண்டு அப்படியே தூங்கிப்போனேன். வந்தார் கனவில் பகவான்:

காலத்திற் கேற்றதொரு கோலங்கொண்டோம்;
கண்மூடிப் பேச்சுகளாற் கலங்கமாட்டோம்.
ஞாலத்திற் புதுவாழ்வை நன்கறிந்தோம்;
நாளைக்கேள்; அஞ்சாதே, நலஞ்சொல்வோமே!

என்று முனிவர் மறைந்தார். "பகவானே, உங்களுக்குப் பதிற் சொல்வார்" என்று சநாதனிகளுக்குச் சொன்

னேன். இதோ பகவான் வருகிறார்; ரேடியோவில் பேசப் போகிறார்......... கேளுங்கள். ஆம், பேசுகிறார்:—

## போகபூமி அனுபவங்கள்

**என்** அருமைத்தமிழீர், புதுமைத் தமிழீர்! உங்களுக்கு ஆசிகூறி அகத்தியன் மீண்டும் ஒலிப்பெருக்கியில் பேசுகிறேன்: நான் துரைபோல ஐரோப்பா சென்றது எனது சநாதனக் குழந்தைகளுக்குப் பிடிக்கவில்லை என்றறிந்தேன்; அதற்காக என் பக்தனை அவர்கள் முனிந்தது பிசகு. இந்த மாதிரியான மூடப்பிடிவாதங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. நான் கிருதயுகக் கிழவன்; குமரிக் கண்டப் பேர்வழி; சநாதனம் நூதனம் இரண்டையும் பார்த்தவன். என் பார்வை, இக்காலக்கண்ணாடிப் பார்வையன்று. நான்கு யுகம் வாழ்ந்தும் இன்னும் எனக்கு வெள்ளெழுத்து வரவில்லை; நான் கண்ணாடி இல்லாமல் இயல்பான விழிகளால் உண்மையை அறிகிறேன். முதலில் எனக்கே போகர் காரியம் வியப்பாயிருந்தது; சட்டை மொட்டை இங்கிலீஷ் ஒன்றும் பிடிக்காமலிருந்தது; பிறகு எல்லாம் நன்மைக்கே என்றறிந்தேன்; கராச்சி, ஏடன், ஜிப்ரால்டர், கலே முதலிய நான்கு துறைமுகங்களில் எங்கள் விமானம் நின்றது. ஆங்காங்கே இருபதாம் நூற்றாண்டுப் புதுமைகளையும் காலதருமங்களையும் பார்த்தறிந்தேன்.

அந்தி நேரம்; விமானம் தேம்ஸ் நதியில் இறங்கியது; அதை லாயத்தில் வைக்கச்சென்றார் போகர். நான் என் கிண்டியைத் தூக்கிக்கொண்டு அனுஷ்டானங்களுக்குக் கிளம்பினேன்; சட்டைகளைக் கழற்றிவைத்தேன்; பூணூலைக் காதில் மாட்டிக்கொண்டு அவசர காரியத்தை முடித்தேன்; கிண்டி நீரால் சௌசாதிகள் செய்துகொண்டேன்; கிண்டியை மணல் போட்டுப் பளபளவென்று விளக்கி வைத்தேன்; பிறகு "பாரதவர்ஷே, ஐரோப்பாக் கண்டே. இலண்டன் நகரே, தேம்ஸ் நதிதீரே..." என்றெல்லாம் சங்கற்பம் சொல்லி நீராடினேன்; கட்டுக்கட்டாக விபூதி பூசிக்கொண்டேன்; எனது வாமன ரூபத்துடன் மேற்கே பார்த்துப் பத்மாசனம் போட்டுச் சொரூப தியானத்தில் ஆழ்ந்தேன்; உலகை மறந்தேன்.

"டுஷ் பிஷ், புஸ் புஸ், ஹ ஹ ஹ!" என்று சத்தம் கேட்டது; கண் விழித்தேன்; என்னைச் சுற்றி ஒரு கும்பல்.........பேச்சு, சிரிப்பு! சட்டையும் தொப்பியுமாக ஆஜாநுபாஹுக்கள் நிற்கின்றனர். அங்குஷ்டப் பிரமாணமான என்னை வியந்து கேள்வி கேட்டனர்; பாஷை தெரியவில்லை. விமானத்தில் போகர் "எஸ், நோ, டியர் சார்" என்று சில வார்த்தைகள் சொல்லிக் கொடுத்தார். அவற்றை வைத்துக்கொண்டு ஆசிரியப்பாவில் வெளுத்து வாங்கினேன்:

> அகத்தியர் யாமே, அகத்தியர் யாமே,
> அருந்தமிழ்த் தந்தை அகத்தியர் யாமே!
> வெண்ணு டுள்ளீர் விரும்பிக் கேண்மோ!
> பொதிகையி னின்றும் போக னுடனே
> புதியன காணப் போந்தோம் 'டியர் ஸார்!'
> 'புஸ் டுஷ்' என்று புகல்வீர்
> 'எஸ், நோ' என்றே இனிதுரைப் போமால் .........

"பிக்மி, பிக்மி" என்றார் ஒரு நெடியர். இன்னொரு துரை 'மூசியம், மூசியம்' என்று என்னைத் தூக்கிச் சட்டைப் பைக்குள் திணிக்கப்போனார். அவர் இலண்டன் காட்சி சாலைக்கு என்னை விற்க நினைத்தாரென்று பிறகே அறிந்தேன். உடனே என் வாமன வடிவை மறைத்து, யோக சித்தியால் நெடியனானேன்.........பிழைத்தேன்! அதற்குள் நல்ல வேளையாய் போகரும் வந்தார். "ஹலோ மிஸ்டர் ஃபோக்! இதென்ன விநோத மிருகம்?" என்று கேட்டார். எல்லாரும் அவர்பக்கம் திரும்பிக் கேட்டனர்; சிரித்தனர். போகர் "டஷ் புஸ், அகஸ்டஸ்" என்று ஏதோ சமாதானம் சொல்லி அவர்களை அனுப்பினார். எங்களுக்குள் ஒரு சிறிய சம்பாஷணை நடந்தது.

> "புகலக் கேளாய் புகலக் கேளாய்
> போக முனியே புகலக் கேளாய்"

—ஷட்டப் (*Shut up*) போதும் பாட்டு; முதலில் சட்டை மாட்டிக் கொள்ளும். நீர் ஐரோப்பியரிடையே இருக்கிறீர்; இங்கே ஆடையழகே ஆளுக்கழகு; ஒரு பொத்தான் குறைந்தால் இவர் கேலி செய்வர். எல்லாம் 'டிப்டோ' வாயிருக்க வேண்டும். இங்கே ஆளைப்பார்த்தே அறிவை மதிப்பர்; உமது வாமன

சொரூபத்தைக் காட்டாதேயும். மற்றொன்று, என்னை இனி மிஸ்டர் ஃபோக் என்றழைக்க வேண்டும். உமது பெயரைக்கேட்டால் மிஸ்டர் அகஸ்டஸ் என்னல் வேண்டும்.

**புகழ்பெற்ற போகமுனி ஃபோக்கா னுக்கால்**

**அகஸ்தியர் யாம் அகஸ்டஸெனப் படுவ தேனோ?**

—போதுங்காணும் பழம் பாட்டு. சாதாரணமாகப் பேசும். தொல்கதிர்க்கிழாரைக் கேட்டால், அகஸ்தியர் என்ற பெயரே தகர இகரமும் யகரமும் கெட்டு, டகரம் தோன்றி அகஸ்டஸ் ஆனது என்று காட்டுவார். அவர் ஒரு தனித்தமிழ்ப் பேரகராதி தயாரித்திருக்கிறார். "எவர் எம்மொழி சொன்னாலும் அம்மொழி தமிழெனா மொழிவோம். உலக மொழிகளெல்லாம் தமிழிலிருந்தே உண்டானவை" என்பது அவர் முழக்கம். ஒரு நாள் அவரையும் காண்போம். இங்கே இப்போது நான் சொல்லுகிறபடி செய்ய வேண்டும்.

—சரி; வேறு வழியில்லை!

—ஏறும் மோட்டாரிலே.

—மோட்டாரா?

—இதோ இந்த வண்டிக்குப் பெயர் மோட்டார்! இதைப் பெட்ரோல் விட்டு ஓட்டலாம்.

—பெட்ரோலா?

—ஆமாங்காணும், ஒரு வகை மண்ணெண்ணெய்.

—மண்ணெண்ணெயா? அது இந்திரஜித்து ஆபிசார ஹோமம் பண்ணினதல்லவா? நாம் விளக்கெண்ணெய் அல்லவா எரிக்க வேண்டும்?

—விளக்கெண்ணெய்ப் பேச்சே இங்குதவாது...ஏறும் வண்டியில்; பாரும் மின்சார ஜோதியை......!

மோட்டாரில் இருவரும் சென்றோம்; நகரெங்கும் ஜகஜ்ஜோதியாக மின்சார விளக்குகள் பளிச்சிட்டன. விளக்கெண்ணெயில்லாமல், காற்றுடாமல் இப்படி விளக்குகள் அணியணியாக எரிவது எனக்கு வியப்பாயிருந்தது. "என்ன விழிக்கிறீர்! இவைதாம் மின்சார

விளக்குகள். ஒரு பொத்தானை அமுக்கினால் ஊரெல்லாம் வெளிச்சம். பாரும் என் சீடனுடைய வெள்ளைக்காரன் வேலையை" என்று காட்டினார் போகர். மோட்டார் "ஈஸ்ட் எண்டை" (*East End*) நோக்கிச் சென்றது. வழியில் ஏராளமான கடை கண்ணிகளும் ஓட்டல்களும் இருந்தன. கண்ணாடிக் கதவுகளும் மின் விளக்கணிகளும் சாமான்களின் நிறங்களும் கண்ணைப் பறித்தன. ஒரு கடையில் விதவிதமான கண்ணாடிக் குப்பிகள் ஜொலித்தன. அவற்றிலிருந்த ரசங்களைச் சீமான்களும் சீமாட்டிகளும் கண்ணாடிக் கோப்பைகளில் ஊற்றிக் குடித்தனர்.

"அஃதென்ன?" என்றேன். "கிங் ஜார்ஜ் விஸ்கி, ஒயின்" (*King George wisky, Wine*) என்றார்.

"விளங்கவில்லை"

"மதுபானம்" என்றார்.

திடுக்கிட்டேன். அதற்கடுத்த கடை "பன்றிக்கறி, பசுக் கறி" என்றார்.

தலையில் அடித்துக் கொண்டேன்.

அதன் பிறகு "இனிமையான குதிரைக்கறி, மீன் கறி, பறவைக்கறிக் கடைகள்" என்றார்.

'அட. கர்மமே' என்று கண்ணை மூடிக்கொண்டேன். தெருவில் ஸ்திரீ புருஷர் கைகோத்து நடந்தனர். நெஞ்சு பகீரென்றது. மோட்டார் ஒரு பெரிய சலவைக்கல் மாளிகைக்குள் நுழைந்தது. நாங்கள் இறங்கினோம். இது தான் "ப்ளெஷர் க்ளப்" (*Pleasure Club*—உல்லாச விடுதி) என்று என்னை உள்ளே அழைத்துச் சென்றார் போகர். "பொதியமலைக் குகையில் கண்ணை மூடிக் கொண்டு ஏகாங்கியா யிருந்தீரே! பாரும், நவநாகரிக வாழ்வை. பாரும் இந்த மாளிகையை, என்ன ஜோரா யிருக்கிறது!" என்று இடித்துக் காட்டினார் நண்பர். ஆம், அழகான மாளிகை, ஒழுங்கான ஏற்பாடுகள், பார்வைக்கு வெகு சுத்தம், மேஜை நாற்காலிகள், விளக்கணிகள் எல்லாம் வெகு நேர்த்தி! போகர் ஒரு பொத்தானை அழுத்தினார்; "ட்ரங், ட்ரங்" என்று மணியடித்தது. உடனே ஓர் அழகான பெண்மணி தேவலோக ரம்பை போல மேலிருந்து ஒரு நாற்காலியில் வந்து குதித்தாள்.

"ஹலோ, குட்நைட் மிஸ்டர் ஃபோக்" *(Hallow, Good night, Mr. Foag)* என்றாள். "ஹலோ, குட்நைட் ஜோனி" *(Hallow, Good night Johni)* என்று போகர் அவள் கையைப் பிடித்துக் குலுக்கினார். "ஹர ஹர" என்று தலையில் அடித்துக்கொண்டேன். இருவரும் அதே நாற்காலியில் உட்கார்ந்தனர்; என்னையும் உட்காரச்சொல்லி "லிஃப்ட்" *(Lift)* என்றனர்; நாங்கள் ஏழாம் மாடிக்குப் போய்ச்சேர்ந்தோம். ஆ! அது இந்த்ரலோகம் போலிருந்தது. பலநிற சலவைக் கற்களில் விதவிதமான வேலைகள்; நடுவே விசாலமான வட்ட மேஜை; சுற்றிலும் வெல்வெட் சோபாக்கள்; நாற்காலிகள்; அவற்றில் வசந்தகால வண்ணாத்திப் பூச்சிகள் மாதிரி பலநிறமான நாகரிக உடையணிந்து சீமான்களும் சீமாட்டிகளும் உட்கார்ந்திருக்கின்றனர். மேஜைமேல் தட்டுத் தட்டாகத் திண்பண்டங்களும் புட்டிப் புட்டியாக விஸ்கியும் இருந்தன. சட்டைக்காரர் பரிமாறுகின்றனர். ஜோனி எங்களைத் தகுந்த இடத்தில் அமர்த்தினாள். எங்கள் பக்கத்தில் இளம் பெண்கள் அமர்ந்திருந்தனர். எனக்கு வெகு சங்கோசமாயிருந்தது. "ஹலோ மிஸ்டர் ஃபோக், வெல்கம்..." *(Hallow Mr. Foag, Welcome)* என்றெல்லாம் அங்குள்ளவர்கள் போகருடன் தமாஷாகப் பேசினர். நான் பேந்தப் பேந்த விழித்தேன். "இவர் தங்கள் நண்பரா?" என்று என்னுடன் இரு பாலரும் கைகுலுக்க வந்தனர். 'கிரகசாரமே' என்று உலகத்தை ஓட்டிப் போனேன். பிறகு ஒருவர் எழுந்து வெகு விறைப்பாக நின்று, ஏதோ பேசி ஒரு புட்டி காலி பண்ணினார். எல்லாரும் அப்படியே சாப்பிட்டனர். பிறகு தட்டுகள் காலியாயின. "அது என்ன?" என்றேன். "நமது உடல் நலத்திற்காக பகவானை வேண்டி, இவர்களெல்லாம் சாராயம் குடிக்கிறார்கள்" என்றார். "தட்டுகளில் என்ன?" என்றேன். "மீன் ரொட்டி. முட்டையும் வெண்ணெயும் சேர்த்த பிஸ்கோத்து, ஆட்டுக்கறி, பசு பக்ஷி மாமிசபாகங்கள்..." என்றார். எனக்குக் கோபம் வந்துவிட்டது. "என்னைப் பாழாக்கவா இங்கே அழைத்து வந்தீர்? விசுவாமித்திரருக்கு மேனகை வந்ததுபோல என் தவத்தைக் கெடுக்

கவா வந்தீர்? நான் இவற்றையெல்லாம் தொடமாட்டேன். கந்த மூலபலாதிகளே சாப்பிடுவேன்; இன்றேல் ஸல்லேஹனம் கிடந்து சாவேன்" என்று ஒரே வைராக்யமாகச் சொன்னேன். "அட பைத்தியமே, பாருங்காணும் நாகரிகத்தை" என்று நண்பர் காதோடு சொன்னர். "சை.......உமது நாகரிகமோ, லட்சணமோ, பரஸ்திரீயோடு கைகுலுக்குகிறீர், கள்ளு சாராயம் சாப்பிடுகிறீர், உயிர்க்கொலை புரிகிறீர், புலாலுண்கிறீர்...சை போங்காணும்!" என்று எரிந்து விழுந்தேன்.

"மிஸ்டர் அகஸ்டஸ் நான் இங்கே சாப்பிடேன்; சும்மா பார்த்துக் கொண்டிருப்பேன். இங்கிருக்கும் யுவதிகளில் பெரும்பாலோர் கன்னிகைகள். அவர்களைப் பற்றி ஒன்றும் சொல்லாதேயும், வம்பு வரும்" என்றுர் போகர்.

"பத்து வயதுக்குள் பெண்களுக்குக் கல்யாணம் பண்ணவேண்டாமா? முப்பது, நாற்பது வயதாகியும் இவர்கள் கன்னிகைகளா? யாரை ஏமாற்றுகிறீர்?" என்றேன்.

"கேளுங்காணும், இவர்கள் நித்ய கல்யாணிகள்; சுந்தரிகள், சுதந்தரிகள். நீரும் லோபா முத்திரையை நடத்தினீரே; பாரும் அந்தக் கனவான் தம் மனைவியை எப்படி நடத்துகிறுரென்று; அவர் மனைவிதான் உமது பக்கத்தில் இருப்பவள். கம்பைப் பிடித்துத் தொல்காப்பியன் ஆற்று வெள்ளத்தைத் தாண்டுவித்ததற்காக மனைவியைச் சபித்தீர், சிடனைச் சபித்தீர். இவர்கள் வித்யாசமில்லாமல் கைகோத்து நடனம் செய்வார்கள். இதல்லவா சுதந்திர வாழ்க்கை. உமது அசட்டு நடத்தையைக் கேட்டால், இந்தப் பெண்கள் மண்டையிலடித்து ஓட்டுவர். நீர் இந் நாட்டில் ஒரு கணவனுனல் உமது மனைவி உம்மை "டைவர்சு" பண்ணிவிடுவாள், விலக்கி வைப்பாள். உமது மீசையும் தாடியும் சடையும் வாமனுவதாரமும் கண்டால் உம்மைக் காட்சிசாலைக் கனுப்பிக் காட்டுப் பிராணிகளுடன் வைப்பர். தண்டு, கமண்டலம், கோவணம், வைராக்யம், எல்லாம் உமது நாட்டுடனே நிற்கட்டும். இங்கே ஆள் ஜோராயிருக்க வேண்டும்; ஆணுக்கும் பெண்ணுக்கும் உடல் வேற்

றுமைதான்; உள் வேற்றுமை இங்கேயில்லை.'' இவ்வாறு போகர் வெளுத்து வாங்கும்போது என் மனம் லோபா முத்திரையிடம் சென்றது. அவளைக் கூட்டி வராதது நல்ல காரியம். இந்தக் காட்சிகளை யெல்லாம் கண்டால் 5000 ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்களைக் கொண்டு எனக்கு வாய்ச்சாட்டை கொடுப்பாள். இப்படி நான் சிந்திக்கையில்

''லா லலா லா லலா
லல் லல் லா லலா!''

டும், டும் டொம் டொம்.' என்று துரிதமாகப் பாட்டும் பறையும் கேட்டன. உடலெல்லாம் தெரியும்படியான மெல்லிய மஸ்லின் பாவாடை தொடைக்கு மேலே கட்டிக்கொண்டு, மார்பில் மெல்லிய சட்டை போட்டுக்கொண்டு, நான்கு யுவதிகள் நடனமாடி வந்தனர்.

என்ன பூச்சு வேலைகள்! தேவலோக அரம்பை தோற்றுப் போவாள் என்றால் அதிக வர்ணனை ஏன்? அந்தக் கும்பஸ்தனங்கள், சாயங் குலுங்கும் உதட்டுப் புன்னகை, முத்துப் பற்கள் (போலிப் பற்கள்), கயல் விழிகள், வாழைத்தண்டு போல மெதுவான அங்கங்கள், வெண்தாமரையைக் கவிழ்த்ததுபோல இடுப்பை மட்டும் மறைக்கும் மஸ்லின் பாவாடை, மார்பில் முத்துமாலை; நெற்றிப் பட்டம், தலையில் ஒரு பூ-அழகு! அழகு! என் வைராக்கிய சித்தம் ஆடி மேகம்போலக் கலைந்தொழிந்தது! அங்கிருந்த கனவான்களும் சீமாட்டிகளும், இன்னொரு புட்டி சாராயம் குடித்து, ''லா லலா லாலா மை டியர் மை டியர்'' என்று பாடிக்கொண்டு கைகோத்து, அந்த யுவதிகளுடன் மேல்மாடிக்குச் சென்றனர். ''வாருங்காணும்'' என்று போகர் என்னை இழுத்தார். ''போங்காணும் சண்டாள மனிசா'' என்று நான் அவரை இழுத்தேன். அவர் இழுப்பே வலுவாயிருந்தது. நானும் மேல்மாடிக்குப் போய்ச் சேர்ந்தேன். அந்த அறை முழுதும் அலங்காரம்! அங்கே ஏக அமளி, ரகளை...... பாட்டாம் பாட்டு, பறைக்கொட்டு, ''தக்கிட தகடி தக்கதா!'' என்று ஆண்களும் பெண்களும் விகார நடனங்கள் புரிந்தனர். சிலர் நடனம் செய்து முடித்துவிட்டுத் தனியறைகளுக்குச் சென்றனர்.

"இந்த அட்டூழியத்தை நிறுத்துகிறீர்களா; சத்யாக்கிரகம் பண்ணவா? நான் பிராமண ரிஷியாக்கும்; சாபமிடுவேன்; மாடியிலிருந்து கீழே குதித்து உயிர் விடுவேன்; உங்களை பிரம்மஹத்தி தோஷம் பிடிக்கும்" என்று கூவினேன். அவ்வளவு கோரமான காமக் களியாட்டங்கள் அங்கே நடந்தன. "ஸைலன்ஸ்!" என்றார் ஒருவர். போகர் என் வாயைப் பொத்தி, "அசட்டு பிராமணா! இங்கே உமது சத்யாக்கிரஹம் பலிக்காது. ஆள் முழுங்கிப் பூதத்திடம் ஆட்டின் பாய்ச்சல் பலிக்குமா? உமக்கும் ஒரு ஜோடி வேண்டுமானால் தருகிறேன்! ஜோராக நடனமாடுமே; நாகரிகச் சீமாட்டிகளின் கையைத் தொடக் கொடுத்துவைக்க வேண்டுமே!" என்றார் போகர். என் நெஞ்சு பொறுக்கவில்லை. "அட சீ! வாருங்காணும் வெளியே, உமது நாகரிகம் நாசமாய்ப் போக! இது நாடா பஞ்சமாபாதகக் காடா? தவமும் தருமமும், அருளும், ஆத்ம சக்தியும் விளங்கும் புண்ய பூமியைவிட்டுக் கொலையும், புலாலும், கள்ளும், காமலீலைகளும், பச்சை மோகினி வெறியாட்டமும் பிடித்த இந்த மாயா லோகத்திற்கேன் என்னை இட்டு வந்தீர்? ஏங்காணும், என்னைக் கெடுக்கவா பார்க்கிறீர்! அட சீ! வாருங்காணும்" என்று அவரை நிமிட்டினேன். இதற்குள் ஆட்டம் ஓய்ந்து அவரவர் தனியறைகளுக்குச் சென்றனர். சில யுவதிகள் யுவர்களுடன் சதுரங்கம் ஆடினர்.

"ஹலோ, குட் நைட்" என்று போகர் நண்பரிடம் விடைபெற்று, என்னுடன் லிஃப்டில் இறங்கிக் கீழே வந்தார். மீண்டும் ஒரு யுவதி கை குலுக்கி எங்களை வழியனுப்பினாள். போகர் அவளிடம் ஒரு பவுன் அளித்தார். அந்த மாளிகையில் ஒரு மணி நேரம் தங்க ஒரு பவுன் செலவு. மோட்டாரில் ஏறினோம்; நான் 'தானி தானிச பாபானி' சொல்லிக்கொண்டேயிருந்தேன். என்ன சொன்னாலும் புலன்கள் அடங்காமல் மீண்டும் மீண்டும் அந்த மாயக் காட்சிகளையே முன்னே கொணர்ந்தன. இங்கிருந்தால் தவம் குட்டிச்சுவர்தான் என்றறிந்தேன். ஈஸ்டு எண்டில் ஃபோக் மான்ஷனுக்கு வந்து சேர்ந்தோம்.

"இறங்கும், இதுதான் நமது மாளிகை" என்றார் போகர். உள்ளே சென்றோம். அழகு, சுத்தம், அணி வேலைகள்! இந்திரலோகம் போலிருந்தது அந்தச் சித்திர விசித்திர மாளிகை. மின்சாரப் பலகையில் ஏறி ஆறும் மாடிக்குச் சென்றோம். "மை டியர்" என்றார் ஃபோக். "எங்கேஜ்ட்" (*Engaged* வேலையா யிருக்கிறேன்) என்று பதில் வந்தது. "அஃதென்ன?" என்றேன். என் மனைவி தனது நண்பனுடன் இருக்கிறாள்! நாம் ஐந்தாம் மாடிக்குப் போவாம் என்று என்னைக் கீழே யிறக்கிக் கொணர்ந்தார். "பள பளா! நன்றாயிருக்கிறதே உமது கிரஹஸ்த தருமம்! உமது பத்தினி பரபுருஷனுடன் இருப்பதாம்; நீர் பேசாமல் கீழே இறங்கிப் போவதாம். கருடபுராணத்தைத் திருப்பிப் பாரும். இப்படிப்பட்ட பெண்களை எமலோகத்தில் செக்கிலிட்டு ஆட்டுவர். வந்த கணவனுக்கு அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் அளித்துப் பாதோதகம் சாப்பிட்டு, அடி வணங்கி அன்னபானாதிகள் தந்து உபசரிக்க வேண்டாமா? தூ, உமது நாகரிகமோ, எட்டேகால் லக்ஷணமோ!" என்று எனது நண்பரை இடித்துப் பேசினேன்.

"உஷ்! அவள் காதில் இந்த வார்த்தை விழுந்தால் உமது காதைப் பிய்த்து விடுவாள்! அருள் நிலமன்று; இது பொருள் நிலம். தர்மபூமி யன்று; இது கர்ம பூமி. தியாக பூமியன்று: இது போக பூமி. இங்கே பெண்ணுக்கு வணங்கிப்போக வேண்டும். எனது மனைவியைச் சமைக்கச் சொல்லுகிறீர், பரிமாறச் சொல்லுகிறீர்; அவள் என்ன வேலைக்காரியா? அஃதெல்லாம் லோபாமுத்திரையிடம். நீர் எவ்வளவு வேலை வாங்கினாலும் அந்த அப்பாவிப் பெண் வாயைத் திறக்காமல் கட்டை விரலைப் பார்த்தே பொறுமையாக நடப்பாள். இங்கே சாப்பாடு கிளப்பிலிருந்து வரும்; உபசாரம் செய்யப் பணியாளர் உண்டு. சீமாட்டிகள் புத்தகம் படிப்பர், விளையாடுவர், உலாவி வருவர், கிளப்புகளுக்குச் செல்வர்" என்றெல்லாம் நீளப் பேசினார். எனக்குப் பொல்லாக் கோபம் வந்து விட்டது.

*    *    *

கொலைபுரிவீர், குடிகெடுவீர், குடித்தெல் லாரும்
கூத்தாடித் திரிவீர்கள் ஆணும் பெண்ணும்;
நிலைதவறிக் கூடிடுவீர், நெறியொன் றில்லீர்,
நீசரோ நாகரிக நேசரோ நீர்?
புலையுணவே நெடிதுண்பீர், புல்லீ ருங்கள்
போகமெலாம் புலன்கெட்ட மோக மாகும்.
தலைதடுமா றித்திரிவீர்; உமது மாயத்
தளையினிலே பட்டழியோம் தவஞ்செய் வோமே!

என்று திருத்தாண்டகப் பண்ணில் காம்போதி இராகத்தில் ஒரு பிர்க்கா இழுத்தேன். அப்போது "ஹல்லோ, மை டியர் ஃபோக்" என்றோர் இனிய குரல் கேட்டது. "யார்?" என்றேன். "என் மனைவி" என்றார் ஃபோக். "அட சிவனே, கற்புள்ள மனைவி கணவனைப் பேர் சொல்லிக் கூப்பிடலாமா? இதென்ன அட்டூழியம்? நீர் பழைய போகரோ, அல்லது என் தவத்தைக் கெடுக்க வந்த மோகரோ? இது மோகினி டாகினி வேலையோ? ஓம் நமசிவாய!" என்று விபூதியெடுத்து ஊதிச் சிவபெருமானுக்கு ஒரு குறுந்தொகை சூட்டினேன்:

கந்த மூல பலாதி களித் துண்டு
சந்த தமுந் தவம்புரிந் தேன்ஐயே!
இந்தச் சோதனை யேன் சிவ சம்புவே,
எந்தையே சரணம்! எனைக் காத்தருள்.

இவ்வாறு குறுந்தொகை முழங்கிக் கொண்டிருக்கும் போது, தம்பதிகள் வந்தனர். "ஃபோக் சீமாட்டி உம்மை வரவேற்கிறார்" என்றார் ஃபோகர். "சுபமஸ்து" என்றேன். என் கையைப் பிடித்துக் குலுக்கினாள் துரைச்சாணி. எல்லாரும் ஆறாவது மாடிக்குப் போனோம். அங்கே ஓர் அறையில் வட்டமேஜை போட்டிருந்தது; சுற்றிலும் நாற்காலிகள்; நாங்கள் அமர்ந்தோம். பீங்கான் தட்டுகளில் உணவு வந்தது. அதை நான் தொடவில்லை; பஞ்சாக்ஷரி ஜபம் செய்துகொண்டிருந்தேன். என் குறிப்பறிந்து போகர் பால்பழம் வரவழைத்துக் கொடுத்தார். "தனியே அப்படித் திரும்பிச் சாப்பிடுகிறேனே" என்றேன். "அட ஒண்ணும் பசலி அசடே! நீர் சாப்பிடுவதை நாங்கள் பார்த்தால் என்ன? இந்த மார்ஜால வித்தையெல்லாம் வேண்டாங்காணும்;

சும்மா தாராளமா யிரும்" என்று என் முதுகைப் பிடித்து அழுத்தினுர் ஃபோகர்; தபசிக்கும் பசியிருக்கிறதே! பேசாமல் பழங்களை உண்டு பாலைக்குடித்து வாய்பூசி "ஹர ஹர மஹாதேவா" என்று ஒரு கர்ஜனை செய்தேன். ஃபோக் என்னைத் தன் மனைவிக்கு அறிமுகப்படுத்தி "இவரையே நான் அழைத்து வருவதாகச் சொன்னேன்; இவர் வயது கணக்கற்றது; இலமூரியா மனிதர்; உள்ளே தபோபலத்தினுல் இளமையோடிருக்கிருர். இவரே எனது தாய்மொழியான தமிழை வளர்த்தவர். இவர் மனைவி உலோபாமுத்திரை மகா உத்தமி........." என்றெல்லாம் சிறப்பாகச் சொன்னுர். அம்மையார் என் முகம் பார்த்துச் சிரிக்கும் போதெல்லாம் "ஓ, எஸ்" என்று நானும் தலையசைத்தேன். போகர் என் பக்கம் பார்க்கும்போதெல்லாம் 'அதிகமாகக் கதை வளர்க்காதீர்; உலோபாமுத்திரை பேச்சை நிறுத்தும். விஷயம் தெரிந்தால், உமது மனைவி வேறு எனக்குச் சாட்டை கொடுப்பாள்' என்பதன் அறிகுறியாக "நோ நோ டியர் ஸார்" என்றேன். எனக்குத் தெரிந்த ஆங்கிலம் அவ்வளவே. அம்மையார் என்னைக் கேள்வி கேட்கும் போது போகரை ஆந்தைபோல் பார்த்தேன்!

மணி 8-30: "மை டியர்-குடே உட்லாண்ட் (Today woodland)" என்றுள் பத்தினி. "ஓ, ரெடி" என்றுர் போகர். "என்ன?" என்றேன். "வாருமே" என்று லிஃப்டில் இறங்கிவந்து என்னைத் தம்முடன் மோட்டாரில் ஏற்றினுர். "இன்னும் என்னை எங்கே இழுத்தடிக்கிறீர்? இரவில் நிஷ்டை பண்ணலாமென்று பார்த்தேன்" என்றலறினேன் "இங்கே நிட்டை பண்ணி நீர் வாழ்ந்தீர்; வாருங்காணும். இன்று நான் ஜோடித்த டாக்கி (Talkie) நடக்கிறது; அழகான நாடகம். ஜிலு ஜிலுப்பாயிருக்கும்; பார்க்காமல் நிஷ்டை பண்ணுகிறீராம்..." என்று இடித்துரைத்தார். "ஐயோ வேண்டாம்" என்றேன். நான் முறையிடுவதற்குள் மோட்டார் உட்லாண்ட் தியேடருக்கு வந்து விட்டது. இருவரும் என்னை உள்ளே இழுத்துச்சென்று முன்னுல் சோபாவில் உட்கார வைத்தனர்! "ஐயோ சிவனே, இதென்ன மாயமோ அறியேனே" என்று நான் தலையில் கை வைத்துக்

கொண்டு, மனைவியைப் பறிகொடுத்தவன் போல் உட்கார்ந்தேன். அடுத்த தடவை அந்த ஒலிப்பட வர்ணனையும் இலண்டன் அதிசயமும் கேட்பீர்கள். குறித்த நேரம் தீர்ந்தது. இதோ நான் எனது குகைக்குப் போகிறேன். அன்பு, அன்பு, அன்பு!

[தொடர்ச்சி நாளை]

---

## 4. ஆங்கில நெடுங்கணக்கு

இன்று அகஸ்தியர் உற்சாகமாகப் பேசினுர்:

### வெள்ளித் திரை

சுருள் சுருளாக வெள்ளித்திரையில் விளையாடும் காட்சிகளை நான் கண்டேன்: பௌதிக மூளையை வியந்தேன்; ஆனுல் திரையில் ஆடிய கதையின் பயங்கர விபரீதத்தைக் கண்டு நடுங்கினேன்:

"பின்லாந்தில் ஒரு நாகரிகவிருந்து நடக்கிறது; அங்கு, செல்வரும் செல்வியரும் கூடிக் குடிக்கின்றனர்; அவருள் இளவரசன் ஆந்தனியும் காணப்படுகிருன். குடித்தபின் முகமூடி நடனம் நடக்கிறது. அதில் ஏஞ்சல் என்னும் கட்டழகி ஆந்தனியைத் தழுவி நடனமாடுகிருள். இருவருக்கும் காதல் உண்டாகிறது. ஏஞ்சல் இரண்டு முறை விவாகம் செய்துகொண்டவள். முதல் கணவன் வில்லியத்தை விஷம்வைத்துக் கொன்று, இரண்டாவது கணவன் ஜோனை அவள் மணந்தாள். ஜோன் பெருஞ் செல்வன்; கப்பல் வியாபாரி. அவன் கப்பலோட்டிக் கொண்டு அமெரிக்கா செல்லுகிருன். அவ்வூர் அரசன் தன் மகனுக்கு ருமேனியா இளவரசியை மணம்புரிய ஏற்பாடு செய்து முகூர்த்தம் நிச்சயிக்கிருன். இளவரசன் ஏஞ்சலையே பலமாகக் காதலிக்கிருன்: ருமேனியா இளவரசியை மறுக்கிருன். அதனுல் இரண்டு நாடுகளுக்கும் மனக்கொதிப்பு ஏற்படுகிறது. இச்சமயம் ஏஞ்சலின் தூண்டுதலால், ஒரு நீர்மூழ்கி ஜோன் ஏறிவரும் கப்பலை உடைத்துக் கடலில் ஆழ்த்துகிறது. ஜோன் போன திசை தெரியவில்லை. அவன் இறந்ததாகக் கருதி, ஏஞ்சலும் இளவரசனை முறைப்படி விவாகம் செய்து கொள்ளுகிருள். அர

சனுக்கு இச்செய்தி பிடிக்கவில்லை; அவன் மகனை நாடு கடத்துகிறான். இளவரசன் ஏஞ்சலுடன் நார்வே சென்று, அங்கே பெரிய இயந்திரப்படை திரட்டுகிறான்; பௌதிக இரசாயன ஆராய்ச்சிகளால் பயங்கரமான போர்க்கருவிகளைச் செய்துகொண்டு பின்லாந்தின்மீது படையெடுக்கிறான். தந்தையும் அதேமாதிரி போர்க்கருவிகளைத் தயாரித்து மகனை எதிர்க்கிறான்; கடும்போர் நடக்கிறது. ஆகாசக் கப்பல்கள் குண்டுமாரி பெய்து ஊர்களை அழிக்கின்றன; பறக்கும் குண்டுகள் உயிர்களைக் கொன்று குவிக்கின்றன. பெரிய ராக்ஷஸ பீரங்கிகள் ஊழி இடி போல் முழங்குகின்றன. அவை ஆகாச விமானங்களைச் சுட்டு வீழ்த்துகின்றன. நீர்மூழ்கிகளும், நாசகாரிகளும், நீர்வெடிகளும் கப்பல்களை உடைத்துத் தள்ளுகின்றன. போரில் தந்தை இறக்கிறான். இளவரசன் பட்டத்திற்கு வருகிறான். ஆனால் அவன் செல்வச் செருக்கால் கொடுமைகள் செய்கிறான்; நன்மதி சொல்லும் ஏஞ்சலை வெறுக்கிறான்; மற்றொரு அழகியை மணம் புரிந்து, ஏஞ்சலை ஒதுக்கி வைக்கிறான். ஏஞ்சல் அநாதையாகி, ஓர் அநாதைப் பெண்கள் விடுதியிற் சேர்ந்து பிழைக்கிறாள். இளவரசன் கொடுங்கோலைத் குமைத்தெறிய வேண்டுமென்று அவள் உள்ளம் துடிக்கிறது. இச்சமயம் நாட்டில் ஒரு குடியரசுக் கட்சி கிளம்புகிறது; தீவிரக் கிளர்ச்சி நடக்கிறது. அக்கட்சித் தலைவன் ஜோன். அவனே ஏஞ்சலின் இரண்டாங் கணவன். கடலில் எப்படியோ தப்பி, கரை சேர்ந்து தனக்கு, இளவரசன் செய்த கொடுமைகளையறிந்து, மனங்கொதித்து அவன் இவ்வாறு கிளர்ச்சி செய்தான். ஏஞ்சல் அவனுடன் சேர்ந்து கொள்ளுகிறாள். ஒரு நாள் கலகப்படை அரண்மனைக்குள் நுழைந்து அரசனை வளைத்துக் கொள்ளுகிறது. ஜோன் அரசன் முகத்தில் துப்பாக்கியை நீட்டுகிறான். அரசன் மனச்சாட்சியே அவனைக் கொல்லுகிறது. உடனே குடியரசுக் கொடி பறக்கிறது. ஆட்டம் முடிந்தது. நான் அஹிம்ஸா தருமத்தைப் பற்றி ஒரு சண்டமாருதம் அடிக்கலாமென்று கிளம்பினேன். மிஸ்டர் ஃபோக் "கப்சிப், ஸயலன்ஸ்!" என்று என் கையைப்பற்றி இழுத்து வந்து மோட்டாரில் தள்ளினார்.

விட்டேனு நான்,

'கொலையிலே யுண்டு கொலையிலே கொழுத்துக்
கொடுமனக் கொலைகளே புரிந்து
கொலையிலே களித்துக் கொலையிலே யிறங்குங்
கொடியவர் கொடுமையென் சொல்வேன்'

என்று ஒரு விருத்தம் தொடங்கினேன். விருத்தம் முடிவதற்குள் மோட்டார் வீட்டிற்கு வந்தது.

"வாட் ந்யூஸன்ஸ்" என்ருள் ஸ்ரீமதி ஃபோக்.

"போங்காணும் உமது அறைக்குள்; எதற்கெடுத்தாலும் விருத்தம் பாடிக் கழுத்தறுக்கிறீர்" என்று எனக்கொரு சூடு கொடுத்தார் ஃபோக்.

காரணம், எனது தமிழ் ஜீமாட்டிக்குப் பிடிக்கவில்லை. எனக்கும் நண்பருக்கும் பத்து நிமிஷம் பேச்சு நடந்தது.

—மிஸ்டர் அகஸ்டஸ், இன்று மன்னிப்பு; நாளைமுதல் நீர் நாகரிகம் கற்றுக்கொள்ளவேண்டும். "நாடொப்பன செய்......" தெரியுமா?

—கொலை, களவு, கள், காமம், சூது—இவை நீங்கலாக உமது நாகரிகத்தைச் சொல்லும்.

—முதலில் நீர் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளும். நாளை முதல் அக்ஷராப்யாஸம்......

—சிவபெருமான் அருளிருந்தால் அதுவும் வந்துவிடும்.

"வடமொழியைப் பாணினுக்கு வகுத்தருளி......
தொடர்புடைய தென்மொழியை........."

—போதும் பாட்டு. சிவபெருமான் 'லுணுக், டுணுக் கடதறடுண்' என்று உடுக்கடித்தாராம்! பாணினிக்கு வடமொழியும், உமக்குத் தமிழும் வந்துவிட்டதாம்! அந்த மாதிரி இன்றிரவு சிவனை உடுக்கடிக்கச்சொல்லி இங்கிலீஷும், பிரஞ்சும், ஜெர்மனும்' வரட்டுமே பார்ப்போம்!

—எல்லாம் சிவன் செயல்.

—சரி, தூங்கப்போம். சிவன் கனவில் வந்து உடுக்கடிப்பார்.

* * * *

நான் விடிய நாலு நாழிக்கு முன்பே எழுந்து கிண்டியைத் தேடினேன்; காணும். "அனுஷ்டானம் பாழாய்ப்

போகிறதே; கொண்டாரும் என் கிண்டியை; கொண்டாரும் களிமண்" என்று கத்தினேன். ஃபோகர் கதவு திறந்துவந்து "கப்சிப்! இப்படியெல்லாம் சத்தம் போட்டீரானால், அவள் என்னை "டைவர்ஸ்" (Diverse) பண்ணி விடுவாள்; இந்தாரும், போம் முக்காலிக்கு" என்று என்னிடம் ஒரு காகிதம் தந்தனுப்பினார்.

—"அட இழவே, கௌசம்பண்ணக் களிமண்...செம்பு..."

—"அட ஒண்ணும் பஸலி...காகித சௌசந்தான் இங்கே; பழகும்."

கருமமே என்று போய்வந்தேன். "பேசாமல் படுத்துக் கொள்ளும்" என்றார் நண்பர்.

—அட பஞ்சபஞ்சஉஷத் காலத்திலே, ஸ்நானம் சந்திஜபம் செய்யவேணுமையா.

—இந்தக் குளிரில் செய்தால் ஜன்னி வரும், சந்தி ஜபம் வேறுவிதமாய் நடக்கும்; பாரும் ஏழு மணிக்கு.

நான் அந்தர் பூஜை செய்து சிவநாமத்தை மானசீகமாக ஜபித்துக்கொண்டே நிஷ்டையிலிருந்தேன். "டாண், டாண்" என மணி ஏழடித்தது.

"பெட் காஃபி" என்றொரு சேவகன் நுழைந்தான். "இதென்ன விபரீதம், பல் தேய்க்கு முன்னே!" என்று கூச்சலிட்டேன். "சாப்பிடும்" என்று வற்புறுத்தினார் நண்பர். மறைவாகத் துணியைப் போட்டுப் பல்லைத் துடைத்துக்கொண்டு சாப்பிட்டேன். பிறகு பல் பிசினும் பீலியும் தந்து, "விளக்கும் பல்லை" என்றார்.

"இந்த அனுசார உரோமத்தால் விளக்கமாட்டேன்; கொண்டாரும் ஆலம் விழுது அல்லது நாயுருவி வேர்;

**விழுதாலே பல் விளக்கின் வீறுண்டாகும்.**

**வேராலே வெள்ளி போல் வெளுக்குமப்பா!"**

என்று என் சித்த சாத்திரத்தைத் தொடங்கினேன். "இதற்கும் விருத்தமா?" என்று நண்பர் கைக்குட்டையால் என் வாயை மூடினார்.

சரி, அந்தக் கடன் முடிந்ததும், எனது நண்பரும் மனைவியும் தோட்டத்திற்குச் சென்று உலாவினர். பிறகு, டென்னிஸ் விளையாடினர். என்னிடமும் ஒரு மட்டை கொடுத்தனர். "எங்கள் பலீன் சடுகுடுவின் கால்தூசி

பெருது உமது டென்னிஸ்" என்று மட்டையைக் கீழே போட்டு நான் என் அறைக்குள் சடுகுடு பாய்ந்தேன்.

வெள்ளிக்கிழமை, மணி 10-30; "மிஸ்டர் அகஸ்டஸ், சிவபெருமான் உமது ஆங்கிலத்திற்காக ஏதாவது உடுக்கடித்தாரா கனவிலே?" என்று பரிகாசம் செய்து கொண்டே ஃபோக் துரை என்னிடம் வந்தார்.

—உம்மைப் மோன்ற கலிதுரர் இருக்கு மட்டும் சிவபிரான் உடுக்கடிக்க மாட்டார்!

—அதெல்லாம் பழங்காலத்து ஐதீகங்காணும்; உடுக்கடித்து ஆங்கிலம் வராது! இதோ ராயல் ரீடர்—ஆரம்பியும்.

—இப்போது இராகுகாலம்–மாட்டேன்!

## இராகுவிலே தொடங்கியது வாகாகாது

—ஹூம், இன்னும் விருத்தமா? கோடானுகோடி மாணவர், இதே நேரந்தான் பள்ளிக்கூடத்தில் பாடம் படிக்கிறார்கள். இராகுகாலமெல்லாம் உங்களூர் பஞ்சாங்கத்தில்—சொல்லும் A, B, C, D....

—மாட்டவே மாட்டேன். மூன்று நாழிகை கழித்து மகர லக்கினத்திலேதான் ஹரி: நாஹ மோஹ ஆரம்பிப்பேன்.

—மகர லக்கினத்திலே ஹரி: நாஹ மோஹவா? மகர லக்னம் வருவதற்குள் உமக்கு எழுத்து வந்துவிடுமையா.

—அட சை, இராகுகாலம் என்றால் கேளும்......

—அட "வேயூறு தோளிபங்கன்......நல்ல வீணை தடவி" என்ற தேவாரத்தைப்பாடுமையா; இராகுகாலம், எமகண்டம், செவ்வாய் தோஷம் எல்லாம் பறக்கும். உமது ஞானசம்பந்தர் அதைப் பாடித்தானே மதுரைக்குப் புறப்பட்டு ஜயக்கொடியுடன் திரும்பி வந்தார்.

உபத்திரவம் பொறுக்க முடியாமல் நான் "வேயூறு தோளிபங்கன்" என்ற தேவாரத்தை உருக்கமாகப் பாடினேன். அதைக் கேட்டு அறைக்குள் இருபது பேர் சட்டையும் தொப்பியுமாக நுழைந்து "ஹல்லோ ஹஹஹ்" என்று நையாண்டி செய்தனர்.

—போதும் தேவாரம், சொல்லும் A, B, C, D....

நானு விடுவேன்? பாட்டுமுழுவதும் பாடி, உடனே தமிழின் பெருமையைப் பற்றி ஒரு சொற்பொழிவாற்றி, அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துரைக்கச் சொன்னேன். நான் சொன்னவற்றில் அவர்களுக்கு வியப்பை உண்டுபண்ணின பகுதியை மட்டும் கேளுங்கள்:

"நண்பர்களே, இவர் என்னைக் கோணலெழுத்துக் கற்கத் தொந்திரவு செய்கிறூர். உலகத்தில் முன்மொழி, தொன்மொழி, தமிழே; தமிழ் என்ருல் அமிழ்தம், இனிமை என்று பொருளாம். அதைச் சுவைத்த என் நாவு, வேறு மொழியைச் சுவைக்குமா? உலகிற்கு இறைவனை சிவ பிரான் இரண்டே மொழிகளைத் தான் உபதேசித்தார்—வடமொழி, தென்மொழி. இந்த மொழிகளிலேதான் எல்லா ஞானங்களும், தத்துவங்களும் அடங்கி யிருக்கின்றன. உள்ளத்தை அள்ளும் அருட் பாடல்கள் தமிழில் உள்ளன. குமரிகண்டம் என்ெரு பெரிய கண்டமிருந்தது. அதையே இப்போது '**மறைந்த இலமூரியா**' என்பர். அந்தக் கண்டம் முழுதும் தமிழே வழங்கியது. அப்போது பாரதகண்டம், திபெத்து, இந்து சமுத்திரத் தீவுகள், ஆப்ரிக்கா முதலிய கண்டங்களிலெல்லாம் தமிழே வழங்கியது. எமது தமிழ் ௰கூ-ம் ஆண்டுகளுக்கு மேலாக உலகில் வழங்கி, இன்னும் இளமையோடிருக்கிறது. தமிழ் வாக்கின் திறமை அளப்பரிது: தமிழ் வாக்கு நோய் தீர்த்தது; இறந்தாரை எழுப்பியது; அற்புதங்களைச் செய்தது. வேண்டுமாஞல் பெரிய புராணத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். விரும்பிஞல் இதே இலண்டன் மாநகரில் திருத்தொண்டர் புராணம் படிக்கிறேன்.

**திருத்தொண்டர் புராணத்தைத் திருந்தக் கற்ருர்**
**செல்வமொடு சிரஞ்சீவி யாகவாழ்வார்-தனனனனு-சங்கரா...**

"ஹலலோ! விநோதக் கிழவன்!" என்று எல்லாரும் கைகொட்டிச் சிரித்தனர்.

இதற்குள் இராகுகாலமும் போயிற்று. நண்பர் ஒரு சண்டமாருதம் பொழிந்தார்: "மிஸ்டர் அகஸ்டஸ், இது இருபதாம் நூற்றுண்டு; குமரிக்கண்டக்கதைகளைச் சொல்லி இப்போது மார்தட்ட முடியாது. அந்தக் காலம் தமிழ் அப்படிப் பரவியிருக்கலாம்; இந்தக்காலம் வடவேங்கடத்

தில் கூடத் தெலுங்குதான் வழங்குகிறது. தென் குமரியில் மலையாளம் பேசுகிருர்கள். பழைய புராணக் கதைகளையெல்லாம் நம்பி, காலத்திற்கேற்ற விஷயங்களைப் படிக்காதவன் முட்டாள். இந்தக் காலத்திற்கு மிகவும் பெரிய பாஷை இங்கிலீஷ் தான்; சகல சாஸ்திரங்களும் அதில் உள்ளன. ஆங்கிலம் படிக்காவிட்டால் உமக்கு ஸயன்ஸ் (*Science*) வராது. நாளை உம்மை இலண்டன் புத்தகசாலைக்கு அழைத்துச் செல்லுகிறேன். பாரும், எமது கலைவளத்தை. ஆங்கிலம் தெரியுமுன் பழைய தினுசில் வாயைத் திறக்காதேயும்; எனக்கு அவமானம். நீர் மஹா புத்திமானுயிற்றே! உமது புலமையை இங்கிலீஷில் காட்டுமே பார்க்கலாம்; அலைகடலை மூன்று வாய் அள்ளிக் குடித்து வற்றடித்தீராமே; அது நிஜக் கதையாயிருந்தால், ஆங்கிலக் கடலையும் அள்ளிக் குடியுமே" என்றதும் எனக்கு ரோஷம் வந்தது. "ஓம் நமச்சிவாய" என்று பஞ்சாட்சரி ஜபித்தேன்!

"பாருங்காணும், சபதம்; ஒரே மாதத்தில் ஞான திருஷ்டியால் ஆங்கிலம் கற்றுக்கொண்டு, உமது கூட்டத்திற்கும் பதில் சொல்லுகிறேன் பாரும்!" என்றேன். உடனே ராயல் ரீடரைத் தொடங்கினேன். ஒரு வாரத்திற்கெல்லாம் நெஸ்ஃபீல்ட் கிராமர் ஆரம்பித்தேன்; பதினைந்து நாளைக்குள் பாஷையின் நுட்பத்தை அறிந்து கொண்டேன். பிறகு ஈசேப் கதைகளைப் படித்தேன் — அத்தனையும் பஞ்சதந்திரம் மாதிரியிருந்தன. அதன் பிறகு ஹோமரின் இலியாதுக் கதை படித்தேன்— இராமாயணம் போலிருந்தது. பிறகு ஆங்கிலத்தில் தாராளமாகப் பேசினேன். "கொண்டாரும், உமது ஸயன்ஸை" என்றேன்.

போகர் எனக்குச் 'சபாஷ்' பட்டம் கொடுத்து, ஒரு பெரிய ஆராய்ச்சிக் கல்லூரிக்கு அழைத்துச் சென்றார். அது அவர் மாணவர் இயற்கலை பயிலும் இடம். அதைக் கண்டதும் உண்மையாகவே நான் திகைத்து நின்றேன். ஐரோப்பிய நாகரிகத்தில் ஆசார விவகாரமில்லை; ஆண் பெண் வாழ்க்கைகளில் பல சிக்கல்கள் இருக்கின்றன; இல்லற வொழுக்கம் குறைந்துள்ளது; அரசியல் வாழ்க்கையோ போட்டியும் போருந்தான் என்றாலும்,

உலகாயதத் துறையில் ஐரோப்பியர் செய்துள்ள ஆராய்ச்சிகள் என்னைக் கவர்ந்தன. அன்று முதல் நான் ஐரோப்பியர் நடையுடை பாவனைகளை மன்னித்து விட்டேன். அவர்கள் செய்துள்ள அறிவாராய்ச்சியிலும் கலையாராய்ச்சியிலுமே என் உள்ளம் சென்றது. அதனால் நான் பெற்ற பயனை அடுத்தமுறை விரிவாகப்பேசுகிறேன்.

எல்லாருக்கும் அன்பு...

## 5. கர்மபூமி

தமிழர்களே! எழுந்திருங்கள்; கண்ணைத் துடைத்துக் கொள்ளுங்கள்; காதைக் கொடுத்துக் கேளுங்கள்; உலக நிலைமையை அறியுங்கள்; உங்கள் நிலைமையை உணருங்கள்; ஐரோப்பிய மூளையின் ஊக்கத்தைப் பாருங்கள்; உங்கள் மூளையின் தூக்கத்தை மாற்றுங்கள்.

நான் ஒண்ணும்பசலி எண்ணங்களிலேயே ஆழ்ந்து குகை மனிதனாயிருந்தேன்; என்னை இந்தக் கர்மபூமியான ஐரோப்பாவிற்குக் கொண்டுவந்த நண்பனை இப்போது வாழ்த்துகிறேன்; எனக்கு ஆங்கிலங் கற்பித்த போதகரைப் போற்றுகிறேன். ஆங்கிலம் உலகை ஆளுகிறது; ஆங்கில நாடு உலகின் இதயமாயிருக்கிறது. இதே தீவு நரிப்புதராயிருந்ததை நான் அறிவேன். இதே பிரித்தானியர் பச்சையூனருந்திப் பிறந்த மேனிக்குத் திரிந்ததை நான் பார்த்திருக்கிறேன். அதேகாலத்தில் நமது தமிழகத்தில் கரிகால் வளவனும், வள்ளுவனும், சங்கப்புலவரும், நெடுஞ்செழியனும் விளங்கியதை யான் அறிவேன். குறளையும், சிலப்பதிகாரத்தையும் பத்துப் பாட்டையும், எட்டுத் தொகையையும் பயப்படாமற் படித்துப் பாருங்கள்; நமது தமிழர் இருந்த நாகரிகச் சிறப்பு விளங்கும். அச்சிறப்புத் தாழ்வானேன்? விழிப்பும் முயற்சியும் இவர்களை உயர்த்தின. சோம்பலும், முரணும் உங்களைத் தாழ்த்தின. உணருங்கள், என்மரபீர், உணருங்கள்! ௰௲-ம் ஆண்டுகளாக நாகரிக வாழ்வு வாழ்ந்த தமிழீர் கேண்மின்! சுமார் ௫00 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர் இருந்த இடம் தெரி

யாது. இன்று இவர் இல்லாத இடம் கிடையாது. ஐரோப்பியரான உரோமர், நமது தமிழ்மன்னரின் வாசற் காப்பாளரா யிருந்தனர்; இப்போது நாம் அந்த வேலையை வகிக்கிறோம்! அவர்கள் நமது அரியணையை வகிக்கின்றனர். ருOO ஆண்டுகளுக்கு முன்பு "இந்தியா பொன்னும் மணியும் குலுங்கும் நாடு" என்று இவர்கள் நினைத்தனர்; அதற்குப் பாதை தெரியாது விழித்தனர். இந்தியாவைக் கண்டுபிடிப்பதாகச் சென்ற **கொலம்பஸ்,** படாத பாடுபட்டு 3-8-1492-ல், அமெரிக்கத் தீவுகளைக் கண்டு, அதையே இந்தியத் தீவுகளென நினைத்தான். 1498-ல் **வாஸ்கோடிகாமா** என்னும் போர்ச்சுகீசியக் கிழவன் ஆஃப்ரிக்காவைச் சுற்றிக் கொண்டு கொச்சிக்கு வந்து சேர்ந்தான். சில காலம் போர்ச்சுகீசியர் நமது தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றனர்; பெரும் பணம் குவித்தனர். 'நாமும் இந்திய வியாபாரத்தால் பணங்குவிப்போம்' என்று வந்தனர் டச்சுக்காரர். அவர்களும் நமது நாட்டிலும் கீழிந்தியத் தீவுகளிலும் குடியேறி அமுல் செலுத்திப் பணம் குவித்தனர். 'இதோ நாங்களும்' என்று பாய் மரக்கப்பலில் ஆங்கிலேயர் புறப்பட்டனர். அது எலிஜபெத் காலம்; கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயராற் சில ஆங்கில வியாபாரிகள் இங்கே வந்தனர். அவர்களுக்கு இருக்க இடம் தந்தது நமது சென்னை. பம்பாய் கல்கத்தா இரண்டிலும் அவர்கள் வியாபாரிகளாகவே ஊன்றிக் கொண்டனர்; ஓரிடம் சரக்குவாங்கி வேறிடம் இலாபகரமாக விற்றனர். அக்காலம் இந்திய அரசியல் தளர்ச்சியுற்றுப் பல சிக்கலாயிருந்தது. நாட்டு நிலையைப் பயன்படுத்திக்கொண்டு திராசுபிடித்தவர், வாளேந்திக் கட்சிப் போர்புரிந்து பிறகு நாடாளத் தலைப்பட்டனர். இவர்களுடன் போட்டிபோடப் பிரெஞ்சுக்காரர் வந்தனர். (**ஆனந்தரங்கபிள்ளை** தினசரியைப் பாருங்கள்); இறுதியில் ஆங்கிலேயர் தந்திரம் பலித்தது; அளப்பரிய இந்தியச் செல்வத்தால் இங்கிலாந்து குபேர நாடானது. நமது தமிழ்நாடு முன்னே ஏராளமான கப்பல் வியாபாரம் செய்தது. நமது துறைமுகங்களில் திமிங்கிலக் கூட்டங்கள் போலக் கப்பல்கள் நின்றன, சென்றன, வந்தன.

நமது நாட்டுப் பொருள்கள் உலகெங்கும் ஏற்றுமதியாயின. ஒரு காலம் தமிழரசி கடலரசியா யிருந்தாள்—இப்போது...! ஒரு காலம் நமது துறைமுகங்களில் யவனரும் சோனகரும் சரக்குவாங்கிச் செல்லக் காத்திருந்தனர். இப்போது...! தமிழர் கப்பல்கள் முன்னே செல்வங் கொண்டுவந்து குவித்தன, இப்போது!...நமது செல்வங்கள் கப்பல் கப்பலாக வெளியே செல்கின்றன. வாணிகச் செல்வத்தைக் கொண்டு ஐரோப்பியர் தொழில்களை ஏராளமாக வளர்த்தனர். தொழில் வளர்ச்சிக்கேற்ற இயந்திரங்களைச் செய்தனர்; இயந்திரங்களைச் செய்ய பூத–வேதி–கணக்கறிஞரை ஆதரித்தனர். பஞ்ச பூதங்களிலும் மறைந்து கிடக்கும் அற்புத சக்திகளை அவர்கள் ஆராய்ந்தார்கள். பதினெட்டாம் நூற்றூண்டில், இங்கிலாந்து ஏழைநாடாயிருந்தது. இரும்பும் நிலக்கரியுமே அதன் செல்வம். பத்தொன்பதாம் நூற்றூண்டில் விஞ்ஞானப் புலவர் எழுந்தனர்; புதுப்புது இயலுண்மைகளைக் கண்டனர். இருபதாம் நூற்றூண்டில் அவர்கள் உலகையே ஆளுகின்றனர். மரத்திலிருந்து கனி உதிர்வதை நாமும் பார்க்கிறோம்; ஒரு புதுமையும் நமக்குத் தோன்றுவதில்லை. ஒரு நியூடனுக்கு அதேகாட்சி, பூமியின் கவர்ச்சித் தன்மையை விளக்குகிறது. அதிலிருந்து ஒரு பெரிய விஞ்ஞான உண்மையைக் கண்டு, வளர்த்து மனித சமுதாயத்திற்குப் பயனுகும் இயந்திரங்களைச் செய்கின்றனர் ஐரோப்பியர். நாமும் உலைகொதிப்பதைப் பார்க்கிறோம்; சோறுனதும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுத் தூங்குகிறோம். அதே நீர் பொங்கி ஆவி பறப்பதைக் காணும் ஸ்டீவன்ஸன் நீராவியந்திரத்தைக் கண்டுபிடிக்கிறன். ஆர்க்கிமிடிஸ் தொட்டிநிரம்பிய தண்ணீரில் குளிக்க உட்காருகிறன். உடல் கனத்தால் தண்ணீர் வெளியே வடிகிறது. வடிந்த தண்ணீரின் கனத்தை அளக்கிறன். அதிலிருந்து ஒரு உண்மை புலனுகிறது. அந்த உண்மையிலிருந்து ஆராய்ச்சி மூளை பெரிய கப்பலைக் கட்டியமைக்கிறது. அக் கப்பல் தொழில் வளர்ந்து, தற்காலத்தில் ஒரு நகரம்போலக் கடலில் செல்லும் நீராவிக் கப்பல்களை உண்டாக்குகின்றது. பறவை பறப்பதின் நுட்பத்தை ஒருவன் அறி

கிருன். காற்றின் தன்மைகளை ஆராய்கிருன். கணக்குப் போடுகிருன். ஆராய்ச்சி ஆகாயக் கப்பலில் வந்து முடி கிறது. ஒரு **மார்க்கோனி** தனது மாடியறையில் ஏதோ தனியாக மின்சாரப் பேழைகளை வைத்துக் கம்பிகள் இணைத்து ஆராய்ச்சி செய்கிருன். ஊண் உறக்க நினைப்புக்கூட இல்லாமல் பலமாக ஆராய்கிருன். அதன் பலனாக உலகெங்கும் செய்தியனுப்பும் தந்தியைக் கண்டு பிடிக்கிருன். மற்ருெரு விஞ்ஞானி அதற்குமேல் ஆகாச மின்சார அணுக்களை ஆராய்கிருன். பூதக் கண்ணு டிக்குக்கூடப் புலப்படாத மின் அணுக்கள் அவன் கணக்கில் அகப்படுகின்றன. அதைக்கொண்டு தந்தி யில்லாமலே செய்தியனுப்பும் சூழ்ச்சியைக் கண்டுபிடிக் கிருன். நாமும் வேதகாலம் முதல் ஆகாயம் சப்த தன்மாத்திரை என்றறிவோம். பயன்? ஆகாயத்தின் மூலம் இதோ உலகெங்கும் ஒலியைப் பரப்புகின்றனர். **மாதாம் க்யூரி** என்னும் அறிஞை, குடும்ப வாழ்வில் இருந்துகொண்டே, இரவும் பகலும் உழைத்து **ரேடியம்** என்னும் அரிய பொருளைக் கண்டுபிடிக்கிருள்; அதைக் கொண்டு பல புண்களைத் தீர்க்கிருள். இது **ரேடியோ யுகம்** என்பது உங்களுக்குத் தெரியும். ஒளியும், ஒலி யும், மின்சாரமும், மின் அலைகளும், நீராவியும், இரும் பும், நிலக்கரியும் பௌதிக இரசாயனக் கருவிகளும் செய் யும் அற்புதங்களை அளவிடமுடியுமா? கிருதயுகக் கிழ வனுகிய நான் சொல்ல வேண்டியதில்லை; இருபதாம் நூற்ருண்டில் வாழும் நீங்களே பார்த்துக் கொள்ளுங் கள்! எந்தத் துறையில் புகுந்து பார்த்தாலும் ஐரோப்பியர் நிகரற்று விளங்குகின்றனர்.

ஐயா, புதிதாக எதுவும் கண்டுபிடிக்காமல் போனு லும், பழைய அறிவைக் காக்கவாவது நமக்குத் தெரி கிறதா பாருங்கள். நமது நூல்களை ஆங்கிலேயர் மொழிபெயர்த்துக் காப்பாற்றியிருக்கிருர்கள். உதாரண மாக நான் ஏராளமான வைத்திய நூல்களை எழுதி னேன்; எனது நண்பரான தன்வந்திரி, சரகர், ஸுஸ்ருதர் முதலியோரும் அரிய நூல்கள் எழுதினர்; எனது நூல்களெல்லாம் மறைந்தொழிந்தன. என் பெயரால் சில போலி நூல்கள் வழங்குகின்றன. சித்த—ஆயுர்வேத

வைத்தியமுறை நமது நாட்டிற் கேற்றது. ஏன் அந்த முறை அமோகமாக வளர்ந்து உலகெல்லாம் பரவக் கூடாது? நமது வைத்தியரிடம் நோயைச் சொன்னால், கஷாயம்போடப் பச்சிலைகள் தேடவேண்டும்; ஒரு லேகியம் செய்ய, மாத்திரை பஸ்பம் சிந்தூரம் செய்ய, நம்மவர் செய்யும் ஆர்ப்பாட்டங்கள் கொஞ்சமன்று. இங்கே நோயைச் சொல்ல வேண்டியதுதான்; மருந்து கைக்கு வந்துவிடும். எவ்வளவு சுத்தமாக மருந்தைச் செய்து, ஏற்பாடாக உலகெங்கும் அனுப்புகின்றனர்! அவர்கள் நமது வைத்திய முறையை அறிந்துகொண்டு, அதை ஆராய்ச்சியால் வளர்த்து, தக்க நிபுணர் சங்கங் கூடி மருந்து செய்கிறார்கள். உடல் நூல்களையும் வைத்திய நூல்களையும் படப்பொலிவுடன் தெளிவாக, விரிவாக எழுதுகின்றனர். மருத்துவக் கல்லூரிகள் நிலை நாட்டி அவற்றை மாணவருக்குப் பயிற்றுகின்றனர். அந்த மாணவர் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும்போது, தமது மருந்துகளையே வாங்கி ஜனங்களுக்குக் கொடுக்கச் செய்கின்றனர். கலையைக் காசாக்கும் தந்திரம் எப்படியிருக்கிறது பாருங்கள்! நான் பண்டைக்கால வைத்தியன். பல பச்சிலைகளை அறிந்தவன். நாடி சாத்திரம் அறிந்தவன். இருந்தாலும் ஒரு முட்டாள்போலே இங்கே வியந்து விழித்தேன். எனது நண்பர் முதலில் என்னை ஆங்கில மருத்துவ நிலையத்திற்கே அழைத்துச் சென்றார். அங்கே பீரோ பீரோவாகப் புத்தகங்கள் அடுக்கப் பெற்றிருந்தன. அவற்றில் ஒரு தமிழ்ப் புத்தகம்கூட இல்லை; தமிழ் செய்த பாவம்! ஆயுர்வேத நூல் மொழிபெயர்ப்பு மட்டும் இரண்டொன்று ஒரு மூலையில் இருந்தது. மற்ற ஆயிரக்கணக்கான நூல்களும் சஞ்சிகைகளும், படங்களும், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் பாஷைகளில் இருந்தன. ஆ! மனிதவுடலை அணுவணுவாக ஆராய்ந்து ஒவ்வொரு பாகத்தையும் படம் பிடித்து, எளிய இனிய நடையில் வருணித்திருக்கின்றனர்; ஒவ்வொரு நோய்க்கும் காரணம், குறி, சிகிச்சை இவற்றை எழுதி அச்சிட்டிருக்கிறார்கள். தத்தமக்கு இசைந்த துறையில் புலவர் ஆராய்ச்சி செய்கின்றனர். ஒருவர் கண்ணைமட்டும் ஆராய்கிறார்; மற்றொருவர் மூளையை

மட்டும் ஆராய்கிருர்; இன்னொருவர் காதை ஆராய்கிருர். அதன் பயன் நூலாகிறது, மருந்தாகிறது, இயந்திரமாகிறது, வியாபாரமாகிறது, பணமாகிறது. மருத்துவக் கருவிகளைப் பார்த்தேன். ஆ, எவ்வளவு நுட்பமான வேலைப்பாடுகள்! பிறகு மருந்து செய்யுமிடத்தை நோக்கினேன். என் ஆசிரிய விருத்தங்கள் பறந்துபோயின. அங்கே மூலிகைகள் வகை வகையாகக் குவிந்திருக்கின்றன; அவற்றினின்று சுத்தமாக மாத்திரைகளும், சூரணங்களும், திராவகங்களும் செய்து அழகான புட்டிகளில் அடைத்து, பெயர் அச்சிட்டுக் கப்பலேற்றுகின்றனர். அயல் நாடுகளினின்றே அந்த மூலிகைகள் வருகின்றன. உதாரணமாக மருங்காபுரியிலிருந்து எட்டிக் கொட்டை வருகிறது. அதைப் பக்குவம் செய்து மூளை மாத்திரை செய்கின்றனர். நமது நாட்டில் எவ்வளவோ அரிய மூலிகைகள் உள்ளன. முற்காலம் மூலிகைத் தோட்டத்திலேயே வைத்தியசாலை இருந்தது; அங்கேயே மருந்து செய்து நோயாளிகளுக்குத் தந்தனர். அக்காலம் மலையேறியது. ஊருக்கு ஊர் ஆஸ்பத்திரிகளும் ஆங்கிலப் புட்டி மருந்துகளுமா யிருக்கின்றன. இவற்றைத் தவிர உணவு வகைகள் ஏராளமாகச் செய்து அழகான டப்பிகளில் அடைத்து விற்கிருர்கள். ஒருவன் பாலைச் சுண்டக் காய்ச்சி சர்க்கரை சேர்த்து டப்பியில் அடைக்கிருன்; 'கண்டென்ஸ்ட் மில்க்' என்று ஏராளமாக விளம்பரம் செய்து விற்றுப் பணம் அள்ளுகிருன். ஒருவன் மீன் எண்ணெய் (*Cod Liver Oil*) விற்று இலட்சாதிபதி யாகிருன். மற்ருெருவன் ஓவல்டின் விற்றுப் பொருள் குவிக்கிருன். இந்த மாதிரி ஏதாவது ஒன்றைச் சுறுசுறுப்பாகச் செய்து, காலத்தை உழைப்பாக்கி, உழைப்பை ஊதியமாக்கிப் பிழைக்கின்றனர் ஐரோப்பியர்.

நான் பௌதிக இரசாயனச்சாலைக்குப் போனேன்; அங்கே போகரின் மாணவர் செய்த ஆராய்ச்சிகளைப் பார்த்தேன். சாத்திர நூல்களைப் பார்த்தேன்; அந்நூல்களைக் கற்கத் துணையாகும் ஏராளமான கருவிகளைக் கண்டேன், வியந்தேன். நானே மாணவனுகி அவற்றை யெல்லாம் ஆர்வமுடன் கற்றேன். ஐரோப்பியர் பூதவேதி கணிதந்

களில் நிபுணர்; அவர்கள் இயந்திரச்சாலையில் செய்யும் வேலைகளைக் கண்டேன். நானும் மாணவனாகிப் புத்தறிவு பெற்றேன். வெறும் இரும்பிற்கு உயிர் கொடுத்து உலகையே வெல்லுகின்றனர் ஐரோப்பியர். அவர்கள் ஆராய்ந்து செய்த இயந்திரங்களைக் கண்டேன். என் வியப்பிற்கு எல்லையில்லை! கிழவனாகிய நான் வாலிப ஊக்கத்துடன் இயந்திர நுட்பம் கற்றேன். ஐரோப்பியர் செய்த ஆராய்ச்சியாலே தான், இன்று இருபதாம் நூற்றுண்டில் புதிய வாழ்க்கை வாழுகிறீர்கள். அச்சுப் பொறியில்லாவிட்டால், அருவிபோலக் காயிதத்தைச் செய்து குவிக்கும் இயந்திரம் இல்லாவிட்டால், அறிவு இவ்வளவு பரவி யிருக்காது. நமது ஓலைச் சுவடிகளெல்லாம் காலக்கறையானுக்கு இரையாகி இருக்கும். அக்காலம் இலக்கண இலக்கியங்கள் படிக்க வேண்டுமானுல், ஓலை தேடவேண்டும். சுயநலப் புலவர் ஏடுகளைத் தரமாட்டார்கள். அங்குமிங்கும் ஓலைச்சுவடி வைத்திருக்கும் புலவர் அடித்தொண்டராகிக் கற்க வேண்டும். இப்போதோ முக்காலணு கார்டு எழுதிப் போட்டால், வேண்டிய புத்தகம் நம்மைத் தேடிவரும். நூற்று நெய்யும் இயந்திரத்தைப் பார்த்தேன்; நம் நாட்டிலிருந்தே பருத்தியைக் கொண்டுவருகின்றனர். அதை நூற்று நெய்து அருவிபோல ஆடைகளைக் குவிக்கின்றன இயந்திரங்கள். பேல்பேலாக ஆடைகளைச் சுமந்து சென்று, கப்பல்கள் பணமூட்டையுடன் வருகின்றன. நமது நாட்டிலும் ஏராளமான இராட்டினங்களும் மணைகளும், தறிகளும் இருக்கின்றன. நூற்று நெய்யும் தொழிலாளிக்குத் தினம் ஒரு ரூபாயாவது கிடைக்கும்படியான சாதனம் இன்னும் நமக்குத் தெரியவில்லை. நமது தொழிலாளர் இரண்டணுவும் நாலணுவும் பெற்று, அதுவும் கிடைக்காமலும் பட்டினி கிடக்கின்றனர். தொழிலும் அதற்கேற்றபடிதான் வறண்டு போகின்றது. என் னருமைக் குழந்தைகளே! உங்களைத் தாழ்வாகச் சொல்லவில்லை. ஐரோப்பியர்போலப் புதுப்புது ஆராய்ச்சிகளைச் செய்து, காலத்திற்கேற்ற முன்னேற்ற மடையவேண்டுமென்றே உங்களைத் தூண்டுகிறேன். என் சந்ததிகளான உங்கள்மேல் வைத்த பாசத்தால், எனக்குத்

தோன்றிய நல்வழியைச் சொல்லுகிறேன். வெள்ளை யருக்கு இயன்றது உங்களுக்கும் இயலும். மனத்திட்ப மும் வினைத் திட்பமும் இருந்தால் அரிய செயல்களை நீங்களும் செய்வீர்கள். தாத்தாவின் ஆசீர்வாதம் உங் களுக்கு உண்டு; என் மனங்குளிர நீங்கள் உலகில் தலைநிமிர வேண்டும்; 'வீரர், தீரர், அறிஞர், புலவர், விஞ்ஞான சித்தர்' என்று புகழ் பெறவேண்டும்! சிங்கம் போல் எழுந்திருங்கள்!...

அகஸ்தியர் திடீரெனப் பேச்சை நிறுத்தி மறைந் தார். என் உள்ளத்தில் உணர்ச்சியலைகள் எழுந்தன. என் சம்ஸாரத்தின் கெடுபிடிக்குப் பயந்து இரண்டு வாய் அள்ளிப் போட்டுக்கொண்டு நான் திண்ணை மூலை யில் உட்கார்ந்து, தமிழின் கதியைப் பற்றியே சிந்தித் தேன். "ஐயோ தமிழே, அனாதையாய்ப் போனாயே!" என்று விம்மி யழுதேன். தமாஷ் அரங்கன் வந்தான். "ஏண்டா பாட்டையா, தமிழுக்குப் பிலாக்கணமா பாடுகிறாய்? தனியாக அழுகிறாயே! அப்போதே தெரிந் தால் ரேடியோவில் அழச்சொல்லி யிருப்பேனே; உன் அழுகையைத் தமிழ்நாடெல்லாம் கேட்குமே! 'தமிழுக்குத் தமிழரே அழவேண்டும்' என்றொரு இயக்கம் ஏற்படுத்து வோமா பாட்டையா?" என்று என்னைக் கிச்சுக் கிச்சு மூட்டினான். "சும்மா இருடா அரங்கா, பகவான் பேச்சு என் தமிழுணர்ச்சியைச் சவுக்கடி தந்து எழுப்பியது!" என்றேன். "ஏண்டா பாட்டையா, உன் பகவான் பேச்சில் இன்று தமாஷே காணோமே; யாரும் சிரிக்கக் காணோம்; எல்லாரும் அழவே வேண்டுமென்றுதான் இப் படிப் பேசினாரோ? ஆனால் அல்லோபத்தியைப் (*Allopathy*) பற்றி நன்றாகச்சொன்னார்" என்று அரங்கன் முடித்தானோ இல்லையோ, "*What did you say...Gutter pathy?*" (என்ன சொன்னீர்...சாக்கடை வைத்தியர்) என்றொருவர் எனிமா ரப்பரைச் சுழற்றிக்கொண்டு வந்தார். "நான் சென்ஸ்" (*Nonsense*) என்றொருவர் ஸ்டேதாஸ் கோப் புடன் (துடிப்பறி கருவி) டக்டக் என்று தடபுடலாக பூட்ஸை அழுத்தி மிதித்துவந்தார். "யாரை 'நான்சென்ஸ்' என்றாய்? உனக்கு பிரசண்ட பேதிமாத்திரை கொடுப் பேன்" என்றொருவர் கல்வக் குழவியைத் தூக்கிக்

கொண்டு வந்தார். "உளருதேயும் என் சூரத்தாவாரைக் கஷாயத்தைக் குடித்துப்பாரும்!" என்று மற்றொருவர் பச்சிலைகளுடன் வந்தார். "நான் ஓமியோபதியாக்கும்" என்றொருவர் ஒரு புட்டித் தண்ணீருடன் வந்தார். எல்லாரும் என்னைச் சூழ்ந்துகொண்டு, "கொண்டா உன் அகஸ்தியரை" என்று மிரட்டினர். இதற்குள் என் மனைவியின் கட்டளை வந்தது; உள்ளே ஓடினேன்.

---

## 6. மேற்கும் கிழக்கும்

### வைத்திய ரகளை

எங்கள் ஊரில் வக்கீல்களுக்கும், வைத்தியர்களுக்கும், காப்பிக் கடைகளுக்கும் குறைவேயில்லை. நானிருக்கும் இந்த நடுத்தெருவில் பத்து வைத்தியர்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! தெருவில் வைத்தியம் பார்த்துக்கொள்ளக் கொஞ்சம் பசையுள்ள ஆசாமி வந்துவிட்டானோ, ஆளை எமலோகத்திற்கனுப்பப் போட்டிபோடுவர். "இயற்கை" என்றால் போதும், டாக்டர் வைகுண்டம் ஏழுகட்டைக் குரலெடுத்து "மெடீரியா மெடிகா" முழுதும் ஒப்பிப்பான். "சித்தாமணி வாகடனார்" என்றால், "பிஷக்வைரம் பிச்சுமணி" புலிபோலப் பாய்ந்து உறுமுவார். "ஓமியோபத்தி கங்கா ஜலம்" என்றால் அல்லோப்பத்தி அகோரமையர் புயல்போலச் சீறுவார். தலைகால் வலித்தால் டாக்டர்களிடம் சிக்காமல் நான் லங்கணம் போட்டுவிடுவேன்; மறுநாள் சரியாய்ப் போகும். அடிக்கடி இவர்கள் விவாதம் என் வீட்டுத் திண்ணைக்கு வரும்.

இன்று கால்மணி நேரம் கூச்சல் பொறுக்க முடியவில்லை: "என்னங்காணும் பேசாதிருக்கிறீரே?" என்று எல்லாரும் என்னை மிரட்டினர். "நீங்களெல்லாரும் மெத்தப் படித்தவர்கள்; துவேஷ ஜன்னி தீர ஒரு மருந்து சொல்லுங்கள்" என்றேன். ஆரம்பித்தார் சித்தமணி வாகடனார்:

"மிளகுசுக்கு திப்பிலி இலவங்கத்தோடும்
மேலான தும்பைவேர், வேப்பம்பட்டை
அளவுசம னாகவே அவுரிப்பட்டை
அபிராமி மந்திரத்தால் அரைத்தும்கூட்டி,
குளிகைசெய்து குமரித்தாய் அருளினாலே
குளிர்சன்னி நீங்கவெனக் கொடுத்துப்போடு;
விளங்குமிதன் குணமிரண்டு விநாடிக்குள்ளே
வேதமுனி அகத்தியன்யான் விளம்பினேனே!"

**பிஷக்வைரம்** :—முழுப் பிசகு.

"ஜீர்ணே ஹிதம் மிதம் சாத்யாத்......" என்கிறார் வாக்பட்டாச்சாரியார். முன்னே சாப்பிட்டது ஜீர்ணமானதா என்று பாராமல் எப்படி மருந்துகிட்டப் போவீர்?

**இயற்கை** :—பைத்தியக்காரரே......சாப்பாடா!...... கிட்டவரக்கூடாது. பட்டினி, எனிமா முழுக்கு; தொட்டி முழுக்கு, எனிமா, பட்டினி.

**ஓமியோ** :—அப்படியே ஜபம் பண்ணும்; அதற்குள் ஆளே எமலோகம் போவான். மருந்து வேண்டியது தான்; ஆனால் நிரம்பத் தண்ணீர் விட்டுக் கரைத்துத் தர வேண்டும்.

**டாக்டர்** :—நான்ஸென்ஸ்! எல்லாம் பழைய பைத்தியங்கள். எனிமா எங்கள் கருவியல்லவா? தொட்டி முழுக்கு எங்கள் "மெடீரியா மெடிகா" 93-ஆம் பக்கத்தில் உள்ளதே. எங்கள் வைத்திய புத்தகத்தில் இலட்சம் லத்தீன் பெயர்கள் உண்டே. காய்ச்சல் ஜன்னி என்றால் அந்த அத்தியாயத்தைத் திருப்ப வேண்டியது தான்.

*Quin Sulph. 2 grs. Ferri Sulph. ½ gr. Pulv. Biscarb 2½ grs*......என்று இருக்கும். பார்த்து மளமளவென்று கலக்கிப் புட்டியில் விட்டு வாயில் ஊற்ற வேண்டியது தான்.

**ஆயுர்** :—ஓய், உமது பரிபாஷையும் பிரம்ம லிபியும் உமக்குத்தான் விளங்கும். சீமையிலே மருந்துபண்ணிப் புட்டியிலடைத்து வந்தால், நீர் அதை வியாபாரம் பண்ணும் ஏஜெண்டாயிருக்கலாம். அந்த மருந்தை நீர் இங்கே பண்ண முடியுமா? ஒரு பஸ்மம், சிந்தூரம், லேகியம் என்றால் நானே பண்ணித்தருவேனே......சித்த

மணியும், பிஷக் வைரமும், விருத்தங்களும், சுலோகங்களும் கொட்டிப் பழி சண்டை போட்டனர். இச்சமயம் எங்கள் பாட்டி உள்ளேயிருந்து வந்தாள். "ஏண்டாப்பா, ஏனிந்தச் சண்டை? ஒரு நாள் லங்கணம் போட்டு வேது பிடித்து, வேப்பம் பட்டையும் விஷ்ணு கிராந்தமும் போட்டுக் கஷாயம் கொடுத்தால் ஜுரம் பறக்குமே......" என்று கையைக் கன்னத்தில் வைத்து நின்ருள். நான் மூக்கில் விரலை வைத்து, "சபாஷ், பாட்டி! இயற்கை, சித்த வைத்தியம், ஆயுர்வேதம்...... எல்லாம் சேர்ந்த ஒரு சிகித்சை சொன்னுய்" என்று மகிழ்ந்தேன். பாட்டியை மறுத்துச் சொல்ல ஒரு வைத்தியரும் முன்வரவில்லை. இருந்தாலும் அந்த ஐந்து பேர் சத்தமும் ஓயவில்லை. "நீங்கள் துவேஷ ஐன்னிவிட்டு ஒற்றுமையாகி வாருங்கள்" என்று அவர்களை அனுப்பினேன். ரேடியோ அழைக்கிறது.

டங், டங், டங் என்று மணியடித்தது; அகஸ்தியர் பேசுகிருர்:

"என் அருமைச் சந்ததிகாள்! ஒற்றுமை, கூட்டவுணர்ச்சி, மனித சக்திகளைப் பயன்படுத்தி எதையும் ஆராய்தல், புதுமை வேட்கை, அயரா முயற்சி—இவையே வெள்ளைக்காரர் முன்னேறக் காரணமானவை. நான் ஆங்கிலம் நன்ருகக் கற்ற பிறகு, பிரெஞ்சு, ஜர்மன், கிரேக்கு, லத்தீன், இத்தாலியன், ரஷ்ஷியன் ஆகிய ஆறுமொழிகளையும் எளிதாகப் பயின்றேன்; போகர் ஆராய்ச்சிசாலையில் பௌதிக, ரசாயன, தாவர, இயந்திர, கணித ஆராய்ச்சிகளைச் செய்தேன்; இயந்திரக் கணிதம் கற்றேன். முயன்ருல் எல்லாம் எளிது. அந்தந்தச் சாத்திரங்களுக்கு வெள்ளைக்காரர் எழுதியுள்ள புத்தகங்களைப் பார்த்துச் சொக்கிப் போனேன். என் ஓலைச் சுவடிகளைக் கடலும் கரையானும் உண்டு தீர்த்ததற்கு நான் வருந்தவேயில்லை. இலண்டன் புத்தகசாலையைப் பார்த்தேன்; அப்படியே மூர்ச்சையானேன். உலக நூல்களெல்லாம் அங்கே உள்ளன. திருவாசகம், குறள், நாலடியார் முதலிய தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்புகள் அங்கேயிருந்தன. வடமொழி நூல்கள் பல ஆங்கிலத்தில் அழகாக மொழிபெயர்த்து அச்சில் வந்துள்

ளன். ஆங்கிலம் தெரிந்தால், உலக மொழிகளிலுள்ள விஷயங்களெல்லாம் அறியலாம். ஆங்கிலப் பேரகராதியைப் பார்த்தேன். அதில் இலமூரியாவையும், என்னையும்பற்றிக்கூட விவரங்கள் இருந்தன. இலட்சக்கணக்கான நூல்களை வெள்ளைக்காரர் வெளியிட்டுதவியிருக்கிறார்கள். நாம் நமது நூல்களைத் தேடுவதில்லை. நமது சாத்திரங்களைக்கூட மொழிபெயர்ப்பாலேயே நாம் கற்கிறோம்; வெட்கம்! ஆனால் தமிழில் இன்னும் அவர்கள் கருத்தூன்றவில்லை. நமது தமிழின் அருமையை நாமே உலகிற்கு விளக்க வேண்டும்.

குழந்தைகாள்! நான் இலண்டன், மாஞ்செஸ்டர், டப்ளின், பாரிஸ், பெர்லின், லெனின்கிராட், ரோம் ஆதென்ஸ், மாட்ரிட் முதலிய பெரிய நகரங்களுக்குச் சென்று வெள்ளைக்காரர் முன்னேற்றத்தைக் கண்டு வியந்தேன்; கல்வி, இலக்கியம், கவிதை, நுண்கலை, இயந்திரக் கலை, அரசியல், வாணிகம், போர்ப்படை முதலிய எதைப் பார்த்தாலும் ஒரு முறைவகுப்பு, ஒழுங்கு, முயற்சி, வெற்றி, செழிப்பு, இவற்றுடன் கூடிய ஐரோப்பியர் வாழ்வைக் கண்டேன். நாளுக்குநாள் அங்கே புதிய ஆராய்ச்சிகள் செய்து வெற்றி பெறுகிறார்கள்.

நம்மவர் அப்படி உலகில் வளம்பெற வேண்டுமென நான் நினைத்தேன். நான் மனப்பால் குடிக்கிறேனென்றெண்ணுதீர்கள். என்னருமைச் செல்வர்காள்! முயன்றால் நீங்கள் இன்னும் மேன்மையாயிருக்கலாம். உங்களுக்கு அருளுணர்வு மிகுதி. அத்துடன் பொருளும் சேர்ந்தால், வீறுபெற்று வாழ்வீர்கள்! பாரிஸ் பல்கலைக் கழகம் தாய்மொழிக்குச் செய்த பணியை நீங்களும் தமிழுக்குச் செய்ய வேண்டும். அங்கே சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒவ்வொரு கலைக்கும் புலவர்குழு ஏற்படுத்தி அக்கலையை நன்றாக வளர்க்கிறார்கள்; அதற்குரிய நூல்களை வெளியிடுகிறார்கள். தமிழிலும் அம்மாதிரிக் காரியம் விரைவாக நடக்க வேண்டும்.

ஒரு காரியத்தை மேற்கொண்டால் அது நிறைவேறுமட்டும் ஐரோப்பியர், விடாது தளராது கருத்தூன்றி உழைப்பர். உயிர்போனாலும் கொள்கையை விடமாட்டார்கள். அவர் முயற்சியை நாட்டார் ஆதரிப்

பர். அம்முயற்சி வென்றதும், நாட்டிற்குப் பயன்படுத்துவர்; முயற்சியாளருக்குச் சன்மானமளிப்பர். வெள்ளைக்காரன், 'காரியமுண்டு, தானுண்டு' என்றிருப்பான். அவன் கால் எங்கே சுற்றினாலும், கண் வரும்படியிலேயே இருக்கும். 'இன்று புதிதாக என்ன கண்டு பிடிக்கலாம்' என்று வெள்ளைக்காரன் எழுந்திருக்கிறான்; அப்படியே ஏதாவது ஒரு புதுமையைக் காண்கிறான். நியூடன் முதல் மாக்ஸ்வெல், எடிஸன், ஈன்ஸ்டின்வரையில் எல்லா விஞ்ஞானப் புலவர்களின் ஆராய்ச்சிகளையும் பார்த்தேன்; அந்த மாதிரி நானும் ஆராய்ச்சிகள் செய்தேன். ஐரோப்பியரின் கலைவளம் எனக்குப் பிடித்திருக்கிறது. அதையே நம்மவர் பெறவேண்டும். மற்றத் துறைகளில் நமக்குக் குறையில்லை.

எனது கலை வளர்ச்சியைப் போகர் வியந்தார். அவர் மனைவிக்கு இப்போது ஆங்கிலத்திலேயே தமிழின் அருமையைப்பற்றிப் பேசி வந்தேன்; கருத்துடனே கேட்டாள். கற்கவேண்டியது கற்றாயிற்று; கண்டம் முழுதும் சுற்றியாயிற்று; இனி அமெரிக்கா, ஜப்பான் இரண்டையும் பார்த்துக்கொண்டு, பாரதவர்ஷம் செல்லலாமென்று நினைத்தேன். போகர் "நண்பா, உனக்கு அழகான வெள்ளைக்காரியைக் கூட்டுகிறேன்; ஜோராயிரேன்" என்றார்; ஐயோ வேண்டாம்; என்னைக் கட்டாயப்படுத்தினால் தேம்ஸ் நதியில் விழுந்து சிவலோகம் போய்விடுவேன்" என்றேன். போகர், "தொலை; உனக்கு அந்தக் கருநாடக உலோபா முத்திரைதான் சரி" என்று பயணத்திற்குத் தயாரித்தார். இருவரும் கூடி ஒரு விமானமும் செய்து முடித்தோம். இதற்குள் என் பெயர் பலருக்குத் தெரிந்துவிட்டது. நண்பரெல்லாரும் கூடி எனக்கொரு பெரிய விருந்து வைத்தனர். அப்போது நான் "மேற்கும் கிழக்கும்" என்பதைப்பற்றிப் பேசினேன்:

"மேற்கு கர்மபூமி, போகபூமி; அங்கே மூளையாலும் உடலாலும் மனிதன் உழைக்கிறான்; புதுப்புதுக் கருவிகளைக் கண்டுபிடிக்கிறான்; இடத்தையும் காலத்தையும் வெல்லுகிறான். குண்டு, பீரங்கி, கடல்வெடி, தரைவெடி, பறக்கும்வெடி, காந்தவெடி, கப்பல், ஆகாசக் கப்பல், இரயில், மோட்டார், பல தொழில் இயந்திரங்கள்

இவை அனைத்தையும் செய்கிறான்; விற்கிறான், பொருள் குவிக்கிறான், தாராளமாகச் சுகிக்கிறான்; தனது சுக போகங்களுக்கு எதிர்செய்பவரைக் கொல்லுகிறான்; உலகை வெல்லுகிறான். 'பணம், பலம்' இரண்டே அவன் பல்லவி. கிழக்கு தருமபூமி, ஞானபூமி, யோகநிலயம். இங்கே அந்தக்கரணங்களை அடக்கி, ஆன்ம வுணர்வு பெற்ற பேரின்ப ஞானிகளை வணங்குவர்; தானதரு மங்கள் ஏராளமாகச் செய்வர். இங்கே அருளுணர்ச்சி யுள்ளது; அங்கே பொருள் நிறைவுள்ளது. அருளும் பொருளும் சேர்ந்தால், கிழக்கும் மேற்கும் சரி நிகர் சமானமாக முன்னேறலாம். ஒன்றையொன்று அறிய வேண்டும். ஒன்றின் தீமையை விலக்கி நலத்தை மற் றொன்று பயில வேண்டும். தியானம், பக்தி, பரோப காரம் எல்லாம் வேண்டும். அத்துடன் காலத்திற்கேற்ற இயற்கையறிவும் வேண்டும். வெள்ளைக்காரர் நமக்கு விஞ் ஞானமும் இயந்திரக்கலையும் தரட்டும்; அந்த வகையில் அவர்களை ஆசிரியராக ஏற்போம். பாரத தேசம் தனது அத்யாத்மக்கலையை வெள்ளைக்காரருக்குத் தரட்டும். இரண்டும் உடலும் உயிரும்போல் விளங்கி, உலகை இன்பமாக வாழச் செய்யட்டும். மேற்கின் சக்தியும், கிழக்கின் ஞானமும் சேர்ந்து, புதிய ஜாதி, புதிய வாழ்க்கை விளங்கும் நாளை எதிர்பார்ப்போம்; உங்கள் வாழ்விலும் மேற்கும் கிழக்கும் முறைப்படி இணைந் திருக்கட்டும்."

மறுநாள் இலண்டனிலிருந்து விமானத்தில் போக ருடன் கிளம்பினேன். மேலிருந்து வெள்ளைக்காரர் நாக ரிக வாழ்வைப் பார்த்து "ஆஹா, எவ்வளவு அற்புத மான ஜனங்கள்! என்னென்ன புதுமைகளை யெல்லாம் தினந்தினம் கண்டுபிடிக்கிறார்கள்!" என்று வியந்தேன். அப்போது "டமார், படார்! படார்டொம்! டொப்" என்று ஊழியிடிபோலக் கேட்டது. "என்னங்காணும் தீபாவளியோ?" என்றேன். "ஆமாம், இதுவும் ஒரு தீபாவளிதான்! உமது நாட்டில் தீபாவளிக்குச் சீனி வெடியை நுனியில்பிடித்துச் சுடக் கூடப் பயப்படுவர். வெங்காய வெடியை எறியக்கூடக் கைகூசுவர். இந்தத் தீபாவளியைப் பாரும்!" என்றார். வட்டமிட்டுப் பார்த்

தோம் : அதோ ! ஆ ! இராக்ஷஸ பீரங்கிகளைத் தாங்கிப் பிரம்மாண்டமான கப்பல் செல்லுகிறது. 'டபார்' என்ற சத்தம். ஐயோ, சிவனே ! கப்பல் பாதாள யாத்திரை போய் விடுகிறது. அதிலிருந்த ஆயிரம் பேரில் 800 பேர் எமலோகம் போகின்றனர். மீதிப்பேர் தத்தளிக்கின்றனர். சில படகுகள் வந்து அவர்களைக் கரையேற்றுகின்றன. குழந்தை குட்டிகளை இழந்த தாய்மார், கணவரை யிழந்த இளம்பெண்கள் அலறித் தவிக்கின்றனர். தீவு மிதந்து வருவதுபோலே இன்னொரு கப்பல் ஏராளமான சரக்கேற்றி வருகிறது. ஆகாச குண்டு விழுகிறது. கப்பலில் புகை எழுந்து சூழ்கிறது. பகைக்கப்பல் வந்து அதிலுள்ள சாமான்களைக் கொள்ளையடிக்கிறது. ஒரு போர்க்கப்பல் எதிரிக் கப்பலைத் துரத்துகிறது. படக்கென்று அதன் அடியில் ஏதோ இடிக்கிறது. கப்பல் ஓட்டையாகிறது. பத்து நிமிஷம்... பாதாள ப்ராப்தி ! அதோ ஒரு நீர் மூழ்கி ! அது தண்ணீருக்குள் செல்லுகிறது; பகைக் கப்பல்களை உடைக்கிறது. மற்றொரு திசையில் ஆகாயத்திலிருந்து குடை மாதிரி வருகிறது. அதிசயம் ! அதில் ஆள் தொங்குகிறான்; குறித்த இடத்திற்கு வந்து குதிக்கிறான். கப்பல் சண்டைகளைப் பார்க்கும்போதே, ஆகாசக் கப்பல்கள் ஒன்றை யொன்று துரத்திச் சுட்டன. ஆகாசக் கப்பல்கள் உடைந்து கீழே விழுகின்றன. கூட்டம் கூட்டமாக ஆகாசக் கப்பல்கள் வருகின்றன. பகை நாட்டில் எதையோ தூக்கிப் போடுகின்றன. ஊர் ஊராய்ச் சாம்பலாகின்றன. "போகரே, எதற்காக உமது மாணவர் இப்படி விஞ்ஞானத்தைக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள்?" என்று கேட்டேன். "அதோ இருக்கும் சிறிய தீவை அந்தப் பெரியநாடு கேட்கிறது. தீவைச் சேர்ந்த நாடு பிடிவாதமாக மறுக்கிறது. "நீ தரவேண்டாம்; நானே எடுத்துக் கொள்கிறேன்" என்று பெரிய தேசம் குண்டு போடுகிறது. இதுதான் இன்றுலக நிலை" என்றார். 'பயங்கர ஐரோப்பாவே, விடைபெற்றுக் கொள்கிறேன்' என்று அமெரிக்காவை நோக்கிப் பறந்தேன். அமெரிக்காவிலும் அதே அறிவு, தொழில் முயற்சி, அதே நாகரிகம்,

கலை, விஞ்ஞானம், வாணிகம். எடிஸன் ஆராய்ச்சிச் சாலையைப் பார்த்தேன்; விவேகானந்தர் பேசிய சிக்காகோ சபையைப் பார்த்தேன்; நயாக்ரா நீர்வீழ்ச்சியிற் குளித்தேன். தென்னமெரிக்காவில் பிரெஸில் காட்டைச் சுற்றிப் பார்த்தேன். அமெரிக்கர் பெருஞ் செல்வர். நியூயார்க் நகரம், அளகாபுரி போன்று செல்வம் செழித்தது. ஹென்ரி போர்டு, ராக்ஃபெல்லர் முதலிய செல்வ முதலாளிகளின் தொழிற்சாலைகளைப் பார்த்தேன். நமது தேசம் தொழிலிலும் வாணிகத்திலும் அமெரிக்காவைப் போல் வளம்பெற வேண்டும்.

அமெரிக்காவைவிட்டு ஜப்பான் வந்தேன். ஜப்பான் வெளிநாட்டிடமிருந்து கற்க வேண்டியதைக் கற்று, முன்னேறியிருக்கிறது. நாடு, மொழி, சுதர்மம் இம்மூன்றையும் ஜப்பானியர் மறப்பதில்லை. ஜப்பானைக் கண்ட பிறகு சைனாவுக்கு வந்தேன். அங்கே ஜப்பானைப் போலவே புத்தசமயம் பரவியிருக்கிறது. இலவோத்ஸன், கொன்புத்ஸன் எனும் இரு மஹான்களின் நூல்களையும் படித்தேன்; நமது பாரதஞானமே இங்கெல்லாம் நிலவுகிறது. சீனர் தலைவரான ஷியாங்கே ஷேக்கின் வீர சுதந்தரப் போரைக் கண்டு வியந்து, பர்மாவழியாக பாரத பூமிக்கு வந்து, வட இந்தியாவைச் சுற்றினேன்.

மற்றவை அடுத்த தடவை.

---

## 7. ஆங்கிலத்தில் பேசினேன்!

என் அருமைக் குழந்தைகளா!

மேற்கும் கிழக்கும் சுற்றிப் பேரப்பிள்ளைகளான உங்களைப் பார்க்க வந்தேன்; பிள்ளைகளுக்கு என்ன கொண்டு வந்தேன்? என் அனுபவக் கனிகளைக் கொண்டுவந்தேன்; நீங்களெல்லாரும் முன்னேறும்வழிகளை அறிந்து, உங்களைத் தூண்டி நடத்த ஆர்வங்கொண்டு வந்தேன். வடநாடெல்லாம் சுற்றியபிறகு கராச்சி சென்று, அங்கிருந்து பம்பாய் வந்து இறங்கினேன்; துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தேன். அந்தக் காலம் கொற்கையிலும் புகாரிலும் மலைமலை

யாக நமது நாட்டுப் பொருள்கள் குவிந்திருக்கும்; அதை யவனர் சோனகர் முதலிய பிறநாட்டார் வந்து வாங்கிச் செல்வர். இன்றோ? நமது நாட்டுச் சீதேவி கப்பலேறிச் செல்கிருள். அன்னிய நாட்டுப் பொருள்கள் கப்பல் கப்பலாக வந்து குவிகின்றன. நம்மவர் அவற்றையே வாங்குகின்றனர். நாட்டினின்றும் கோடிக் கணக்கான பணம் ஒவ்வொரு நாளும் வெளியேறுகிறது. இந்தப் பகற்கொள்ளையும், இப்படி நம்மவர் நமது செல்வத்தையே பறிகொடுத்து நிற்பதுமே என் கண்ணில் முதன்முதல் உறுத்தின. 'இதென்ன தங்கமும் வெள்ளியும், முத்தும் மணியும், பயிரும் தானியமும் இப்படி நமது தரையை விட்டு அத்லாந்திக் கரைச்குச் செல்கின்றனவே! நம்மவர்கள் என்ன செய்கிருர்கள்?' என்று உள்ளே புகுந்து பார்க்கப் போனேன். அங்கே ஒரு கூட்டம் கூடியிருந்தது. ஒரு மேடைமேல் பத்துப் பேர் சுவிசேஷ கீதங்கள் பாடினர். கீதம் நின்றதும் ஓர் ஆங்கில துரை நமது பாஷையில் பேசினுர்; அதன் சாரமாவது: "இந்துக்களெல்லாரும் மூடக்கொள்கையர்; கல்லை வைத்துக் கோவில் கட்டித் தொழுகிருர்கள். அந்தக் கல்லை என் காலால் உதைத்தால், அது என்ன செய்யும்? [காலை உதறியடித்தார். 'கல்லை உதைத்தால் உன் காலில் இரத்தம் வரும்' என்று கூடச் சொல்வாரில்லை.] இந்துக்கள் ஆயிரம் ஜாதி வித்தியாச முள்ளவர்கள். ஒரு ஜாதிக்கும் இன்னொரு ஜாதிக்கும் சண்டை. இந்தச் சண்டையை நாங்களே தீர்த்து வைத்தோம். இந்தியா ஒரு காடாயிருந்தது; கலகக் காடாயிருந்தது: அநாகரிகக் காடாயிருந்தது; நாங்களே இங்கே ஒளியைக் கொணர்ந்தோம்; நாங்களே கல்வி கொடுத்து இந்துக்கள் விழியைத் திறந்தோம்; பல தொழில்களைக் கற்பித்தோம்; உழைப்பீந்தோம்; பிழைப்பீந்தோம். புகைவண்டி விட்டோம், தந்தி யிணைத்தோம், புதுப்புது நாகரிக அதிசயங்களை இந்த நாட்டில் கொணர்ந்தோம். எல்லாம் கிறிஸ்து பகவான் அருளால் நடந்தது. கிறிஸ்துவை நம்புங்கள்; அவரே பரலோகத்திலுள்ள பரமபிதாவின் அருட் குமாரர். அவரே உலக ரக்ஷகர். இன்றுலகில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்; கிறிஸ்துவை

அடையுங்கள். கல்வி கிடைக்கும்; ஜாதிவேற்றுமை ஒழியும், தொழில் கிடைக்கும், சுகமாக வாழலாம்; வானரசு இறங்கி வரும். ஞானஸ்நானம் பெறுங்கள்—அஞ்ஞானிகளே! என்றெல்லாம் அவர் உபதேசித்ததும் அவரைப் பின்பற்றிச் சிலர் பேசினர். பிறகு அங்கு நின்றவருக்கெல்லாம், சுதேச பாஷையில் அச்சிட்ட பைபிளை வழங்கினர். கூட்டம் முடிந்ததும், அவர்களுடன் ஐம்பது பேர் சென்றனர். எங்கே? ஞானஸ்நானம் பெறத்தான்.

"போகரே, இதென்ன?" என்றேன்.

"எல்லாம் உமது பேரப்பிள்ளைகளால் வந்த வினைதான். இவர்கள் தூங்குகிறார்கள். அவர்கள் விழித்திருந்து வெல்லுகிறார்கள்; பாரும் உமது நாட்டை!" என்று சுற்றிக்காட்டினார். பம்பாய், நாசிக், லாகூர், ஸ்ரீநகர், தில்லி, கோரக்பூர், பிரயாகை, காசி, கல்கத்தா, இராஜமஹேந்திரம், சென்னை, தஞ்சாவூர். திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, இராமேசுவரம், திருவனந்தபுரம், கொச்சி, மைசூர், பங்களூர் முதலிய ஊர்களையெல்லாம் மறுபடி நன்றாகச் சுற்றிப்பார்த்தேன். 'ஐயோ, நமது நாடும் சமுதாயமும் இப்படி அன்னிய மாயத்தால் அழிந்ததே--சிவனே!' என்று மயங்கி வீழ்ந்தேன்! மயக்கந் தெளியும்போது போகர் என்னிடம், "**தரும தீபம்**" என்றொரு பத்திரிகைதந்தார். அதில், **சன்மார்க்க மகாநாடு** ஒன்று குற்றாலத்தில் நடப்பதாகப் போட்டிருந்தது. அதையே நானும் நினைத்தேன். உடனே இந்த மகாநாட்டிற்குச் செல்வதெனக் கிளம்பினோம்.

இருவரும் ஐரோப்பிய வேடத்துடனேயே சென்றோம். மகாநாட்டுக் காரியதரிசிக்கு வெகு குதூகலம். "இரண்டு துரைமார் நமது மகாநாட்டிற்கு எழுந்தருளியிருக்கிறார்கள்" என்று அவர் சபைக்கும் அறிவித்து எங்களை முன்னணியில் அமர்த்தினார். மகாநாட்டில் பல அறிஞர் பேசினர்: "நமது இந்து சமயம் தாழ்வடைந்திருக்கிறது; நம்மவர் விரைவாகப் பிறமதம் புகுவதால், நமது தொகை குறைந்து போனது. நமது அருள்நூல்களைத் தேடுவா

ரில்லை. எல்லாரும் ஆங்கில மோகம்பற்றித் திரிகிருர்கள். நாட்டில் வறுமை, மடமை, அடிமையிருள் படர்ந்திருக்கின்றன. இவற்றை நீக்கத் தொண்டர்படை எழுந்து உழைக்க வேண்டும், கல்வியும், தொழிலும், சன்மார்க்க ஞானமும் எங்கும் பரவ வேண்டும். இதற்கெல்லாம் ஏராளமான பணம் வேண்டும். அவரவர் இயன்றதை உதவுங்கள்!" என்பதே அனைவர் பேச்சின் சாரமுமாகும். இடையிடையே தொண்டர் "நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்" என்று பாடிக்கொண்டு உண்டியல்பெட்டியையும் சந்தாப் புத்தகத்தையும் சுற்றியனுப்பினர். எல்லாரும் பேசியதும் சிலர் ஒரு தாடிவாலாவைத் தூண்டிவிட்டனர். அவர் விநோதக் கேள்விகளை அடுக்கினுர்: "இந்து சமயம் என்ருல் என்ன? பார்ப்பான் உயர்த்தி, மற்றவர்களெல்லாரும் சூத்திராள் என்று அவமதிப்பது தானே உங்கள் சமயம். இந்த அவமதிப்புச் சமயத்தை ஆயிரஞ்சாமி, பதிணுயிரம் பிரிவினைகள், இலட்சம் மூடக்கொள்கைகள், காலத்திற்குதவாத மாமூல் பழக்கங்கள் எல்லாம் வளைத்துக் கொண்டிருக்கின்றனவே! இதில் பகுத்தறிவுள்ள மனிதன் எப்படிப் புக முடியும்? விடிந்தெழுந்தால் சாமிக்கு மாரடிக்கத்தானே உங்களுக்குப் பொழுது சரியாயிருக்கிறது! சாமி எங்கே? எல்லாம் பார்ப்பான் வேலை, ஏமாற்றம், புராணப் புளுகு, புரோகிதப் புரட்டு" என்று நீளக்கிளம்பினுர். சபை இரண்டானது. வாய்ச்சண்டை கைச்சண்டை அடிதடி எல்லாம் நடந்தன; ஏக ரகளை." அச்சமயம் சிவப்புத் தலைப்பாகையுடன் ஐந்துபேர் தோன்றினர். சண்டை அடங்கியது. நம்மவரை அமைதியாக்கப் போலிஸ் உதவி வேண்டியிருக்கிறது! நான் போகருக்குச் சாடை காட்டினேன். கொஞ்சம் அமைதி நிலவியதும் போகர், கூட்டத் தலைவர் ராவ்பகதூர் ஏகாம்பரம்பிள்ளை காதில், "இவர் எனது நண்பர்; சீமையிலிருந்து வந்திருக்கிருர். பெரிய அறிவாளி; கொஞ்சம் பேசச் சொல்லலாமே" என்ருர். "ஆஹா, மெனி தாங்ஸ்! ஆங்கிலத்திலேயே பேசட்டுமே; தமிழில் நான் மொழிபெயர்க்கிறேன்" என்ருர். "நமது அதிட்டவசமாக மகாநாட்டிற்கு விஜயம் செய்த மிஸ்டர் அகஸ்டஸ்துரை இப்போது நமக்குச் செவி விருந்தளிப்

பார்" என்று தலைவர் ஆங்கிலத்திற் பேசி அமர்ந்தார்.

எழுந்தேன்! "*Dear Comrades*" என்று நான் தடபுடலாக ஆரம்பித்து, ஆங்கிலத்தில் வெளுத்து வாங்கினேன். ஒவ்வொரு வாக்கியத்தையும் தலைவர் அழகான தமிழில் மொழிபெயர்த்தார். என் பேச்சின் சாரத்தை உங்களுக்குத் தமிழிலேயே சொல்லுகிறேன்; கவனமாகக் கேளுங்கள்:

"என் அருமைத் தோழர்களே! என் சட்டை தொப்பியை மறந்து விடுங்கள்; என்னை உங்களுள் ஒருவனாக நினைத்துக் கொள்ளுங்கள். நான் ஐரோப்பாவை நன்றாகச் சுற்றியறிந்து உங்களிடையே வந்திருக்கிறேன். நான் இந்தியக் கலைகளை நன்றாக அறிவேன். இந்தியாவை நான் சுற்றிப்பார்த்து உங்கள் வாழ்க்கை, நிலைமை, குறைநிறைகள் அனைத்தையும் நன்கறிந்தேன். உங்கள் பாஷைக்கும் நான் அன்னியனல்லேன். இங்கே பேசியதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரிந்தது. என்னைப் பற்றி இப்போது பேச்சல்ல; உங்களைப்பற்றித் தான். ஆதலால் நேராக விஷயத்திற்குச் செல்லுகிறேன். உங்கள் நாகரிகம் மிகப் பழமையானது, தெய்வத்தன்மை பொருந்தியது; உங்கள் முன்னோர்கள் அருட்புலவர்கள், தெய்வீக புருஷர்கள்; அவர்கள் அருளிய வாக்குகளே உங்கள் நாகரிகத்தின் அடிப்படையாகும். ஆனால் மறதி யென்னும் திரை உங்கள் மனத்தை மறைத்தது; சாதி மத வேற்றுமை உங்கள் அறிவை மறைத்தது. காலத்தை அனுசரிக்காத பிடிவாதங்கள் உங்கள் முன்னேற்றத்தைத் தடுத்தன. கல்வி யில்லாத மடமை உங்கள் கண்ணை இருளாக்கியது; தொழிலறிவில்லாத சிறுமை உங்களை வறியராக்கியது. இந்த நாட்டில் அன்னிய மோகமும் அடிமை நினைப்பும், கட்சிப்போர்களும், சாதிப் போர்களும், படியா மடமையும், உழையாச் சோம்பலும் குடிகொண்டிருக்கின்றன.

இந்த நிலைமையில் பிறநாட்டார் புகுந்தனர், வென்றனர், பொருளைக் கொண்டுசென்றனர். "நாடு கொள்ளை போகிறது; மதம் போனது, ஆசாரம் போனது. பிற

மதங்கள் முன்னேறுகின்றன ; நம் மதம் பின்னொதுங்குகிறது. அன்னியர் ஆக்கம் பெற்றனர்" என்று கூச்சலிடுகிறீர்கள் ; உண்மைதான் ; இத்தீமைகளின் காரணமென்ன? நம்மவர் தூக்கமே யன்றோ? உங்கள் நிலைமை வெட்டவெளிச்சம். உணருங்கள், உணருங்கள். அடுத்த தடவை இந்த நாட்டைப் பற்றிப் பேசுகிறேன்—புராண ரீதியாகவன்று, தற்கால பூகோள—சரித்திர ரீதியாக. உங்களுக்கு நாட்டறிவும் நாட்டுணர்வும் வேண்டும்."

## 8. நமது நாடு

[மறுநாட் கூட்டத்தில் நான் இந்தியப் படத்தை வைத்துக்கொண்டு, பின்வருமாறு பேசினேன்:]

அன்பர்காள்! மீண்டும் உங்களுக்குச் சில மொழிகள் கூறுகிறேன். தமிழ்—ஆரியம் இரண்டும் உலகின் அருட் சுரங்கங்கள் ; அவற்றிலுள்ள பொன்னையும் மணியையும் அன்னியர் அள்ளிச் செல்லுகிறார்கள் ; நாம் ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் படித்துப் பெருமை பேசுகிறோம். நமது கலைச்சுரங்க வாசலிலேயே நாம் தூங்கி விழுந்து கொண்டிருக்கிறோம் ; அங்கே காலத்திற்குதவாத குப்பைகளைக் குவித்து, "இதுவே, எங்கள் சாதிசமயக் கொள்கை" என்று இறுமாக்கிறோம், சண்டை போடுகிறோம். இருப்பது 40 கோடி மக்கள். அவர்களுள் ஒரு கோடி மக்களுக்குக் கூட, 'இது நமது நாடு ; நாம் பிற நாடுகளைப் போலவே காலத்தை வென்று முன்னேற வேண்டும்' என்று தோன்றவில்லை. பெரும்பாலோர் வயிற்றிற்கே வாழுகின்றனர். ஒரு தொழிலிலேயே பலர் முட்டிக்கொண்டு, மண்டை சிதறுகின்றனர். சீர்திருத்தக் கூச்சலெல்லாம் சமையற்பானையைச் சுற்றித்தான் கொதிக்கின்றன. பாமர மக்களுக்குக் கல்வி மணமில்லை; தமது ஊர் எல்லையைத் தாண்டி என்ன நடக்கிறதென்று தெரிவதில்லை. உழைப்பில்லை, பிழைப்பில்லை, உணவில்லை, சுகமில்லை. "இந்தியா, இந்தியாவென்று ஒரு பட்டணமாம் ; அதில் பெருவாரியான சனங்களாம் ; அது ஏழுமலைக்கு வடக்கே யிருப்பதாம் ; அதில் கும்

பினிக்காரன் கொடி போட்டானும்; அதை இவர்கள் பிடுங்கினுர்களாம். துரை கிட்ட இவர்கள் பாச்சா பலிக்குமா? எல்லாரையும் சிறையில் அடச்சுட்டானும். மூச்சு விட்டால் சுட்டிடுவானும்'' இந்த மாதிரி குக்கிராமங்களில் நமது மக்கள் பேசக்கேட்டேன். "நமது நாடு, நம்மவர்'' என்ற உணர்ச்சி ஒவ்வொருவர் நெஞ்சிலும் பொங்க வேண்டும். அந்த உணர்ச்சித் தீ தருமாவேசங் கொண்டு காரிய சித்தியாக வீறேங்கிக் கல்வி, கலே, தொழில், வாணிகம், வீரம், நன்னெறி இவையனைத்தையும் வளர்க்க வேண்டும். ஆதலால், என்னருமைக் குழந்தைகாள், உங்களுக்கு முதலில் நமது நாட்டைப் பற்றிச் சொல்லுகிறேன்:

நாம் இந்தியர்; நமது நாடு ஹிந்துஸ்தானம்; நமது நாட்டின் பொதுமொழி ஹிந்துஸ்தானி. நாம் சிறப்பாகப் பேசுவது தமிழ்; நாம் பிழைக்கக் கற்பது ஆங்கிலம். முற்காலம் இந்நாடு முழுதும் திராவிடர் நிலமாயிருந்தது; அக்காலம் தமிழே நாட்டு மொழியாயிருந்தது. 5000-ம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் உலகிற் சிறந்த நாகரிகராக விளங்கினர்; தமிழ், தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கியங்களுடன் செழித்தது. தமிழர் ஏன் எண் சிறுத்தனர்? தமிழ் ஏன் செல்வாக்கிழந்தது? இனித் தமிழும் தமிழரும் உலகில் முன்னேறும் வகையென்ன என்பதைப் பிறகு விரிவாகச் சொல்லுகிறேன்; அதற்கு முன்னுரையாகவே இதெல்லாம் சொல்லுகிறேன்.

ஹிந்துஸ்தானத்தை இரண்டு பிரிவாகக் காணலாம். விந்திய மலேக்கு வடக்கே யிருப்பது பெரும்பாலும் ஆரியர் வாழும் ஆரிய பூமியாகும்; அங்கும் திராவிடர் கலப்பு மிகுதி. உதாரணமாக வங்கர், திராவிட மங்கோலியக் கலப்பினர். விந்திய மலேக்குத் தெற்கே யிருப்பது **தக்கணம்**, அல்லது **திராவிடமாகும்**. ஆரிய பூமி அடிக்கடி புறப்பகைவர் படையெடுப்பினுல் நிலேகுலேந்து, பல சாதி கலந்து உருமாறி யுள்ளது. அங்கே ஆரியர், இஸ்லாமியர், சீக்கியர், ஜைனர், பௌத்தர், ஜாரதுஷ்டிரர் முதலிய வகுப்பினர் வாழுகின்றனர். அவர்கள் வடமொழி கலந்த வங்கம், குஜராத்தி, மராதி, ஹிந்துஸ்

தானி ஆகிய மொழிகளைப் பேசுவர். தக்கணத்தில் பெரும்பகுதியினர் திராவிடரே. இவர்களிற் சிலர் இஸ்லாமியர். கிறிஸ்தவர் வடக்கிலும் தெற்கிலும் பரவியிருக்கின்றனர். இந்தியா என்றால் இத்தனை வகுப்பினர், இத்தனை மதத்தினர் வாழும் ஒரு நாடாகும். இந்து சமுதாயம் என்றால் மேற்சொன்ன அனைவரையும் குறிக்கும். இந்தியாவின் பரப்பளவு சுமார் 48,05,000 சதுர மைல்களாகும்; ஜனத்தொகை சுமார் 40 கோடி—உலக ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்கிற்குமேல். இந்தியா உலகன்னையின் இதயம்போல நடுநிலையில் அழகாயமைந்துள்ளது; அதன் கிழக்கில் வங்காளக்கடல், மேற்கில் அரபிக்கடல், தெற்கில் இந்துசமுத்திரம், இமயமலை — எல்லைகளாகச் சூழ்ந்துள்ளன. இமயமலை சுமார் 1,200 மைல் நீளமுள்ள பெரிய மலைத்தொடர்; அதில் சுமார் 20,000 அடி உயரமுள்ள 100 முடிகள் உள்ளன. கௌரிசங்கரம் (எவரெஸ்ட்) சுமார் 29,002 அடி உயரம்; அதுவே உலகிற் பெரிய மலைமுடி. கைலாச மலை 22,028 அடி உயரமிருக்கிறது. சிந்து, பிரமபுத்திரா, கங்கை ஆகிய மூன்று பெரிய நதிகள் இமயமலையில் உற்பத்தியாகின்றன கங்கைச் சமவெளி மிகவும் வளம் பொருந்தியது; அது 1500 மைல் நீளமுள்ளது. வடமேற்கெல்லையில், கைபர் கணவாயும், அதற்குத் தெற்கே போலன் கணவாயும் உள்ளன. இவையே இந்தியாவிற்கு நுழைவுகள் (*Entrances*). இவற்றின்வழியே எத்தனையோ அன்னியர், நாட்டிற்குள் வந்தனர். இப்போது ஆங்கிலேயர் இக்கணவாய்களை வெகு கடுமையாகக் காவல் புரிந்து வருகின்றனர். ஒரு காலத்தில் சிந்து கங்கைச் சமவெளி கடலாயிருந்தது. பூமி அதிர்ச்சியால் கடலிலிருந்து நிலப்பரப்பு வெளியானது; நதி வண்டல்கள் படிந்து படிந்து நிலம் உயர்ந்தது. சிந்து நங்க பருவதத்திலிருந்து வருகிறது. ஐந்து உபநதிகளுடன் அது பாஞ்சால நாட்டைச் செழிப்பாக்குகிறது. திபேத்தின் எல்லையிலுள்ள இமாலயப் பனி உருகி, கங்கையாக ஓடி வருகிறது. ஹரித்வாரத்திலிருந்தே அது சமவெளிக்குப் பயனாகும்படி ஓடுகிறது. அலஹாபாத்தில் உபநதிகள் சேர்ந்து கங்கை ஆழ்ந்தகன்று ஓடுகிறது.

வட இந்தியாவைவிடத் தென் இந்தியா மிகப் பழைய நிலம்; இமயத்தினும் விந்தியம் மிகப் பழைய மலை. தென்னிந்தியா முன்னே கடலுண்ட குமரிகண்டத்தின் மிச்சமாகும். இங்கேதான் உலகின் ஆதி மனிதர் இருந்தனர். வடக்கே விந்தியமலை, சாத்பூராமலை, கிழக்கே கிழக்குத்தொடர், மேற்கே மேற்குத் தொடர் சூழ்ந்த முக்கோண வடிவாயுள்ளது தக்கணம். மேற்கு—கிழக்குத் தொடர்கள் நீலகிரியிற் சேர்ந்து ஒரே தொடராகக் குமரி முனைக்குச் செல்லுகின்றன. அங்கிருந்து கடலுட் சென்று இலங்கை மலைகளாகத் தொடர்கின்றன. அரபிக் கடலில் விழும் நருமதை, தப்தி, வங்காளக்கடலில் விழும் மஹாநதி, கோதாவரி, கிருஷ்ணை, பெண்ணாறு, பாலாறு, காவேரி, வைகை, பொருநை-இவை தக்கணத்தைச் செழிப்பாக்கும் நதிகளாம்.

இந்தியாவில் இரண்டு பிரிவுகள் உள்ளன: ஒன்று ஆங்கில இந்தியா; மற்றொன்று அவர்களுக்குக் கப்பங் கட்டி அடங்கி நடக்கும் சுதேச சமஸ்தானங்கள். சுமார் 700 சுதேச சமஸ்தானங்கள் உள்ளன; அவற்றுள் முதன்மையானவை: ஹைதராபாது, பரோடா, குவாலியர், மைசூர், திருவாங்கூர் முதலியன. சென்னை, பம்பாய், வங்காளம், பாஞ்சாலம், கோசலம், பீகார், அஸ்ஸாம் முதலிய மாகாணங்கள் பிரிட்டிஷ் அதிகாரத்திலிருப்பவையாம். நேபாளம், பூதான் இரண்டும் சுதந்தர சமஸ்தானங்கள்.

கங்கை சமவெளி, பாஞ்சாலம், மழை செழித்த கொங்கணம், புனல் செழித்த கர்னடகம்-இவற்றில் ஜன நெருக்கம் அதிகம்; ஒரு சதுர மைலுக்குச் சுமார் 450 பேர் வசிக்கின்றனர். பஞ்சாப் சீக்கியர், நேபாள கூர்க்கர், ரஜபுத்திரர், தமிழ் மறவர்—இவர்கள் நாட்டிற் சிறந்த போர் வீரராவர். குஜராத்தி சேட்டுகளும், தமிழ்நாட்டுச் செட்டியார்களும், கோமுட்டியரும், மரைக்காயர்களும் வாணிகத்திற் சிறந்து விளங்குகின்றனர். வங்காளிகள், கலை நுட்பத்திலும் கவிதையிலும் உயர்ந்தவர்கள்; தமிழர், அருட் கலை தேர்ந்தவர். முதன்மையாகத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், ஆரியம், வங்காளம், குஜராத்தி,

ஹிந்துஸ்தானி, மராத்தி, சிந்தி, புஷ்டு ஆகிய 12 பாஷைகள் இந்தியாவில் பேசப்படுகின்றன. இராமேஸ்வரம், மதுரை, திருச்சி, தஞ்சாவூர், புதுச்சேரி, சென்னை, நீலகிரி, மைசூர், பங்களூர், திருவாங்கூர், கொச்சி, உடுப்பி, ஹைதராபாது, இராஜமகேந்திரம், மசூலிபட்டணம், விசாகபட்டணம், விஜயநகரம், காகினடா, பம்பாய், சூரத், பூனு, ஆமதாபாத், நாகபுரி, கல்கத்தா, சந்திரநாகூர், டெக்கா, டார்ஜீலிங், பாட்னு, காசி, கயா, அலஹாபாத், கான்பூர், லக்னே, ஜான்ஸி, ஆக்ரா, தில்லி, ஆஜ்மீர், ஜயபூர், லாகூர், பெஷாவர், ஸ்ரீநகர், கராச்சி முதலியன இந்தியாவிலுள்ள முக்கிய பட்டணங்களாம். இவை கலை, தொழில், வாணிகம், செல்வம் அனைத்திலும் செழித்தோங்குகின்றன. சென்னை, பம்பாய், ஐக்கியமாகாணம், மத்தியமாகாணம், தில்லி, அஸ்ஸாம், பீஹார் முதலிய மண்டலங்களில் இந்து தருமத்தை அனுசரிக்கும் சைவரும் வைணவரும் அதிகமாயிருக்கிறார்கள். பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லைப் பிரதேசம், பாஞ்சாலம், வங்காளம்—இந்நான்கிலும் இஸ்லாமியர் தொகை அதிகம்.

இந்தியா நீர்நில வளங்களிற் செழித்த நாடு. பருவக் காற்றுகள் இந்தியாவிற்கு மழைவளம் தருகின்றன. ஜனவரி முதல் ஜூன் வரையில் வடகிழக்குப் பருவக் காற்றும், ஜூன் முதல் டிசம்பர் வரையில் தென்மேற்குப் பருவக்காற்றும் வீசி, மழை மேகங்களைத் தூண்டுகின்றன. இலங்கை, மலையாளம், வங்காளம், அஸ்ஸாம் இவற்றில் கனத்த மழை பெய்கிறது; சென்னை மாகாணத்தில் ஜூலை முதல் டிசம்பர்வரையில் போதிய மழை பெய்கிறது. இராஜபுதனம் வனந்தரம்; மத்திய பீடபூமியில் மழை கொஞ்சம். நதிவளம், மழை வளம் குறைந்த இடங்களில் நடை கிணறுகள் வெட்டி ஏற்ற மிறைத்துப் பயிர் செய்கின்றனர். இமாலயம், அஸ்ஸாம், மேற்குத்தொடர்ச்சி மலை முதலியவை காடடர்ந்தவை. இங்கே நீண்டுயர்ந்த தேக்கு, வேங்கை, தேவதாரு முதலிய மரங்களும், புலி யானை, மாடு மான் முதலிய விலங்குகளும் உள்ளன.

ஆற்றுப்பாங்கான இடங்களில் நெல், கரும்பு, வாழை, முதலிய பயிர்கள் செழிக்கின்றன. நெய்தல்

நிலங்களில் தென்னை ஏராளம். புஞ்சை நிலங்களில் கேப்பை, சோளம், பயறு முதலியவை விளையும்; பஞ்சாப் போன்ற பனி மண்டலங்களில் கோதுமை விளைகிறது. இந்தியாவில் ஆடு மாடுகள் ஏராளமாயுள்ளன. இந்தியா பசுவளஞ் செழித்திருப்பதுடன், தற்கால இயந்திர–வாணிகத் தொழிலுக்கேற்ற கனிப்பொருள்களிலுஞ் சிறந்து விளங்குகிறது. வங்காளம், பீஹார், ஒரிஸா, அஸ்ஸாம், பஞ்சாப், கோதாவரி முதலிய இடங்களில் போதிய நிலக்கரி உண்டாகிறது. சேலம், சென்னை, ஒரிஸா, தக்கணத்திலுள்ள மலைப்பிரதேசங்கள்–இவற்றில் போதிய இரும்பு கிடைக்கிறது. சென்னை, மைசூர், மத்திய மாகாணங்களில் மாங்கனீஸ் விளைகிறது. கோலாரில் தங்கச் சுரங்கம் உள்ளது. இமயமலைப் பாங்கரில் செம்பு கிடைக்கிறது; பீஹார்—ஒரிஸாவில் ஏராளமான மைகா (*Mica*) கிடைக்கிறது. பஞ்சாப், ராவல்பிண்டி, பர்மா முதலிய இடங்களில் மண்ணெண்ணெய் உற்பத்தியாகிறது. இந்தியர் பெரும்பாலும் பயிர்த்தொழிலால் பிழைக்கின்றனர். பொதுவாக வேண்டிய கைத்தொழில்களெல்லாம் இங்கே, எளிய முறையில் நடக்கின்றன—நூற்றல், நெசவு, பானை செய்தல், மரத்தொழில், இரும்புத் தொழில் முதலியன. இப்போது பெரிய நகரங்களில் இயந்திரத் தொழில்கள் பெருகிவருகின்றன. இப்போது இந்தியாவில் 8,831 தொழிற்சாலைகள் உள்ளன; சென்னையில் 1,553, பம்பாயில் 1,678, வங்காளத்தில் 1,535 தொழிற்சாலைகள் உள்ளன. இவை பெரும்பாலும் பிறநாட்டு இயந்திரங்களைக் கொண்டு நாட்டின் அதிகத்தேவைக்குரிய பொருள்களைச் செய்கின்றன—நூல், துணி, காகிதம், தீக்குச்சி, கண்ணாடி, இரும்புச்சாமான்கள், மின்சாரம் முதலிய தொழில்கள். இந்தியாவிலிருந்து ஆண்டு தோறும் சுமார் 38½ கோடி ரூபா பெறும் தங்கமும், 7 கோடி ரூபா வெள்ளியும் கப்பலேறுகின்றன. இன்னும் பலவகைகளில் 400 கோடி ரூபா வெளியேறுகிறது. இங்கே விளையும் மூலப் பொருள்களெல்லாம் கப்பலேறிப் பலவிதமான செய்பொருள்களாக இங்கே திரும்பி வருகின்றன. இந்திய வளத்தால் வெண்ணுலகம் செழிக்கிறது. இந்தியா, இயந்திரச்சாமான்களுக்குச்

சந்தையாயிருக்கிறது. பொன்னும் பசுமையும் குலுங்கும் இந்தப் புண்ணியபூமி, வறுமையால் வருந்துகிறது; இந்த ஞானபூமி கல்வி பரவாமல் இருள் மூண்டிருக்கிறது; அடிமைச் சிறையில் அடைபட்டு உயிர் துடிக்கிறது.

அறிவும், வளமும் செறிந்த இந்நாடு, இந் நிலைக்கு வருவானேன்? இன்றும் நமது சமய ஞானத்தைப்பற்றி நாம் பெருமை கொள்கிறோம். முதலில் அதன் கதையைப் பேசுகிறேன். அடுத்த தடவை கேளுங்கள். அடுத்த தடவை இந்நாட்டு வரலாற்றைச் சொல்லுகிறேன். நீங்களும் புத்தகசாலைகளில் உள்ள சரித்திர நூல்களைப் பாருங்கள்.

---

## 9. நமது சமயக் கதை

[பீடிகை: "அடே பாட்டையா, உன் அகஸ்தியர் ஒரு கேள்வி கேட்டாரே; இந்நாடு இந்த நிலைக்கு வருவானேன்; சொல் பதில்" என்று என்னை நண்பர் சூழ்ந்தனர்! "தமிழைப் புறக்கணித்ததால்" என்றேன். "மதத்தைக் கட்டி அழுவதால்" என்று பல குரல்கள் கிளம்பின. "மத விஷயமாக பகவான் இன்று பேசுகிறார்; கேட்டுப் பிறகு வம்படிப்போம்" என்று நான் தப்பினேன். அதற்குள் மணியும் அடித்து விட்டது. முனிவர் பேசுகிறார்:]

தமிழர்காள்,

நமது நாட்டின் ஆதி மக்கள் திராவிடர்களே, தமிழர்களே; அவர்கள் இங்கே வழிவழியாக வாழ்ந்தனர். நடு ஆசியாவிலிருந்தோ, நார்வேயிலிருந்தோ, திலகர் சொல்வதுபோல ஆர்டிக் பிரதேசத்திலிருந்தோ, அல்லது சிலர் ஊகிப்பதுபோல் ரஷ்ஷியாவிலிருந்தோ, எங்கிருந்தோ வந்த ஆரியர், முதலில் பஞ்சாபில் குடியேறினர்; அங்கே வளர்ந்த திராவிட நாகரிகப் பெருமை மொஹெஞ்சதாரோ, ஹரப்பா என்னும் இடங்களில் தற்போது அகப்பட்டுள்ள ஆதாரங்களால் விளங்கும். வந்த ஆரியருக்கும் திராவிடப் பெருமக்களுக்கும் கடும்போர் நடந்தது; திராவிடர் காட்டிய வெல்லொணு வலிமையைக்

கண்டு அவர்களை இராக்ஷஸர்களாகவும், தஸ்யுக்களாக வும், விருத்திராதி தானவர்களாகவும் ஆரியர் வர்ணித் துப் பாடினர்; கதை கட்டி வைத்தனர். அவற்றையெல் லாம் தத்துவ விளக்கங்களாகக் கொண்டு மறப்போம். பாஞ்சாலத்திலும் மஹாகோஸலத்திலும் ஆரியர் ஊன் றிக் கொண்டனர். விந்திய மலைக்குத் தெற்கே திரா விடர் செழித்தனர். புத்தருக்குப் பிறகு, ஆரிய திரா விடச் சண்டைகள் அதிகமில்லை. ஆரிய திராவிட நாக ரிகங்கள் கலந்து போயின. இனிப் பிரிவினை பேசுவது வீணாகும். திராவிட நாகரிகத்தின் நன்மைகளை யெல்லாம் ஆரியர் மேற்கொண்டு தமதாக்கினர். ஆரியர் பழக்க வழக்கங்கள் திராவிடத்திற் கலந்தன. கீதை ஆரிய நாகரிகச் சுவடி என்றால், திருக்குறள் தமிழர் நாகரிகச் சுவடி என்னலாம். அலெக்சாந்தர் படையெடுத்த பின், வடநாட்டில் கிரேக்க நாகரிகமும் கலந்தது. தமிழ் நாட்டிலே யவனர் நமது மன்னருக்குத் தொண்டு செய் தனர். அசோகன் காலத்தில் திராவிட நாகரிகம் தனிச் சிறப்புடன் விளங்கியது. ஆனால் தென்னாட்டில் பௌத்த சமயம் வந்து குடியேறியது. பிறகு சமண மதம் வந் தது; அறநெறிக் கோட்பாடுகளில் வேறுபாடில்லை; பதி பசுபாச லக்ஷணங்களிலே தான் வேறுபாடு. சமண பௌத்த சமயங்கள் அரசர் மனத்தைக் கவர்ந்தன. சமண சமயம் அரசியலிற் புகுந்தது; தமிழ்நாட்டிற் குரிய சைவ வைணவ சமயங்கள் மறைந்து கொண்டிருந் தன. அச்சமயம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் எழுந்து மீண்டும் நமது சமயத்தை நிலைநாட்டினர். சமயக் கொள்கைகளைப் பாமாலைகளாகத் தொடுத்துச் சிவ னுக்கும் விஷ்ணுவுக்கும் சூட்டினர். அவர்களுக்குப் பிறகு நமது சமயம் புத்துயிர் பெற்றெழுந்த தென்னலாம். பிற்பாடு சங்கரர் வந்து "நான் பிரமம்" என்னும் வேதாந்த கர்ஜனை செய்தார். இராமானுஜர் வைண வத்திற்கு ஒரு மின்சார வேகமளித்தார். மத்துவர் பக்தி மார்க்கத்தை உபதேசித்தார். இம்மூவர் உபதேசங்கள் பாரதபூமி முழுதும் பரவின. சங்கரர் உபதேசம் உலகின் உள்ளத்தையே கவர்ந்தது. இன்று சங்கரரை உலகெல்லாம் அறியும். விவேகானந்தரும், இராமதீர்த்

தரும் கடல் கடந்து சென்று, சங்கர வேதாந்தத்தை முழக்கினர். நமது நாட்டில் விளங்கும் மற்றொரு சமய மான சுத்தாத்வைத சித்தாந்தம், தக்க பிரசாரகர் இல்லாமல் உறங்கியது. ஆயிரம் திருமடங்கள் இருந் தென்ன? இலட்சம் பண்டாரங்களும் சாமிக் கூட்டங் களும் அங்குமிங்கும் உலாவினுலென்ன? நாட்டிற்கும் சமய விளக்கிற்கும் பயனில்லை. பாமரஜனங்களுக்குச் சமயக் கல்வியில்லை. மீண்டும் அஞ்ஞான இருள் மூடியது.

இச்சமயம் உட்புகைச்சலும், வேற்றுமையும் நம் மவரைப் பல கட்சிகளாகப் பிரித்தன. கட்சிப் போர் வலுத்து, அன்னியர் வர இடமானது. எத்தனையோ அன்னியர் படையெடுப்புக்குப் பிறகு, இஸ்லாம் நாட் டிற் புகுந்தது; அரியணையைப் பற்றியது. அரசியல் பலங்கொண்ட சமயத்திற்குத்தான் அந்தந்தக் காலத் தில் ஏற்றமிருக்கும். இவ்வுண்மை யறிந்தே நபிகள் நாயகம் மதபீடத்தை அரியணையுடன் இணைத்தார். நாட்டை என்று நாம் இழந்தோமோ, அன்றே நம்மை யும் இழந்தோம். நம்மவர் தொகை வரவரக் குறைந்தது. இப்போது சுமார் பத்துக் கோடி இஸ்லாமியர் நமது சகோ தரரா யிருக்கிறார்கள். இடையில் வீர சிவாஜி, ராம தாஸர் அருளால் எழுந்து, ஹிந்து ஸாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினர். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக குரு நானகர் சீக்கிய மதத்தைக் கண்டார். ஆனால் அது முடி வில் சிங்கரைப் படைத்து, முகலாய சாம்ராஜ்யத்தையே எதிர்த்தது. அக்காலம் நாடு முழுதும் சண்டை சச்சர வாகி, நமது சமயஞானம் உறங்கிப் போனது; தருமம் தலை குனிந்தது. இவ்வாறு போரும் இருளும் குடி கொண்ட நாட்டில், வியாபார தந்திரமும், அரசியல் சூழ்ச்சிகளும், அயராவுழைப்புங்கொண்ட ஐரோப்பியக் கிறிஸ்தவர் புகுந்தனர். போர்த்துகீஸியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர் அனைவரையும் புறங்கண்டு, தம்முள் முரண்பட்ட சுதேச மன்னரையும் அடக்கி, மலை முதல் முனை வரையில் ஆங்கிலேயர் தமது கொடியைப் பறக்க விட்டனர். ஆங்கிலேயர் வரவால் நாம் நல்ல உலகறிவு பெற்றோம்; ஐரோப்பிய நிபுணர் செய்த ஆராய்ச்சி களைக் கற்றோம்; உலகுடன் பழக ஒரு மொழியை அறிந்

தோம். ஆனால், நமது அறத்தை இழந்தோம்; தாய் மொழியை மறந்தோம், சமய ஞானத்தைத் துறந்தோம்; அரைகுறையாக அன்னிய மொழி கற்று, நமது தாய் மொழியிலுள்ள அறிவுச் சுரங்கத்தையும், அதில் ஒளிரும் அருட்செல்வத்தையும் புறக்கணித்தோம்.

நம்மிடம் ஒற்றுமை கிடையாது; மொழி யன்பும், சமயப் பற்றும் கிடையாது. ஒருவரை யொருவர் நம்புவ தில்லை. இஸ்லாமியர் குரான் ஓதுவர், மசூதியில் தொழு வர்; கிறிஸ்தவர் பைபிள் படிப்பர், சர்ச்சில் வணங்கு வர்; நம்மவருக்கு அந்தக் கட்டுப்பாடுகூட இல்லை; நமது சமயக் கோட்பாடே பலருக்குத் தெரிவதில்லை. சில பண்டிதர்கள் அங்குமிங்கும், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், சித்தாந்தம், ஆண்டான் அடிமைத் திறம் என்று வாதம் புரிந்து கொண்டிருந்தாற் போதுமா? நம்மவரில் மாகாணிப்பேர்கூடப் படித்தவர் இல்லை யென்றால், அரிய சமயநூல்களை எங்கே ஆராயப் போகிறார்கள்? வடநாட்டில் ராஜாராம் மோஹன் ராய், தயானந்தர், பரமஹம்சர், விவேகானந்தர், ராம தீர்த்தர் போன்ற மஹான்கள் உதித்து ஒரு புதிய விழிப்பைத் தந்தார்கள். தென்னாட்டிலும் இராமலிங்க சுவாமிகள் சமரச சன்மார்க்கச் சங்கூதினார்—யாரும் கேட்கவில்லை. இன்றுமென்ன? அருட்பெருஞ்ஜோதி பாடுகிறார்கள்; ஒருபுறம் தனிப்பெருங் கொள்ளை; மறு புறம் தனிப்பெரும் உறக்கம்! சைவம் வைணவம் இரண் டும் நம் நாட்டுச் சமயங்கள். இரண்டிற்கும் உரிய பல அருட்சுவடிகள் உள்ளன. அவற்றைக் கற்றுப் பொது ஜனங்களுக்கு விளக்கும் பிரசாரகர் இல்லை. எத்தனையோ வடநாட்டு மேனாட்டுச் சங்கங்கள் வந்து தமிழ் நிலத் தில் ஊன்றி வளர்கின்றன; நாட்டிற்குரிய சமயம் உறங்குகிறது.

நமது ஒற்றுமையைப் பாழாக்கும் பழைய சாதி மாமூல்களைத்தான் இன்று 'என் மதம், உன் மதம்' என்று முதலைப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறோம். பரிதாபம்! பரிதாபம்!

கிறிஸ்தவப் பாதிரிகள் வருகிறார்கள். பள்ளிக்கூடம் வைத்துக் கல்வி தருகிறார்கள்; நமது நூல்களையெல்லாம் தற்காலத்திற்கேற்றபடி மொழிபெயர்த்து வெளியிடுகிறார்கள்; வைத்தியசாலை வைத்து மேனாட்டு முறைப்படி நோய் தீர்க்கிறார்கள்; பலவிதத் தொழிற்சாலைகளை நடத்தி ஏழைகளுக்கு ஏராளமாக உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணுகிறார்கள். அவர்கள் செய்யும் தொண்டு நமது மனத்தைக் கவருகிறது. பிறகு பைபிளை உபதேசிக்கிறார்கள். ஏராளமான பிரதிகள் அச்சிட்டு வாரி வழங்குகிறார்கள். மக்கள் மனம் மாறி, மதம் மாறுகிறார்கள். நாம் இன்னும் உறங்கினால் அடுத்த ஜனக்கணக் கெடுக்கும்போது இலட்சக் கணக்கான பேர்களை இழப்போம்.

நம்மவர் விழித்தெழுந்திருக்க வேண்டும். சாதிமத வேறுபாடுகளைக் கட்டித் தூர வைத்துவிடவேண்டும். சோம்பேறி வாய்வேதாந்தத்தை விட்டொழிக்க வேண்டும். தாய்மொழியையும் அதில் பொதிந்துள்ள அருளறிவையும் நன்றாகக் கற்கவேண்டும். ஆங்கிலத்தையும் அதில் செறிந்தோங்கும் கலை யறிவையும் மாசறக் கற்க வேண்டும். மேற்கின் ஆராய்ச்சித் திறனும், தொழில் வளமும், நமது நாட்டிற் கியல்பான **பக்தி—ஞானச்** செல்வத்துடன் இணைந்து ஒரு புதிய எழுச்சி பெற வேண்டும். நாம் ஜயசக்தி பெற்ற புதிய ஜாதியாக மறுமலர்ச்சி பெறவேண்டும். அப்போதுதான் நம்மை மேலோங்காமல் மட்டந்தட்டிச் சீரழிக்கும் தீமைகளை வெல்லமுடியும்.

தமிழர்களே! எழுந்திருங்கள்; இன்னுமா உறக்கம்? இரட்டை டமாரம் அடித்தாற்கூட உங்கள் உறக்கம் கலையாதா?—அட சிவனே! [அகத்தியர் போய்விட்டார்.]

---

## 10. உலக சமய ஆராய்ச்சி

நண்பர்காள்,

இப்போது தமிழ்நாட்டில் சமயப்பேச்சு எழுந்துள்ளது. சமயம் என்பது சன்மார்க்கம்; மாந்தரை நல்

வழியில் ஊக்கி, மாசற்ற தூய்மையும், வாய்மையும், மனக்கட்டற்ற ஆன்ம சுயேச்சையும் அளிக்கும் மெய் வழியே சமயம். உண்மை எல்லாருக்கும் பொது; உண்மைச் சமயமும் பொது. மனித சமுதாயத்தின் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்ற மெய்வழியை ஆராய்வாம்:

## வேத காலத்தில்

வேதகாலத்தில் "தத்வமஸி" (சாமி நீ) என்ற பிரம ஞான உண்மை விளங்கியது. ஆனால் குண விகாரங்கள் நிறைந்த உலகில் அந்த ஸர்வாத்ம உண்மையை நிலை நிறுத்த முடியவில்லை. மனிதனிடம் உள்ள அமரத் தன்மையுடன் அசுரத்தன்மை பொருதுகிறது. ஒவ்வொருவருள்ளும் தேவாசுரப்போர் நடந்துகொண்டேயிருக்கிறது. நன்மை ஒருபுறம் இருந்தால், தீமை ஒரு புறம் கச்சை கட்டி, நன்மையை எதிர்க்கிறது. இராமர் காலத்தில் அரக்கர் வலுத்தனர்; அவர்களை ஒழிக்கத் தரும வீரம் வேண்டியிருந்தது. பாரத காலத்தில் அறவோருக்கு அரக்கர் தாயாதிகளாக முளைத்தனர்; ஐவர் அறவோரானால் அவரை நலிக்க நூறு அதரும அரக்கர் கிளம்பிக் கொடுங்கோலோச்சினர்; அரக்கத்தன்மை கௌரவர் வடிவாக மாயச் சூதாடி அறவோராகிய பாண்டவரின் உரிமையைக் கவர்ந்தது; அவரைக் காட்டிற்குத் துரத்தியது; சூழ்ச்சி செய்து அவரைக் கொல்லப் பார்த்தது. அறம், அனைத்தையும் பொறுத்தது; அறத்திற்கு ஓர் அங்குல இடம் கூடத் தரமறுத்தது மறம்! தருமபுத்திரர் பொறுத்தனர்; முடிவில் போரே மூண்டது! இறைவன் அறவோர் பக்கம் இருந்தான்; அவர் தேரை யோட்டினான்; "எடு வில்; நலி அரக்கரை; அறத்தை நாட்டு!" என்று அறவீரனை விஜயனைத் தூண்டினான். கோடிக்கணக்கான போர்வீரரைக் கொண்ட அதருமபலம் தோற்றழிந்து மண்ணானது; அறமே வென்றது!

## கலி புகுந்தபோது

கண்ணன், பாரதப்போர் முடிந்தபின், உலகில் அறவரசை நிலைநாட்ட முயன்றான்; அது முற்றுப் பெற

வில்லை; கலி புகுந்தது. வேதரிஷிகளும், வியாசரும், வால்மீகியும், சுகரும் செய்த உபதேசங்கள்மீது மாசுபடிந்தன. அறிவை மறந்து வெறும் பொறிபோன்று, சடங்குகளைப் பற்றிநின்றனர் கற்றோர். நாட்டில் யாகக்கொலை வலுத்தது; வேதவாதம் கிளர்ந்தது; ஆத்மானுஷ்டானம் குறைந்தது. ஒரு நாவலன் கையாட்டுவதற்கும், கைகாட்டி மரம் கையாட்டுவதற்கும் வேற்றுமையுண்டு. மனம் பற்றாது பூனைக்குட்டி வேதாந்தம் பேசுவதற்கும், மனமடக்கித் தியானம் செய்வதற்கும் எவ்வளவோ வேற்றுமையுண்டு. சும்மா ஒரு குவளைத் தண்ணீரை "ஓம் பூர் புவஸ்ஸுவ:" சொல்லி இறைப்பதற்கும், ஓங்காரத்தை உள்ளேகேட்டு, பரநாத லயம் எய்தும் யோகிக்கும் எவ்வளவோ வேற்றுமையுண்டு. வேதவுண்மைக்கும் மாந்தர் நடைக்கும் வேறுபாடுகள் மிகுந்தன.

## சாதி வேறுபாடு

சமுதாய வாழ்க்கை ஒற்றுமையாக நடத்த எழுந்த முறைவகுப்பு, குண கர்ம விபாகம், சாதிவேறுபாடாகி, ஒரு சாதி பலசாதியாகி, பலசாதி பற்பல சாதியாகி, ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு சாமி, ஐதிகம், கதை, சடங்கு, நூல், குரு, மாமூல்பழக்கம் இவை வலுத்தன.

## தமிழ் நாட்டில்

இந்தத் தொல்லைகளெல்லாம் இல்லாதிருந்த நமது தமிழ்நாட்டிலும் வேறுபாடுகள் புகுந்தன. வீரஅறவோராகிய தமிழர் வாழ்க்கையிலும் கண்ட கண்ட சடங்குகளும், சாதிச்சுவர்களும் எழுந்தன! இவற்றையெல்லாம் ஒழிக்க வடக்கே புத்தரும், மஹாவீரரும் எழுந்தனர். புத்தர் தியானி; மஹாவீரர் தபஸ்வி. "ஆசைத்தளையை அறிவொளியால் வென்று ஆருயிர்களுக்கு அன்புசெய்து வாழ்ந்தால் போதும்; வேறு சடங்குகள் வேண்டா" என்று புத்தர் அறிவை அருளினார். மஹாவீரர், வினைத்தளையுதறி, மனமாசு நீக்கி, கொல்லா விரதவழி நின்று, மாந்தர் ஞானசித்தி பெறும் கடுமையான வைராக்கிய வழியை உபதேசித்தார். இருவர் உபதேசங்களும பிற்

காலம் மதவாதங்களுக்கு உள்ளாயின. ஒருபுறம் நாத்திக வாதம் தாண்டவமாடியது; மற்றொருபுறம் கருமவாதம் பிடிவாதம் செய்தது. இரண்டிற்கும் இடையே நல்லறமாகிய இல்லறம் அல்லற்பட்டது: 'வாழ்வு துன்பக்கனவு; அதை ஒழித்து, உடலை வெறுத்துத் தப்பி ஓடிப்போவதே மனிதன் செய்யவேண்டிய வேலை' யென்று மாந்தர் மயங்கினர். இந்த வறட்டுத் துறவால், நமது நாடு வீரக்கனலிழந்து, அன்னியருக்கு ஆட்பட்டது. வாழ்க்கையணங்கு பாலைவனக் கொடிபோல் ஆதரவற்று வருந்தினாள். வாழ்வை வாழ்விக்க ஒரு பெரியார் வரவை உலகன்னை எதிர்பார்த்தாள்.

## வள்ளுவர்

அதுவே நமது தெய்வப் புலவரான **வள்ளுவர்** எழுந்த காலம். அவரே உலகிற்கு வாழ்வாங்கு வாழும் வகையை விளக்கினார்; அவரே கொல்லாவிரதத்தைத் துலக்கினார்; அறம் பொருள் இன்பப் பொலிவுடன் மாந்தர் இறைவனடிபற்றி நிலமிசை நீடுவாழும் வகையை வள்ளுவர் தாமே பயின்றுகாட்டி, உலகிற்கும் குறள் வடிவாகத் தந்தார். வள்ளுவரும் ஏசுநாதரும் ஒரே நூற்றாண்டில் இருந்தவரே யாவர். இருவரும் உலகிற்கு அஹிம்ஸா தருமத்தை உபதேசித்தனர். ஏசுநாதர் மலைமிசை நின்று, உலகிற்கு உபதேசித்தார். வள்ளுவர் மயிலாப்பூரில் ஓர் எளிய குடிலில் வாழ்ந்து, சத்தமில்லாமல் மெய்வழி காட்டிச்சென்றார். அவர் காலத்தில் ஏசுநாதர் சீடரான தோமா முனிவர் மயிலாப்பூரில் கிறிஸ்து தருமோபதேசம் செய்தார். மேற்கே வளரும் கிறிஸ்து தருமமும், கிழக்கே ஒளிரும் அருளறமும் நமது தமிழ் நாட்டில், மயிலாப்பூரில் ஒன்று சேர்ந்து நிலவின.

## திருக்குறள்

"இறைவன் மலரடிபற்றி அன்பு செய்க! கற்புடைய மனைவியுடன் அன்பும் அறமும் ஈகையும் அருளும் வாய்மையும் தூய்மையும் கொண்ட இல்லறம் நடத்துக! அந்த இல்லறத்தால் இன்பமாகும். பொறுமையும், உயிரிரக்கமும், கொல்லா நோன்பும், திருடாமையும், இயன்ற

நன்மை செய்யும் அருளும் மனிதவாழ்வை உயர்த்தும்; அறிவும், ஆண்மையும் பெருக்கி வீரதீரராக நாட்டை ஆளுக; நாட்டை அன்னியப் பகைவன் கைப்பற்ற விடற்க; அஞ்சாவீரத்துடன் மறத்தை வென்று அறத்தை நிலை நிறுத்தி வீட்டையும் நாட்டையும் புகழ்பெற ஆளுக" என்றிவ்வாறு வள்ளுவர் அருமையாக உபதேசித்தார். சங்கப் புலவரும், தமிழறிஞரும் அதை மெச்சினர்; அறிவாளிகள் போற்றினர். தமிழர் கூட்டம் திருக்குறளை அணிந்து புகழோங்கியது. தமிழ்க்கொடியை நாடெங்கும் நாட்டிய வீரனை திருமாவளனும், நெடுஞ்செழியனும், சேரன் செங்குட்டுவனும், திருவள்ளுவர் பொருட்பாலை யுண்டு வீறு பெற்றுத் தமிழ்வளர்த்த மன்னராவர். இவர்காலம் கி. பி. இரண்டாவது நூற்றாண்டு என்றறிகின்றனர் ஆராய்ச்சியாளர். அதுவே தமிழரின் புகழோங்கிப் பொலிந்த காலம்.

## அடியார்கள்

அதற்குப் பிறகு நாட்டில் உட்குழப்பம் வலுத்தது. அறம் பொருள் இன்பம் வீடு இந்நான்கும் வாழ்விற்குரிய வளமைகளாம். இவற்றில் அறமே பற்றி, அதிலும் இல்லறத்தை வெறுக்கும் துறவறமே பற்றி உலக வாழ்வின் மூச்சைப் பிடித்தனர் சிலர். அத்துடன் நாத்திக வாதமும் வலுத்தது. இந்நிலையினின்றும் நாட்டைக் காக்கவே **அடியார்** தோன்றினர். 'அடியார்' என்ருல் யாரையும் அடிக்காதவர், உதை கொடுத்தாலும் பெற்றுக்கொண்டு போட்ட சோற்றைத் தின்று செல்வோர் என்பது பொருளன்று; 'அடியார்' என்ருல், எல்லாம் வல்ல இறைவனடி பற்றி, அவன் மயமான உலகிற்குத் திருத்தொண்டு செய்து வாழ்வோர் என்பதே பொருள். அடியார்களிற் சிலர் திருமாலை வணங்கினர்; சிலர் சிவனை வழிபட்டனர். முன்னவர் **ஆழ்வார்களா**வர். பின்னவர் **நாயன்மார்** ஆவர். இருவரும் கடவுளன்பையும், ஆருயிரன்பையும், தூயவாழ்வையும் தாமே பயின்று உலகிற்கு விளக்கினர்.

## சைவ வைணவச் சண்டை

சிவனும் நடராஜன்; விஷ்ணுவும் அரங்கநாதன். சிவனும் தனதருளால் விளையாடினன்; விஷ்ணுவும் தனது யோகமாயையால் விளையாடினன். இருவரும் அன்பருக்கு அன்பர்; இருவரும் அறத்தை நிலைநாட்டினர். ஆதலால் சைவவைணவச் சண்டைகள் நமக்கு வேண்டா.

அடியாருள் அப்பர் நம்முன் நிற்கிறார். அவர் பகைவனைப் பகைக்கவில்லை; பகைவனை அஞ்சவில்லை. அவர் அன்புப் பொறுமை எதிரியைத் திருத்தி நேர்வழியில் செலுத்தியது; கல்நெஞ்சையும் இளக்கியது; அருட் பொறுமையின் பெருமையை விளக்கியது. 'இறைவன், சிவன், எல்லாம் வல்லவன், நினைப்பவர் மனம் கோயில் கொண்டவன், அடியார்க் கெளியன்; அவனையே நம்பு, நினை, பணி, சொல், பாடு; அவனையன்றி யாருக்கும் நாம் அடிமை யில்லை; எதற்கும் அஞ்சாதே; உலகின் அரசன் இறைவனே. ஆன்மாக்கள் அவன் குடிகளே. உலகு கோயில்; உயிர்கள் இறைவன் திருமேனி. இறை யுணர்வுடன் வாழ்க' என்று அப்பர் அருளிய திரு மொழிகளே வாழ்வுக்குச் சஞ்சீவியாகும்.

## தாயுமானவர்

ஆழ்வார் நாயன்மார் காலத்திற்குப் பிறகு, தமிழகம் மீண்டும் தலை தூக்கியது; தமிழ் அரசு நிலவியது; கலையும் வீரமும் கடவுளன்பும் செழித்தன. இராஜ ராஜனும், இராஜேந்திரனும் தேவாரப் பாலுண்ட தீரர். அவர்கள் தமிழ்ப்பேரரசை நாட்டினர்; பர்மா, மலேயா, ஜாவா, மணிலா முதலிய நாடுகளை வென்று புரந்தனர். பிறகு தமிழகம் உட்போர்களுக்கு இரையாகிச் சீர் குலைந்தது. பதினைன்காவது நூற்றாண்டில் தமிழ்நாடு அன்னியருடன் பொருத நேர்ந்தது. மூவேந்தர் புகழ் சிதைந்தது. அன்புமில்லை; அறிவுமில்லை; அருளுமில்லை; எங்கும் இருள், அடிதடி, வாள்வீச்சு; வடக்கே சிவாஜி குருகோவிந்தன், பிரதாபசிம்மன் போன்ற தருமவீரர்

எழுந்தனர். தெற்கே கிருஷ்ணதேவ ராயர், திருமலை நாயக்கர், தேசிங்குராஜன் போன்ற வீரர் எழுந்தனர். தெலுங்கரும், துருக்கரும், மராடியரும் தமிழ் நாட்டிற் புகுந்து அதலகுதலப்படுத்தினர். தமிழர் வாழ்வு குலைந்தது. மதுரை, திருச்சி, தஞ்சாவூர், செஞ்சி முதலிய ஊர்கள் தெலுங்க நாயக்கர் வசமாயின. கத்தி தீட்டுவதே தமிழர் கடமையாய்விட்டது. இச்சமயமே இரண்டு ஞானச் சுடர்கள் விளங்கினர்-தாயுமானவர், சதாசிவர். இருவரும் தமது அனுபூதிகளைப் பாடியளித்தனர். இவர்கள் அருளிய வேதவேதாந்த சித்தாந்த ஞானம் பிற்காலமே உலகிற்குத் தெரிந்தது. தாயுமானவர் மகர்ஷி; அவர் வாக்கு தமிழ் உபநிஷத்து. அவரது **பராபரக் கண்ணி** ஒன்றே எல்லாச் சமயசாரங்களையும் பிழிந்து தருகிறது.

## முச்சுடர்கள்

நாட்டில் அறிவும் அறமும் அன்பும் குன்றின; அவற்றைத் தூண்டவே மூன்று சுடர்கள் போல் **சங்கரரும், இராமாநுஜரும், மத்வாசாரியாரும்** தோன்றினர். சங்கரர் ஆத்மஞானந் தூண்டினார்; நாடெங்கும் அத்வைத கோஷம் செய்தார். அவர் ஞானமே இன்றும் நமது நாட்டை உலகிற்குப் புகழ்பெற விளக்குகிறது. விவேகானந்தர், இராமதீர்த்தர், இரமண மகரிஷிகள் அனைவரும் சங்கரஞானிகளேயாவர். இராமானுஜர் இறைவனுக்கே ஆளாகும் அருள்வழியை உபதேசித்தார்; அவரால் கடவுளுணர்ச்சியும் சதாசாரமும் நாட்டில் வளர்ந்தன. மத்வாசாரியார் பக்திமார்க்கத்தை வீராவேசமாக உபதேசித்தார். இம்மூவரும் பாரத தரும தீபத்தின் முச்சுடர்களாவார்.

## மதவாதம்

இம் மகான்களையும் மாந்தர் சரியாக அறியவில்லை; 'ஒன்று, ஒன்றிரண்டு, இரண்டு' என்று சண்டைபோட்டுப் பிரிந்தனர். அறிவு, அன்பு, அருட்பணி (ஞானம், பக்தி, கருமம்) இம்மூன்றும் சேர்ந்தாலே முன்னேற்றம்; இன்றேல் பின்னேற்றந்தான். பின்வந்த மதவாதிகள், 'தாம்

தமது, தமக்கு' என்னும் செருக்கால் உயர்வு தாழ்வு பேசி, நாட்டை வேற்றுமைக் கந்தலாக்கினர். நாடு ஒற்றுமையிழந்தது. அமைதி குலைந்தது. இனி ஒன்று பட்டு முன்னேறவேண்டும்.

[பகவான் திடீரென நழுவி விட்டார்; என்னை மூன்று பட்டாளங்கள் சூழ்ந்தன. அத்வைதசரபம் ஆத்ம நாதர், ஆஜானுபாஹு ஆழ்வார்தாஸன், ஆயிரம் வடமாலை ஹனுமந்தர் எல்லாரும் என்மேல் கேள்வியம்பு விட்டனர்: "அடே பாட்டையா, அத்வைதமா, விசிஷ்டாத்வைதமா, துவைதமா? எது நல்லது?" "என் மதமே நல்லது; சொல்; இல்லாவிட்டால் கோவிலுக்கு வந்தால் விநியோகம் மண்தான்" என்று ஆளுக்கொரு மூலையில் மிரட்டினர். "ஐயா, எது நல்லது—சர்க்கரைப் பொங்கலா, புளியோதரையா, பேளாஹுளியா?" என்று நான் எதிர்க்கேள்வி போட்டேன். "எல்லாம் நல்லதே; கூட தத்யோன்னமும், பத்துப் போளியும், வடை பாயாசமும் சேர்ந்தால் பரமானந்தந்தான்!" என்று வந்தான் தமாஷ் ரங்கன். "இதுவே அதுவே, எனதே உனதே என்பதேன்? ஒவ்வொன்றிலும் உள்ள ரசத்தைப் பருகி சமரஸமாயிருங்கள்" என்று நான் பஞ்சாயத்துத் தீர்க்கும்போதே, என் மனைவி கமகமவென்று மைசூர் ரஸத்தைத் தூதனுப்பிவிட்டாள். நண்பருக்கு விடைதந்து, தமாஷ் ரங்கனுடன் உள்ளே சென்றேன்.]

---

## 11. சுத்தாத்வைதம்

[இன்று அகஸ்தியருக்காக ஆயிரம் கேள்விகள் அச்சிட்டுக் கொண்டு வந்திருந்தார், திருவாளர் சந்தேகப் புலியார்; அத்தனையும் என்மேல் வீசி, 'பாட்டையா, எங்கள் பகுத்தறிவில் நுழையும்படி உனது அகத்தியர் விடை கூறுக்கால், உன்னையே கடாவுவோம்; விடையிறுக்க மறுப்பாயாகில், எமது வம்பு மலரில் அம்பு விடுவோம்" என்றார். எல்லாம் பகவானுக்கே அர்ப்பணம் என்று நான் தொடங்கும்போது, அகஸ்திய முனிவர் பேசினார்; கேளுங்கள்.]

அன்பர்காள்! கேள்வியேன்? வாதமேன்? அமைதி அமைதி! "உள்ள பொருள் ஒன்று; அதுவே ஒவ்வொன்றிலும் ஆத்மாவாக விளங்குகிறது; இயற்கையுடலைப் போர்த்துலாவுவது தூய ஆன்மா; இந்த ஆத்மஞானமடைந்தவன் அஞ்சான், மயங்கான், தளரான்; அமரத்தன்மைபெறுவான். ஆன்மாவின் தன்மை உண்மை, அறிவு, இன்பம்; ஆன்மா என்றும் தானேதானுகத் தாக்கற்றிருக்கிறது. ஆணவ மனத்தின் அலைவுகளாலேயே மனிதனுக்குச் சோகமோக துக்கங்கள் வருகின்றன. "மனதை அடக்கி 'ஆத்மா நான்' என்னும் உணர்வு கொண்டிருத்தலே இன்பவழி" என்று வேதவேதாந்த முதல்வர் உபதேசித்தனர்.

பரமன் ஒருவனே; அவன் அனுதி முத்தன்; அனைத்தும் வல்லவன்; எதிலும் பற்றற்றுத் தானேதானுக, மோன மயமாக, உண்மை அறிவின்ப மயமாக, சிவமயமாக இருப்பவன்; சூரியனுக்குக் கதிர்கள் போல, அவனுக்கு அருட்சக்தி யுண்டு; அச்சக்தி எங்கும் பரவி, ஐந்தொழில் புரிகிறது. ஆன்மா, அனுதி பெத்தன்; அவ்வான்மா ஆணவம், மாயம், கன்மம் ஆகிய மூன்றழுக்குகளால் மூடுண்டு இடர்ப்படுகிறது. இவ்வழுக்குகள் நீங்க வேண்டும். உவர் மண்ணிற் குழப்பி வெளுத்து வண்ணுன் வேட்டியைச் சுத்தம் செய்வதுபோல, அழுக்குகளாற் பற்றுண்ட பாசான்மாவைத் தனுகரண புவன போகாதிகளால் நன்ருக வெளுத்துச் சுத்தான்மாவாக்குகிறது இறைவனருள். அந்த அருளேயே தாரகமாகக் கொண்டுதான் ஆன்மா ஈடேற முடியும். நல்லொழுக்கம், ஆசாரம், வழிபாடு, தோத்திரம், உறுதியான ஆசனத்தில் இருந்து சித்த அலைகளை ஒடுக்கி மனங்குவிதல்; வாசியடக்கல், உள்ளத்தில் இறைவனையே தியானித்தல், அவனன்றி யானில்லை, யாதுமில்லை, எல்லாம் அவனுடைமை, அவன் செயல், அவன் மயம் என்ற ஞானம்—இவையே அருள்வழி காட்டும் சாதனங்கள். பாசான்மா சுத்தான்மாவானதும் அவனருள் இறங்கும்; அருள் அறிவைத் துலக்கும்; அறிவு சிவனைத் துலக்கும். சிவஞானப் பேறு பெற்றவர் இரண்டறக் கலந்து சிவமய

மாவர். 'நம: சிவாய' என்று வழிபடுக; 'சிவோஹம்' என்று தியானிக்க; 'சிவமயம்' என்னும் அனுபூதி பெறுக! சிவம் கடல் போலும்; உலகான்மா ஆறு போலும்; தட்டுத்தடைகளை யெல்லாம் பொறுமையாகத் தாண்டிக்கொண்டு "சிவோஹம், சிவோஹம்" என்று பாடி அன்பு செய்துகொண்டே ஆறு, கடலைச் சேரவேண்டும் என்பது சித்தாந்தமான சுத்தாத்வைத உண்மையாகும். சர்வ சமயசாரமும் சித்தாந்தத்தில் அடங்கும். சித்தாந்தம் உலகைச் சிவமயமாகக் காணும்; ஆன்மாக்களை இறைவன் திருமேனியாகக் காணும். இரவியையும் திங்களையும், பஞ்சபூதங்களையும், சீவர்களையும் சிவனுருடைய அஷ்டமூர்த்தங்களாகக் காணும்.

**வைணவம்:** உலகம் விஷ்ணுமயம்; விஷ்ணு புருஷோத்தமன்; அவனே சர்வாந்தர்யாமி; ஜீவ புருஷனையும், இயற்கையையும் அவனே தாங்குகிறான். உலகம் அவன் ஆடரங்கம்; யோகமாயையால் அவன் சகுணனாக உலகில் விளையாடுகிறான். ஜீவாத்மா சிற்றறிஞன்; பரமாத்மா முற்றறிஞன். அவன் சர்வசாக்ஷி, அந்தராத்மா, நியாமகன், சர்வ வல்லபன், அனைத்தையும் படைப்பவன்; எதிலும் பற்றிலான். அவன் எல்லா உயிர்களின் உள்ளத்திலும் இருக்கிறான்; இயற்கைச் சக்கரத்தில் அகப்பட்டு மனிதன் சுழல்கிறான். இந்த முக்குண இயற்கையைத் தப்ப வழி இறைவன் திருவடிப் பற்றேயாம். மற்றுப் பற்றின்றி, பரமனடியில் அடைக்கலம் புகுந்து, அவன் திருநாமங்களையே சொல்லி, அவன் பணியே புரிந்து, ஒவ்வொரு செயலையும் அவனுக்கே வேள்வியாக்கி, அவனுக்கு வழிபாடாக வாழ்வதே அவனருளைப் பெறும் வழி; அவனருளால் அவனைக் காணலாம்; அவனை அணுகலாம்; அவனுரு வெய்தலாம்; அவனுடன் கலக்கலாம். இந்த சாயுச்சியப் பதவியே மீளா நெறி. '**ஓம், நமோ நாராயணாய**' என்று அன்பு செய்க! நாராயணனே அந்தராத்மா என்று தியானஞ் செய்க! எல்லாம் அவன் மயம் என்றுணர்க!—இதுவே இன்பவழி என்று **வைணவம்** நிலைநாட்டும்.

மத்வ, சைதன்யர் ஹரிபக்த பரவசராய் உலகிற்கு அன்பு வழி காட்டினார்; குரு நானகர் கடவுளை நிர்க்குண

மாக உபாசித்து நாமஜபமும், நல்லோர் கூட்டமும், குரு பக்தியும், வைராக்கியமும், சமநோக்கும், கடவுளையே தியான கானத்தால் அடையும் வழியும் துலக்கினர்.

இவ்வாறு பாரத தருமத்தைப் பல மஹான்கள் சிறப்பித்தனர். எனினும், பத்தொன்பதாவது நூற்றாண்டில் அன்னிய மோகத்தால் நம்மவர் நாட்டிற்குரிய அறிவைப் புறக்கணித்தனர். நமது நாட்டில் இரண்டு பெரிய நாகரிகங்கள் வந்து கலந்தன : ஒன்று இஸ்லாமிய நாகரிகம், மற்றொன்று ஐரோப்பியக் கிறிஸ்தவ நாகரிகம். கிறிஸ்து தருமம் நெடுநாளாக நமது நாட்டில் இருந்தது. ஐரோப்பிய தருமமே நமது நாட்டிற்குப் புதிது. இஸ்லாமிய தருமம் நமக்குக் கலைவளமீந்தது; பலமொழிக் கலப்புள்ள நாட்டிற்கு ஒரு பொது மொழியைத் தந்தது; அக்பர் போன்ற நீதி மன்னரை ஈந்தது; கபீர் போன்ற அருட்கவியைத் தந்தது; தாஜ்மஹால் போன்ற சிற்பச் செல்வத்தை யீந்தது. ஐரோப்பிய தருமம் நம் எண்ணங்களை விசாலமாக்கியது; குறுகிய மனப் பான்மைகளை விரிவாக்கியது; புதுமை யுணர்வீந்தது; ஆராய்ச்சியறிவைத் தந்தது; உலகுடன் நாம் தாராளமாகப் பழக, சக்தி பெற்ற ஆங்கில மொழிவளத்தை யளித்தது.

பல நாகரிகங்கள் வந்து மோதிய அதிர்ச்சியில், நமது நாட்டிற்குரிய அத்யாத்ம தருமம் நிலை குலைந்ததுதான் பிசகு. ஐரோப்பிய வீறும், பாரத ஞானமும் ஒன்று சேர்ந்து நாம் பூரணம் பெறவேண்டும். மேற்கும் கிழக்கும் பொருந்தி வாழவேண்டும். பாரத தேசம் போலி ஐரோப்பாவாகக் கூடாது; அதற்குரிய உன்னதமான ஆத்மஞானத்துடன் மேனாட்டின் செயலாற்றலையும் பெற வேண்டும். அறிவையும், செயலையும் இணைப்பது அன்பு, உள்ளன்பு; உள்ளன்பால் ஒருமை துலங்கும்.

இந்த ஒருமையை இராஜாராம் மோஹன் ராய் உபதேசித்தார். அவர் பைபிளையும் வேதத்தையும் நன்கு மதித்தார்; "பிரமம் ஒன்று; அது நிர்க்குணம்; அது அபேதம்; அதைத் தியானத்தால் உள்ளே உணரலாம்; அதை ஆத்மாவாகவே காணலாம்; அதுவே நீ; அதை அடைவதே இன்பம்; அந்த அடைவிற்குச் சாதி மத

வேறுபாடுகளும், சடங்குகளும் வேண்டா. அது சர்வ சமரஸப் பொருள். எல்லாருக்கும் இந்தப் பிரமஞான மும், நல்ல கல்வியும் தரவேண்டும். பெண்ணடிமை ஒழியவேண்டும்; இருபாலாரும் கல்வி கற்க வேண்டும்; பாலிய விவாகம், கைம்பெண் துயரம், உடன்கட்டை, புரோகிதக் கொடுங்கோல் இவையெல்லாம் ஒழியவேண் டும். இந்தியர் ஆங்கிலம் கற்று, எண்ணங்களை விசால மாக்க வேண்டும். மேனாட்டின் கலையறிவும், பாரத நாட் டின் கடவுளறிவும், ஒன்று சேர்ந்து புதிய சமுதாயத்தை உண்டுபண்ண வேண்டும்'' என்பது இராஜாராம்மோஹன் ராயின் பிரம்மசமாஜக் கொள்கையாகும். ஆனால் அவ ருக்குப் பிறகு நமது பாரத வாலிபர் ஐரோப்பியக் கலை யில் மோகங்கொண்டு, பாரதநாட்டு அத்யாத்மக் கலை யைப் புறக்கணித்தனர். சிலர் ஆங்கிலம் படித்து அன் னிய மோகங் கொண்டனர்; பலர் கல்வி மணமே இல் லாமல், மடமையில் ஆழ்ந்தனர். தமிழ், ஆரியம் இரண் டும் பாரத நாகரிகத்தை விளக்கும் இரண்டு தொன் மொழிகள். ஆங்கிலத்திற்கு நமது நாட்டில் முதன்மை வந்ததும், தமிழைப் போற்றுவார் அருகினர்; வடமொழி நெடுங்காலத்திற்கு முன்பே வழக்கற்று, வங்கம் இந்தி மராத்தி குஜராத்தி முதலிய வடநாட்டு மொழிகளிற் கலந்து உயிர்த்தது. இம்மொழிகளுக்குச் செல்வாக்குக் குறையவே வேதாந்த சித்தாந்த ஞானமும் குன்றிப் போனது. சாதி சமய வேறுபாடுகள் மிஞ்சின. இவ் வேறுபாடுகள் ஒரு குலமைந்தரைப் பலராகப் பிரித்தன; பிரித்தாலும் கொள்கையுடையாருக்கு இப்பிரிவினை ஆக்கமீந்தது.

நாட்டில் ஒற்றுமை நிலவவேண்டும். ஆரிய திரா விட வேதங்களில் பொதிந்துள்ள சுத்த சமரச சன் மார்க்க ஞானம் மீண்டும் எழுந்து பொலியவேண்டும். பேதபுத்தி ஒழிந்து எல்லாரும் ஒரே அருட்குலமாக வாழ வேண்டும். இதற்கொரு புதிய சக்தி பிறக்கவேண்டும்.

அந்தப் புதிய சக்தி இரண்டு அருட்புலவராக எழுந் தது; பத்தொன்பதாவது நூற்றாண்டில் உலகிலேயே மிகப் பெரிய மஹான்களாக அவதரித்தவர் இருவர்: வடக்கே

பரமஹம்ஸ இராமகிருஷ்ணர்; தெற்கே அருட்சோதி இராமலிங்கர். முன்னவரை உலகெல்லாம் அறியும்; தமிழராக உதித்த பின்னவரைத் தமிழர்கூட இன்னும் அறியவில்லை! அவர் கண்ட சுத்த சமரச சன்மார்க்கத்தை நோக்கியே உலகம் மெல்ல மெல்லச் செல்லுகிறது. சாதிசமய சாத்திர கோத்திர சடங்குக் கட்டுப்பாடுகளை உதறித்தள்ளி, நேராக அருட்சோதி சித்தி பெற்று, ஆன்மநேய ஒருமையால் அருளாட்சியை நிலைநாட்டி அமர நிலைபெறும் சுத்த சன்மார்க்கத்தை, அவர் அருட்பாடலாக நமக்கு அளித்துச் சென்றார். அந்த அருளருவி வாழ்வுப் பொறியிற் பாய்ந்தால், அருட்சோதி மின்சாரம் பிறக்கும்; அதனால் உலகில் இருள் ஒழிந்து அருள் விளக்கமாகும். அந்த மகத்தான உண்மை தமிழருக்குக் கிடைத்தும் உலகறியப் பரவாமல், இன்னும் தமிழ்நாட்டைப் புறச்சமயங்கள் படையெடுத்துக் கொண்டே யிருக்கின்றன. திருமூலர், அப்பர், தாயுமானவர், அருட்சோதி வள்ளலார்—இந்நான்கு மஹான்களும் கண்ட சன்மார்க்கம் உலகிற்கு எல்லா நலங்களும் அளிக்கவல்லன.

இருபதாவது நூற்றாண்டில் பாரத நாடுகண்ட பெரிய உண்மை, அஹிம்ஸா தருமமே. அன்பு, பொறுமை, வாய்மை, தூய்மை, மனவுறுதி—இவை அஹிம்ஸா தருமத்தின் ஐந்துயிர்கள். கடவுளன்பு, ஆருயிரன்பு, பொதுநல வாழ்க்கை, பணிக்கே உயிர்த்தல், எளிமை, தேவைக்கு மேலே சேர்க்காமை, கள்ளாமை, கரவின்மை, கனவிலும் பொய்யாமை, தீண்டாமை யொழித்தல், கதரணிதல், குடிசைத் தொழில் வளர்த்தல், தொழிலுடன் இணைந்த கல்வி கற்றல், தாய்நாட்டன்பு, சமய வேறுபாடின்றி அனைவரும் ஒருதாய் மைந்தரென்று உணர்தல், பகைவரையும் பகையாமை, தியாகம், பிறரை வருத்தாமல் இடர்களைப் பொறுத்துச் சத்தியத்தை நிலைநாட்டும் சத்யாக்கிரகம், அஞ்சாமல், கலங்காமல் தீமையைப் பொறுமைகொண் டெதிர்த்தல் — இவையெல்லாம் மஹாத்மா காந்தியடிகள் தாமேபயின்று, தியாகாக்கினியிலிருந்து நமக்கு விளக்கிய அரிய உண்மைகளாகும். இவையனைத்தும் அஹிம்ஸா தருமத்தில் அடங்கும்.

இத்துடன் பாரத சக்தியின் முன்னேற்றம் நிற்காது. அஹிம்ஸை அதன் அகண்ட சக்தியின் ஒரு கனற்பொறியேயாகும்.

பாரத சக்தி இன்னும் தனது பூரணப் பொலிவுடன் விளங்கவில்லை. வேதாந்த சித்தாந்த சாரமான சுத்த சமரச சன்மார்க்கம், மனித வாழ்வின் அனுஷ்டானத்திற்கு வரவேண்டும்; அதற்கு மனிதவாழ்வே யோகமாக வேண்டும். மனித ஜாதியே தெய்வத்தன்மையால் திவ்ய ஜீவனம் பெறவேண்டும். அந்நாளை எதிர்பார்ப்போம்.

---

## 12. நாம் வீழ்ந்ததேன்?

[சந்தேகப்புலி என்மேல் வெகுண்டு பாய்ந்தார். "அட பாட்டையா, உன் அகத்தியர் வேதாந்தம், சித்தாந்தம், ஆத்மா, யோகம், கடவுள் கிடவுள் என்று பேசி, எமது கேள்வியைப் புறக்கணித்தார். அவர் சொன்ன மதங்களும் உயிரோடுதானே உள்ளன; பிறகு நாம் இப்படி வீழ்ச்சியடைந்ததேன்? சொல்லடா" என்று நேரில் கேட்டு வம்பு மலரிலும் எனக்கோர் அஷ்டோத்திரம் நடத்திவிட்டார். நான் பகவான் திருவடிகளே சரணம் என்றிருந்தேன். நல்ல வேளையாக பகவான் பேசத் தொடங்கினார்-கப்சுப்! கேளுங்கள்:]

அன்புமணிகாள், நமது வீழ்ச்சியின் காரணத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்: ஒவ்வொரு சமுதாயமும் கூட்டுறவினாலும், கூட்ட வுணர்ச்சியினாலும் முன்னேறுகிறது; பழைய நன்மைகளையும், காலத்திற்கேற்ற புதிய நன்மைகளையும் போற்றுகிறது; கல்வியும் தொழிலும் எங்கும் பரவச் செய்கிறது; தனக்குத் தேவையான பொருளைத் தானே விளைக்கிறது; பிறர் சார்பில்லாமல் வாழ்கிறது. தற்காப்பிற் கேற்ற படையூற்றம் பெற்றுள்ளது. நண்பரைப் போற்றுகிறது; பகைவரை வீழ்த்துகிறது; எதிரி ஓர் அடி கொடுத்தால், பத்தடி திருப்பிக் கொடுக்கப்பலம் பெற்றுள்ளது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸு, ஜெர்மனி, ரஷ்ஷியா, இத்தாலி, துருக்கி,

ஜப்பான்—இந்த எட்டு நாடுகளும் மேற்சொன்னவாறு அறிவும் ஆற்றலும், படையூற்றமும் பெருகி விளங்குகின்றன. அவற்றிற்கு உலகில் மதிப்புண்டு, செல்வாக்குண்டு.

நமது நாட்டைப் பார்ப்போம்: முதலில் நமது கண்ணை மகிழ்விப்பது நம் நாட்டு வளமை—"கனியும், கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் நாடு." அதே சமயம் நமது கண்ணை வருத்துவது நம்மவர் வருந்தும் கொடிய வறுமை நோய். மற்ற நாடுகளில் ஒவ்வொருவரும் நாளுக்கு 3 ரூபாய் ஈட்டுவர்; நம்மவர் சராசரி 2 அணுவில் அரைக்கஞ்சி குடித்துப் பிழைத்து வருகின்றனர். ஒருவேளைக் கஞ்சிக்கும் இல்லாது வருந்தும் கோடானுகோடிப் பேர்கள் இங்கிருக்கிருர்கள். ஜனத்தொகை மட்டும் வட்டிபோட்டு வளர்கிறது. 35 கோடியிலிருந்து 40 கோடியானது. பிறநாடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு படித்தவர்; இந்நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு எழுத்தறியாதவர்! எழுத்தறியாதவர் விலங்குகளுக்குச் சமானம் என்றனர் பெரியார். "*Illiterate Brute*" (படியாத விலங்கே) என்று ஆங்கிலத்திலும் சொல்வர். நமது நாட்டிற் பெரும்பாலார் அந்த நிலையில் இருக்கிருர்கள். படித்தவர்களும் என்ன பெருமை பெற்றனர்? பெரும்பாலார் கச்சேரி மூலையில் பேனு ஓட்டுகின்றனர்; சிலர் டாக்டர் பட்டம்பெற்று அன்னிய மருந்துப் புட்டிகளைச் செலவாக்குகின்றனர். சிலர் வக்கீல்களாகி ஒரு மணிநேரப் பஞ்சாயத்தில் தீரும் விவாதங்களுக்கு ஓராண்டு வாயிதாவுக்கு வாயிதா, ஏழைக் கட்சிக்காரரை இழுத்தலைக்கின்றனர். சிலர் பள்ளிக்கூட ஆசிரியராகித் தாம் கற்றதையே சிறுவருக்குக் கற்பிக்கின்றனர். நமது நாடு முன்னே செய்த தவப்பயனுல் ஏதோ சில மகான்கள் எழுந்து விளங்குகின்றனர். மற்றப்படி நாடு இருளில் மூழ்கியுள்ளது.

இன்று எதிரி விமானம் வந்து குண்டுமாரி பெய்தால் ஒன்று அடைக்கலம், இன்றேல் ஆங்கிலேயர் காப்பு—இரண்டைத் தவிர வேறு கதியில்லை. "ஏன்,

கிருஷ்ணன் வந்து கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்தால் குண்டு தாக்குமா?'' என்கிறார் ஒருவர்; அதெல்லாம் அந்தக் காலக்கதை. விஜயனும் இராஜராஜனும் விளங்கிய நாட்டில், அச்சமும் அடிமை மோகமும் குடிகொண்டிருக்கின்றன. இந்தியா என்றால் சாதிமதக் கலகமும் மூடக்கொள்கையும் நிறைந்த கையாலாகாத நாடு என்று பிறநாட்டார் இகழும் நிலையில் நமது நாடு இருக்கிறது.

நமது நாடு புண்ணியபூமி, தவமுனிவர் நாடு; குறளும் கீதையும் தந்த நாடு. இன்னும் இங்கே கடவுட் காட்சிபெற்ற முனிவர் இருக்கின்றனர். அவர்களை உலகம் வணங்குகிறது. ஆனால், நாடெங்கும் வகுப்புக் கலகங்கள் பெருகிவருகின்றன. ஒற்றுமை மருந்துக்குக் கூட இல்லை. வடக்கே இந்து—முஸ்லிம் சண்டைகள் எரிமலைபோலக் கிளம்பி அனற்குழம்பை வீசுகின்றன. தெற்கே பிராமணரல்லாதார் கிளர்ச்சி நடக்கிறது. கட்சிச் சண்டைகளைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை; ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு கூடக் கட்சிச் சண்டைகள் வலுத்திருக்கின்றன. கையில் ஆயுதமெடுக்கச் செயலில்லை, சட்டமும் தடுக்கிறது; ஆதலால் வாய்வாணங்களும், பத்திரிகைகளில் கடுமையான சொல்லம்புகளும் பறக்கின்றன. பத்துப்பேர் சேர்ந்து ஒரு காரியத்தை நிறைவேற்றப் புகுந்தால் நூறுபேர் அதற்கு எதிர் செய்கிறார்கள். வாய்வசவு, பேனாவசவு, கட்சி, கூட்டம், கும்மாளம், கேள்வியம்பு, தடிவீச்சு—எல்லாம் நடக்கின்றன! ஒருவன் ஓரடி முன்னுக்குப் போனால் மற்றவன் பொறாமை, அவனைப் பத்தடி பின்னுக் கிழுக்கிறது. போட்டி, கீரைக்கடைக்கு எதிர்க்கடை போடுகிறது. காலத்திற்குதவாமல் உளுத்துப்போன மாமூல் பழக்கங்களே மதத்தின் பெயரால் விளங்குகின்றன. தற்போது ஆங்காங்கு, சில தவயோகிகள் விளங்குகின்றனர்; அவர்களைச் சுற்றிலும் சிறிது ஞானவொளி வீசிக்கொண்டிருக்கிறது. என்றாலும், இந்துக்களில் பெரும்பாலோர் தங்கள் சமய சாரத்தை அறியாமலும், பயிலாமலும் இருக்கின்றனர்; ஆதலால், பர சமயங்களுக்கு நல்லவேட்டை!

நாடு காவலில்லாச் சத்திரம்போ லிருக்கிறது ; அதில் பிறர் புகுந்து உக்கிராணத்தைக் காலி பண்ணுகின்றனர். நாமோ அரைப் பட்டினியுடன் சத்திரத்திண்ணையில் கோள் போட்டி பொறாமைகளால் கட்சிச்சண்டை போட்டுக் காலத்தைச் சூதாடுகிறோம். நம் நாட்டில் நாம் தலைநிமிர்ந்து நடக்க, அன்னியரிடம் தூது நடக்கிறோம் ; ஏமாறி ஏமாறி உளந் துடிக்கிறோம்.

ஜனங்களுக்குள் சாதிமத உணர்ச்சியால் ஆயிரக்கணக்கான வகுப்புவாதங்கள், போட்டி பொறாமைகள் உள்ளன. ஒருவன் வாழ ஒருவனுக்குப் பொறுக்கவில்லை. பிறநாடுகளில் ஒரு புலவன் எழுந்தால் அவன் புகழ் உலகளாவச் செய்கின்றனர். நம் நாட்டில் அவனிருக்கு மட்டும் அசட்டை செய்து, அவன் மனந்தளர்ந்து காலஞ் சென்றபின் புகழச்சேகண்டி யடிக்கின்றனர். அதிற் கூடச் சாதி யுணர்ச்சி புகுவதுண்டு.

எத்தனை வகுப்புகள் ! நமது தமிழ் நாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள் : வருணாசிரம வைதிகப் பிராமணர் ; காங்கிரஸ் பிராமணர் ; இரண்டுமில்லாத பிராமணர் ; அவர்களுள் வடமர், வாத்திமர், பிரகசரணர், அஷ்டசகஸ்ரர். தெலுங்கர்: அவர்களுள் வெல நாடு, மூலக நாடு, கர்னகம்புலு ; கன்னடர் : அவர்களுள் மடவேற்றுமைகள் ; சங்கர வேதாந்திகளுள்ளும் சிருங்கேரி கும்பகோணம் என்ற பிரிவினை ; வைணவருள் தென்கலை வடகலை என்ற பிரிவினை ; பிறரிடையே முதலியார்,பிள்ளைமார்,செங்குந்தர்,கார்காத்தார்,தொண்டைமண்டலத்தார், வன்னியகுல க்ஷத்திரியர், யாதவர், நாயுடு, ராஜு, சாத்தானி, திருக்குலத்தார் முதலிய கணக்கற்ற வகுப்புகள் ! ஒவ்வொரு வகுப்பும் சங்கம் நடத்தித் ‘ தானே உயர்வு ’ என்கிறது. ஒன்றுடன் ஒன்று கலப்பதில்லை, உண்பதில்லை. எந்தச்சாதி, எந்தமதமானாலும் தமிழரெல்லாரும் ஒரே குலம் என்று பேசுகின்றனர் ; ஆனால் மனம் வேறுபட்டே நடக்கின்றனர்.

சமூகத்துள் நுழைந்தோமானால் நமது கண்ணை முதலில் உறுத்துவது பெண்ணடிமை தான். பெண்களும்

ஆண்களைப் போன்று சரிநிகர் சமானமான ஆன்மாக்கள் என்பதைச் சமுதாயம் உணர்வதில்லை. சீதேவி போல் வாழும் வயதில், எத்தனை பெண்கள் மூலை யிருளில் முக்காடுபோட்டமுகின்றனர்! அந்தோ, அவர்கள் வாழ்க்கை நரகமாயிருக்கிறதே! செழித்த முகத்தைக் காண்பதே அரிதாயிருக்கிறது. எங்கும் கவலை சுமந்த முகங்களையே காண்கிறோம். கட்டுறுதியும், வலிமையும், வனப்புங் கொண்ட மாந்தரைக் காண்பதே அரிதாயிருக்கிறது; உடல்வற்றி, நெஞ்சுலர்ந்து, கண்குழிந்து, பிணிசுமந்து, சட்டை மினுக்காலேயே ஆளாகத்தெரியும் மாந்தரையே காண்கிறோம். நாலுமுழத் துணிகூட இல்லாமல் குளிர் வெயிலில் வருந்தும் கோடானுகோடி மக்கள் நமது நாட்டில் இருக்கிறார்கள். பஞ்சப் பட்டாளமும், பட்டினிப் பட்டாளமும் நாட்டில் வட்டமிடுகின்றன; பாதையில் விழுந்து குவிகின்றன.

நமது சமயம் சீர்கெட்டிருக்கிறது. கிறித்துவருக்குத் தமது சமயத்திற்குரிய பைபிள் தெரியும்; ஞாயிறு தோறும் அவர்கள் கோயில் புகுவர்; பைபிள் படிப்பர், கடவுளை வணங்குவர். இஸ்லாமியர், ஐந்து வேளை நிமாஸ் செய்வர், குரான் ஷெரீஃபை ஓதுவர்; நபிநாயகம் விதித்த கட்டளை இன்னதென்றறிவர். அம்மத போதகர் நாடெங்கும் பிறரை மதமாற்றித் தமது எண்ணிக்கையை அதிகமாக்குகின்றனர். இந்துக்களோ, தமது சமய அறிவைக் கைவிடுத்தனர். வேதமறிந்தவர் எத்தனை பேர்? அனுட்டிப்பவர் எத்தனை பேர்? உபநிடதம், பிரம சூத்திரம், கீதை, குறள், தேவார திருவாசகங்கள், திருவாய்மொழி முதலிய புண்ணிய நூல்கள் நமக்குள்ளன. அவற்றின் எண்ணிக்கை தான் நம்மவருக்குத் தெரியும்! அவற்றை யுணர்ந்து நடப்பவர் மிகச்சிலர். அவற்றின் உண்மைகளை விளக்கிப் பிறரையும் தமது சமயத்தில் சேர்ப்பவர் இலர். தயானந்தர் புண்ணியத்தாலும், நாவலர் புண்ணியத்தாலும் சிறிதுவேதாகம உணர்ச்சி ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஆங்காங்கே பிறமதம் புகுந்தவரை இந்துக்களாக்கச் சுத்தி இயக்கம் நடக்கிறது. அதற்கும் ஏராளமான எதிர்ப்புகள் உள்ளன. பரம்பரையை ஒட்டித்தான் நம்மை நாம் இந்துக்கள் என்கிறோம்.

இந்து தருமத்தை நாம் மறந்து விட்டோம். 'அவன் பார்க்கக்கூடாது, இவன் தொடக்கூடாது; மற்ளுெருவன் கிட்டவரக்கூடாது' என்று சிறு பிள்ளைத்தனமாகக் காலத்திற்குதவாத குறுகிய பழக்கங்களெல்லாம் நம்மிடம் நிறைந்திருக்கின்றன.

இப்படிப்பட்ட வேறுபாடுகளாலும், சிக்கல்களாலும் நமது நாடு முன்னேற்றமடையாமல், பிறருக்கு அடிமையாயிருக்கிறது.

*பிரிவினை*—இதுவே நம் நாட்டின் சாபக்கேடு! அலெக்சாந்தர் காலம் முதல் பார்த்தால் நமது நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம், 'பிரிவினை' செய்யும் வஞ்சனையே யாகும் என்பதை அறிவோம். சென்ற 500 ஆண்டுகளாக ஓர் உணர்ச்சியே இல்லாமல், நமது நாடு கெட்டது. நம்மவரே அன்னியருடன் சேர்ந்துகொண்டு தாயின் மார்பில் ஈட்டி பாய்ச்சுகின்றனர். அதே தீமைதான் நம்மை இன்னும் பிறருக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது.

"அப்பா, உன் ஆடைக்கு நூற்றுக்கொள், அன்பாயிரு; எல்லாரும் ஒரு குலம் என்று நினை; தீண்டாமையை ஒழி; இந்து முஸ்லிம், கிறிஸ்து, பார்சி, சீக், ஜைன்—என்ற மத வேறுபாடுகளெல்லாம் அவரவர் வீட்டுடன் நிற்கட்டும்; நாட்டில் அனைவரும் ஒரு குலத்தோழரே யாவர்; ஒருவரை யொருவர் மதித்து நடக்க வேண்டும்; கள், கஞ்சா போன்ற மயக்கப் பொருள்களை ஒழித்துவிடுக; சுதேசப் பொருள்களைப் போற்றுக: அதனல் நமது பணம் நமக்கே பயனுகும்" என்றெல்லாம் ஒரு பெரியார் வேண்டுகிறுர். நாடு முழுதும் அவரைப் பின்பற்றவில்லை. சத்தியாக்கிரகம் இன்னும் காராக்ரகத்திலேதான் வருந்துகிறது! தீண்டாமையை ஒழிப்பதா? "ஆ! சட்! இந்த மனிதர் ஹிந்து தருமத்தையே பாழாக்குகிறுர். எமது கோயிலைப் பறைச் சேரியாக்குகிறுர்" என்ளுெரு பக்கம் வைதீகக் கூச்சல் கிளம்புகிறது. மற்ளுெரு புறம், "எல்லாம் பார்ப்பான் வேலை, நம்பாதே!" என்ளுெரு கூச்சல்; இன்னெருபுறம், "துண்டுபோடு நாட்டை"

என்றொரு கிளர்ச்சி. இன்னொருபுறம், "எங்கள் சபையே இந்திய நாட்டின் பாதுகாப்புக் கழகம். அது சொல்வதே வேதவாக்கு" என்றொரு பெருங் கிளர்ச்சி நடக்கிறது.

இவற்றை யெல்லாம் மதிற்பூனைபோலப் பார்க்கும் அன்னியருக்கு மகிழ்ச்சி பொங்குகிறது. 'வகுப்புப் பொத்தானை அழுத்திவிட்டால் இவர்களின் வாய் விசிறி படபடவென்று சுழன்று கொண்டிருக்கும்; நாம் ஹாயாகச் சாய்வு நாற்காலியிற் படுத்து அதிகாரம் செய்யலாம்' என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். "எல்லாரும் சேர்ந்து வாருங்கள்; பிறகு பார்ப்போம்" என்பதே நமது கேள்விக்குப் பதில். நாம் கட்சிவாதத்தால் தற்கொலை செய்து மடிகிறோம். வீடு கொள்ளை போகும் போது அண்ணன் தம்பி பாகத்திற்கு அடித்துக்கொண்டு, திண்ணனுக்கு அள்ளிக் கொடுத்த கதை தான்!

இதுதான் நமது நாட்டு நிலை: இந்நிலை நமக்கு வந்ததேன்? ஒற்றுமைக் குறைவால். ஒற்றுமைக்குத் தடையேன்? உண்மையறியாத சாதிமதப் பிடிவாதங்களால். தமிழகத்தில் வகுப்புணர்ச்சி சினங்கொண்டு கிளம்புவானேன்? (1) தமிழர் தமிழ்ப் பெரியார் உள்ளத்தை அறியவில்லை; (2) பல வகுப்புகளாகப் பிரிந்து கூட்டுணர்ச்சி *(Unity of Consciousness)* கெட்டு நலிகின்றனர்; (3) தமிழ்—தமிழர், தமிழகம் இவற்றிற்கே நாம் வாழவேண்டும் என்ற நினைப்பில்லை; அவரவர் தத்தமக்குரிய பழைய மாமூல் பழக்கங்களிலேயே பிடிவாதம் செய்துகொண்டிருக்கிறார்கள்; (4) சைவம், வைணவம் ஆகிய இரண்டு சமயங்கள் இங்கே முதன்மையாக விளங்குகின்றன; இரண்டும் சமநோக்கங் கொண்ட பெரியார் அருளிய சமயங்களே; அவற்றை நாம் அனுஷ்டிப்பதில்லை. நமது சமய ஞானமெல்லாம் சமையலறைச் சண்டையாக வந்து முடிந்தது. நாய், பன்றி, எலி, மூஞ்சூறு பார்த்துச் சாப்பிடலாம்; நம்மைப்போலப் பகுத்தறிவுள்ள ஒரு மனிதன், நம்மவன், நமது தமிழன் பார்த்துச் சாப்பிடக் கூடாதென்றால், அவன் மனம் புண்படுமல்லவா? தமிழன் தமிழனை எல்லாவிதத்திலும் சரிநிகர் சமானமாக நடத்தினால், பிராமணன் யார்?

அப்பிராமணன் யார்? ஏதோ ஒரு காலத்தில், அக்காலத் தேவைக்காகத் தமக்குள் ஆரியர் செய்து கொண்ட வருண தருமத்தைக் கொண்டு, இன்று ஒரு பெரிய நாடு பிரிவினைகளால் தற்கொலை புரிந்து கொள்ளுகிறது. இச்சாதி யுணர்ச்சி வேரோடொழிய வேண்டும். அந்தண்மை, வீரம், தொழில், தொண்டு — இந்நான்கும் ஒரு சமுதாயத்திற்குப் பொதுத் தன்மைகளாயிருக்க வேண்டும். இவற்றால் நாலுசாதிகள் உண்டாகி நாற்பதாயிரம் பிரிவினைகள் பிறக்கக் கூடாது. சாதி வேறுபாடு பாராட்டும் வரிகளை நமது சமய நூல்களினின்று நீக்க வேண்டும். மனிதனை மனிதன் பிரித்து, வேற்றுமை பாராட்டும் எந்தச் சமயத்தையும் இனி நாம் ஏற்க முடியாது; வகுப்புவாதத்தின் காரணத்தை அறிந்து நாம் தக்க சிகிச்சை செய்ய வெண்டும்.

நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்: (1) எல்லாரும் படித்திருந்தால், அவரவர் தகுதிக்கேற்ற அலுவல் கிடைக்கும்; (2) கல்வியைக் கட்டாயமாகவும், இனமாகவும் செய்தால், சாதிமத வேறுபாடில்லாமல் எல்லாப் பிள்ளைகளும் படித்தே தீருவர்; (3) தொழில் முயற்சி ஏராளமாக வேண்டும். 'பேனா ஓட்டும் சர்க்கார் வேலையே வேலை; மற்றதெல்லாம் ஒரு படி தாழ்வு' என்ற மாயம் நம்மவரைப் பலமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. வெள்ளைச் சட்டை போட்டு நாற்காலியில் உட்கார்ந்து மேசை மேல் காகிதம் வைத்துப் பேனாவோட்டும் குமாஸ்தாவை மதிக்கிறோம். உலை மூட்டி நாளெல்லாம் இரும்புத் தொழில் செய்யும் பாட்டாளி நமக்குக் கணிசமானவனாகத் தோன்றுவதில்லை. இத்தொழில் அவமதிப்பு, தமிழர் இயல்பிற்கே பொருந்தாது. இடியாப்பக் கிழவிக்குக் கூடத் தமிழர், தொழில் மதிப்புத் தந்திருக்கின்றனர். படித்தவர்களெல்லாரும் பேனாத் தொழிலிலேயே போய் அடைவதால், பலவேறு தொழில்கள் அருகின; உழைப்பிலும் பிழைப்பிலும் ஓரகம் புகுந்தது; சண்டையெழுந்தது! அவரவர் இயல்பிற்கேற்ற தொழிலை வளர்க்காமல், ஒரே துறையில் போட்டி போட்டு நம்மவர் வருந்துகின்றனர். வயிற்றுக்குச் சாதிமத வேறுபாடில்லை; சமுதாயத்திற்குப் பயனுள்ள எத்தொழிலையும் செய்யலாம்.

ஓர் ஊரில் ஒருவனுக்கு வக்கீலில் நல்ல வருமானம் வந்தால் நூறு பேர் அதே தொழிலை மேற்கொண்டு, அதன் மூச்சைப் பிடிக்கிறார்கள். "நீ அந்தத் தொழில் செய்; நான் இந்தத் தொழில் செய்கிறேன்" என்று சமுதாயத் தொழில்களைப் பாகுபாட்டுடன் நிரல்படச் செய்தால் முரணின்றி வாழலாம். அஃதின்றி ஒரு துறையில் ஒரே வகுப்பினர் சென்றடைக்கின்றனர். பிறர் வெளியிலிருந்து கூச்சல் போடுகின்றனர்: சாதிப்பித்தம், மனிதனை மனிதன் மதிக்காமல் நடத்தல், சமூக ஊழல்கள், உளுத்துப் போன மாமூல் பிடிவாதங்கள், கல்வியின்மை, தொழிற் பாகுபாடின்மை, வறுமை, மடமை—இந்த எட்டுமே நமது வீழ்ச்சிக்குக் காரணங்கள்.

நமது சமுதாய வாழ்வும் பிரிவினைகளும் மத சம்பந்தமானவை என்கிறோம்; நமது நாடு புண்ணியநாடு என்கிறோம்; வேதாந்தம், சித்தாந்தம், பௌத்தம், சமணம், இஸ்லாமியம், கிறிஸ்தவம் ஜாரதுஷ்டிரம், உலகாயதம் ஆகிய எட்டுச் சமயங்கள் இங்கே வழங்குகின்றன: இவற்றில் எவையும், பிரிவினைச் சண்டை செய்து நாட்டைப் பிறருக்கு அடிமையாக்கச் சொல்லவில்லை.

மனவேறுபாடு தான் இனவேறுபாடாகிறது. மனமொன்றினால் இனமொன்றும். உணருங்கள், உணருங்கள்!

[அகத்தியர், உணர்ச்சியைக் கிளப்பிவிட்டுச் சென்றார். மறுநாள் பத்திரிகைகளில் பேனாச்சிலம்பம் நடந்தது. "அகத்தியர் காந்தீயத்தைப் புகுத்தியதேன்? எம்மைக் குத்திப் பேசியதேன்?"..."இந்தப் பாட்டையா தான் பின்னாலிருந்து வேலை செய்கிறான்" என்று சிலர் என் முகத்தில் அரட்டைத் துப்பாக்கியை நீட்டினர். நான் மெல்லக் கம்பி நீட்டி, 'சிவ சிவா' வென்று உச்சிப் பிள்ளையார் கோவிலில் போய் நன்றாகக் கும்பகர்ண நாடகம் போட்டேன்! அகத்திய பகவானே எனக்கு வக்காலத்து வாங்கிப் பேசும் போது, என் ஓட்டை வாயைத் திறப்பானேன்?]

# 13. நாட்டில் பாதி

இன்று மாலை அகத்திய பகவான் அருளிய திருமொழி களை யெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தேன் ; நான் தமிழருக்குச் சொல்ல நினைத்ததெல்லாம் பகவான் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் : 'இனி நமது தமிழர் முன்னேறி விடுவார்கள் ; இனி முனிவரை அலைக்க வேண்டாம்' என்று தமாஷ் அரங்கனுடன் பேசிக் கொண்டிருந்தேன். தமாஷ் அரங்கன், "அட பாட் டையா, அகத்தியர் இனித் தப்ப முடியாது; மற்றொரு படை வருகிறது பார்! அதற்குப் பதிற் சொல்லியாக வேண்டும்" என்றான். அச்சமயம் ஸ்ரீமான் பொதுஜன மும், ஸ்ரீமதி பொதுஜனமும் வந்தனர். "அகோ, வாரும் பொதுஜன தம்பதிகாள் ; பகவான் பேச்சுக்கள் எப்படி?" என்று வரவேற்றேன். "பரவாயில்லை ; ஆனால் எனது ஸ்ரீமதிக்குத்தான் பெரிய மனக்குறை ; அதைச் சொல் லவே வந்தோம்" என்றார்.

*நான் :* அம்மா பொதுஜனதேவீ, ஏதாவது அப சாரம் நடந்ததோ? மன்னிக்க வேண்டும்.

*ஸ்ரீமதி :* அதெல்லாம் சரி; அகஸ்தியர் ஆண்களுக் குத்தானே பேசினார் ; நாட்டில் பாதி பெண்கள் ; நாங் கள், அடுப்பங்கரைச் சிறையில் அடிமையா யிருக்கிறோமே; தலை நிமிர்ந்து கைவீசி நடக்கக்கூட உரிமையிழந்து, வாயில்லாப் பூச்சி போலிருக்கிறோமே. குழந்தை மணம், கிழட்டு மணம், கட்டாயத் தாலி, வரதட்சிணை, கல்வி தராத மடமை, விதவைத் துயர் முதலிய பல இடர்களால் வருந்துகிறோமே ; அகத்தியருக்குத் தெரியவில்லையா? அல்லது லோபாமுத்திரையும் உரிமை கொண்டாடுவாள் என்று எங்கள் உரிமையை மறுக்கிறாரா?

*நான் :* பொதுஜன தேவியே, இப்போது உரிமை யுடனேதான் பேசுகிறாய் ; உன்னைப்போலத் தடதட வென்று எனக்கு வார்த்தை வரவில்லை. ஆனால் என் சம்பந்தப்பட்ட மட்டில், எனது ஸ்ரீமதி தான் வீட்டை ஆளுகிறாள் ; என் சம்பளத்தை அவளிடம் பாதகாணிக்கை

வைத்து விடுகிறேன். அவள் கட்டளையைச் செய்து, போட்டதைச் சாப்பிட்டுத் திண்ணைக்கு வந்து விடுகிறேன்; மறுஉத்தரவு பிறக்குமட்டும் ரேழியைத் தாண்டுவதில்லை. எனது ஸ்ரீமதியும், "கைவீசிக் காற்ருட நடக்க முடியாமல், வீட்டிலேயே சிறை கிடக்கிருேமே" என்ருெருநாள் முணுமுணுத்தாள். "அம்மணீ, நீ காற்ருட உலாவு; நான் அடுப்புக்காரியம் பார்த்துக் கொள்ளுகிறேன்; வந்ததும் இலைபோடுகிறேன்" என்றேன். "ஆமாம், மாதம் மூன்றுநாள் உமது நளபாகத்தைப் பார்க்கிறேன்!" என்று சிரித்து அடுப்பங்கரை உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்ருள்! "பொதுஜனதேவி, அடியேன் இன்னும் எப்படி நடக்க வேண்டும், சொல்; நடக்கிறேன்" என்றேன்.

ஸ்ரீமதி : உம்மைப்பற்றிப் பேச்சில்லை; எங்களைப் பற்றி அகத்தியர் கருத்தை அறியவேண்டும். ஏதோ அவர் மேற்கும் கிழக்கும் சுற்றிப் புதுஉலகை அறிந்ததாகச் சொல்லுகிருரே; அவர் இப்போது லோபாமுத்திரையை எப்படி நடத்துகிருர் என்பதையும் அறியவேண்டும். எங்களுக்குப் பேட்டிதரச் சொல்லும்; அல்லது ரேடியோவில் பேசச்சொல்லும்; இன்றேல் நாங்கள் கிளர்ச்சி செய்வோம்!

நான் : பகவானிடம் முறையிடுகிறேன்: பலன் நாளை ரேடியோவில் தெரியும் என்று சொல்லிப் பொதுஜன தம்பதிகளுக்கு விடைகொடுத்து விட்டு, தமாஷ்ரங்கனை நோக்கினேன்: அவன், "பாட்டையா, இன்று கனவில் உளறியடிக்கப் போகிருர்" என்று என்னை ஒரு குட்டுக் குட்டி எழுந்துசென்ருன். அன்றிரவெல்லாம் கனவு, கனவு! ஒரு பெரிய பெண்பட்டாளம் என்னைச் சூழ்ந்துகொண்டு கூச்சலிட்டது; பரிதாபக் காட்சிகள் பல கண்டேன். எல்லாரும் என்னை வைது சபிப்பதுபோலிருந்தது. நான் உளறிக் கொண்டேன். "அகஸ்திய பகவானே, இவர்களுக்குச் சமாதானம் சொல்லியருளவேண்டும்: இன்றேல், என் மண்டை உருளும். என்னைக் காத்தருள வேண்டும் பகவானே!" என்று வேண்டிக்கொண்டேன். பகவான் கனவில் லோபாமுத்திரையுடன் தோன்றிஞர். "அன்பா,

நாங்கள் இருவரும் கலியுகத்திற்கு ஏற்றபடி சரிநிக ராகவே பழகுகிறோம்; எனது பத்தினிக்கு எக்குறையு மில்லை. 'இக்காலம் பெண்கள் எப்படி நடக்க வேண்டும்; ஆண்கள் எப்படிப் பெண்களை நடத்த வேண்டும்' என்பதைப்பற்றி எனக்கு நேற்றெல்லாம் உபதேசித் தாள். நாளை அவளுடன் வந்து ரேடியோவில் பேசுவேன் பார்!'' என்று மறைந்தார். பிறகு தான் எனக்கு அமைதியாகத் தூக்கம் வந்தது. காலையில் பொது ஜன தம்பதிகளுக்கும் தகவல் சொன்னேன். எல்லா ரும் அகத்தியர் பேச்சை எதிர் பார்த்திருந்தார்கள். எனது முன்னுரை நச்சும் முடிந்தது. சரியாக இரவு 7-30 மணி; பேச ஆரம்பித்தேன். "நான் தான் அகத் தியர்; லோபாமுத்திரையுடன் வந்திருக்கிறேன். இன்று இருவரும் தற்காலப் பெண்ணினத்தைப் பற்றிப் பேசப் போகிறோம்''—என்றேன்.

**அகத்:** முதலில் ஒன்று சொல்லி விடுகிறேன். தொல்காப்பியர் என் மனைவியைக் கழிகொடுத்து வைகை வெள்ளத்தில் நடத்தி வந்ததாகவும், நான் சந்தேகப் பட்டுச் சாபம் கொடுத்ததாகவும் வழங்கும் கட்டுக் கதை சுத்தப்பொய்! நான் லோபாமுத்திரையைக் கொடு மையாக நடத்தியதாக ஸ்ரீமதி பொதுஜனம் சாட்டும் குற்றமும் தவறு. என் மனைவியே சமாதானம் சொல்லு கிறாள், கேளுங்கள்:

**லோபா:** நான் லோபாமுத்திரை; என் பேச்சைக் கேளுங்கள்: என்னருமைச் சகோதரிகாள், எனது கண வர் எப்போதும் என்னைச் சமமாகவே நடத்தினார். என்னைப் பழைய பாட்டி என்று அலட்சியம் செய்யா தீர்கள்; இந்தக்காலப் பெண்களையும் நான் குற்றாலத்தி லும் பாணதீர்த்தத்திலும் பார்த்திருக்கிறேன். இவர் கள் எவ்வளவு சுதந்திரம் வேண்டுகிறார்களோ, அதற்கு மேலேயே என் கணவர் எனக்கு சுதந்தரம் அளித்தார். இருவரும் ஒருவரே; இரண்டுடலிற் குடிகொண்ட ஒரே ஆன்மா, ஓருயிர், ஓருள்ளம்; இருவரும் கண்ணும் கண் ணும்போல வாழ்கிறோம். என் கணவர் எனக்கு அரிய கல்விப் பயிற்சி தந்தார்; ஞானம் புகட்டினார்; யோகம்

பயிற்றினர்; நான் அவர் தவத்துணைவியாகி, அவருக்கு வேண்டிய அன்னபானதிகளைத் தயாரித்தளித்தேன். அவர் கந்தமூலபலாதிகளைச் சீடர்மூலம் வரவழைத்துத் தருவார்; நான் பக்குவம் செய்து தருவேன். இருவரும் பசித்தபோது உண்போம்; மற்றப்போது, அறிவையும் தவக்கனலையும் வளர்ப்போம். இப்போது சீமையிலிருந்து நண்பர் ஃபோக் (போகர்) வந்து எங்கள் விருந்தாளியா யிருக்கிறார். அவருடன் நான் கலகலப்பாகவே பேசுகிறேன். இக்காலம் அறிவு விரிவடைந்துள்ளது; சம தருமம் எழுந்து விளங்குகிறது; பூதபௌதிக ஞானம் உலகை ஆளுகிறது. இருபாலாரும் கற்றுத் தேர்ந்து சமுதாய சேவை செய்கிறார்கள். எனது கணவருக்கும் எனக்கும் இவை யெல்லாம் சம்மதமே.

**அகஸ்:** லோபாமுத்திரை, இந்தக் காலத்தில் பெண்ணினம் படும் துயர்களுக்கெல்லாம் சிலர் பழைய மத சம்பிரதாயங்களையும் ஸ்மிருதிகளையும் குற்றஞ் சாட்டுகிறார்களே; அவற்றைப்பற்றி உன் கருத்தென்ன?

**லோபா:** காலத்திற்கேற்றபடி மதமும் ஸ்மிருதியும் உண்டாகும். தருமம், 'பொது, சிறப்பு' என இரண்டு வகையாகும். தன்னை யறிதல், ஆருயிர்களிடம் அன்பா யிருத்தல், மனமொழி மெய்த்தூய்மை முதலிய தருமங்கள் பொது; காலத்திற்கேற்றபடி மக்கள் முன்னேற்றத்திற்காகவே அவை அமைவது சிறப்பு. இக்காலம் தேச சேவை, தொழில் முயற்சி, சமரசம், சுதந்திரம் முதலியன யுக தருமங்கள். மனுவுக்குப் பிறகு வந்த பராசரர், கலி யுகத்திற்குச் சட்டம் வகுத்தார். திருவள்ளுவர் சட்டம் எல்லா யுகங்களுக்கும் பொருந்தும். அவர் கற்புள்ள பெண்மையை, அன்பும் அறமும் விளங்கும் இல்லற வாழ்க்கையை, மேன்மைப்படுத்தினர்.

**அகஸ்:** லோபாமுத்திரை, இக்காலம் காதல் மணம் என்கிறார்களே; மணவினையைப்பற்றி உன் கருத்தென்ன?

**லோபா:** மானிடத்தின் இரண்டு தத்துவம், ஆண், பெண் என்பதாகும். ஒன்றின்றி மற்றொன்றில்லை; இரண்டும், உயிரும் உடலும் போலும். இரண்டின்

உள்ளமும், உயிரும் உடலும்போல் அன்பினுல் இணைந்தால், மணவாழ்க்கை இன்பமாகும். வினைத்தெரியுமுன் விவாகம் செய்யக்கூடாது. ஆண் பெண் இருவரும் நன்ருகக் கல்வி கற்க வேண்டும்; பிரமசரியம் காக்கவேண்டும்; உடலுறுதி பெற வேண்டும்; யோகம் பயில வேண்டும்; வாழ்வின் கேள்விகளுக்கு விடை சொல்லும் திறமை வேண்டும். பிறகு இயற்கையுணர்ச்சியால் மனமொத்த இருவர் காதலராகி பெற்ரோருக்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்து, அவர்கள் ஆசியும், பெரியோர் ஆசியும் பெற்று இல்லறம் புகலாம். அதன் முன்பே பிழைப்பிற்கு ஒரு தொழில் புரியவேண்டும்; பசிக்கு ஒரு நல்ல தொழிலுடன் மனத்தைப் பரமனிடம் வைத்து அன்பும் அறமுங் கொண்ட இல்லறம் நடத்தவேண்டும். இல்லறத்திற்கு உயிர், கற்பொழுக்கமே. ஒரு கணவனை மணந்தால் மனைவி அவனுக்கு உண்மையாக நடக்க வேண்டும்; கணவனும் அவ்வாறே; இருவருக்கும் கற்பு வேண்டும். கணவன் உடல்நலத்தை மனைவி பேண வேண்டும்; மனைவியின் மனமறிந்து கணவன் வேண்டியதைச் செய்யவேண்டும்.

**அகஸ்:** சரி, கணவன் தவறிப்போனல் மனைவி என்ன செய்யலாம்? இந்தக் காலம் மறுமண இயக்கம் நடக்கிறதே; அது சரிதான?

**லோபா:** சரிதான்; அந்தக்காலம் கற்புள்ள பெண்டிர் கணவன் பிரிவைத் தாங்காமல் உடன்கட்டை ஏறினர்; கணவனிறந்த பெண்களைச் சிலர் படுத்தும் பாட்டைவிட, உடன்கட்டை மேல் என நினைத்தனர். அந்தக் கொடிய பழக்கம் ஒழிந்தது. இப்போது உடன்கட்டைக்குப் பதில், உடன் மொட்டை வந்திருக்கிறது! இது பெண்ணின் வாழ்வைக் கண்ணீர் வாழ்வாக்குகிறது. ஆண்கள் செய்யும் இக்கொடுமையைப் பெண்கள் எதிர்க்க வேண்டும்.

**அகஸ்:** லோபாமுத்திரை, அமங்கலிகளுக்கு வெள்ளைப் புடவை கட்டிப் பலகாரம் போட்டு மூலையிலடைப்பது ஆண்களன்று; பெண்களே அந்த நாசகாரியத்தை நடத்துகிருர்கள். இது சரியா?

**லோபா:** நாதா, ஸ்மிருதிகளை ஆண்களே எழுதியிருப்பதால் பெண்களுக்கு வாயில்லை; சட்டம், அமுல் எல்லாம் ஆண்கள் கையில்; அவர்கள் கட்டாயத்திற்கே நாங்கள் இணங்கவேண்டி யிருக்கிறது. நீரும் முனிவர் தாமே; இன்று பழைய விதியை மாற்றிவிட்டதாக வானொலியில் பேசுமே!

**அகஸ்:** சரி, இதோ பேசுகிறேன்: அன்பர்காள், 'இனிக் கணவன் இழந்த வனிதையரை அலங்கோலமாக்கவேண்டியதில்லை. மொட்டை, மூலை, முக்காடு, இவை தேவையில்லை. அவர்களும் மற்றவர்களைப்போல் இருக்கலாம். ஆனால் நான் என் கருத்தைச் சொல்லுகிறேன். அமங்கலிகள் முப்பத்தைந்து வயதிற்குள் இருந்தால், குழந்தைகள் இல்லாதிருந்தால், சந்ததிக்காக மறுமணம் புரியலாம். குழந்தையுள்ள விதவைகள் அவற்றைப் பேணிக்கொண்டு, அறிவையும் அருளையும் வளர்த்துப் பொதுநலம் புரிந்து புனிதராக வாழலாம். முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட கைம்பெண்கள் புலன்களை அடக்கித் தவங்காத்து அறிவாற்றல்களை வளர்த்துப் பொது நலமே புரியலாம். உன் கருத்தென்ன?

**லோபா:** ஒப்புக்கொள்கிறேன். இளங் கைம்பெண்கள், மனைவியை இழந்த இளம் ஆடவர்களை மணம் புரிதல் நல்லதே: ஒருவனுடன் வாழ்வதே நலம். முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட கைம்பெண்கள், தவவொழுக்கமும், அறிவு வளர்ச்சியும், பொதுநலமுமாக வாழ்வதே நல்லது. சமுதாயத்திற்குப் பயனுள்ள ஏதாவதொரு தொழில் செய்தே இவர்கள் பிழைப்பது பெருமையாகும். முதன்மையாகப் பெண்கள் கல்விக்கு இவர்கள் தொண்டு செய்யலாம்; மருத்துவமும் குழந்தைப் பள்ளிக்கூடமும் நடத்தலாம். மக்களிருக்கும் கைம்பெண்கள், மக்களை ஆளாக்குவதிலேயே கருத்தூன்றுவது நலம். முப்பத்தைந்து வயதிற்குட்பட்டு, உடலில் பலமும், மனத்தில் தெளிவும், மனைவி யிழந்த வரனும் கிடைத்தால் இவர்களும் மணம் புரியலாம். ஆனால் பெற்ற குழந்தைகளுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கவேண்டும். இவ்

வாறு மறுமணம் புரிவதால் கள்ளத்தனங்கள் ஒழியும்; வேசை விடுதிகள் குறையும்.

**அகஸ்:** அதற்கு என்ன சொல்லுகிருய்? கோயிலுக்குப் பொட்டுக் கட்டுகிருர்கள்; சிலர் கலைவளர்க்கவே தேவதாசிகள் வேண்டுமென்கிருர்கள்.

**லோபா:** கலைக்கும் பொட்டுக்கும் சம்பந்தமென்ன? குடும்பத்தில் உத்தமிகளாயிருந்து கலை வளர்க்கலாகாதா? தங்களுடனிருந்தே நான் எத்தனையோ கலைகளைக் கற்றிருக்கிறேனே. அந்தக்காலம் சில பெண்கள் தம்மைக் கடவுளன்பிற்கே அர்ப்பணித்தனர்; அவர்களே தேவதாசிகள். தெய்வத் தொண்டு செய்பவரே தேவதாசர்; தெய்வத்திற்கே ஆளாகி அருட்பணி செய்த பெண்களே தேவதாசிகள். அவர்கள் ஆடல், பாடல், அழகு எல்லாம் பக்தி பரவசத்தில் எழுந்தவை. காலக்கேட்டினுல் தேவதாசிகள் வேசைகளாஞர்கள். வேசைவிடுதிகள் இனி ஒழியவேண்டும்; தேவதாசிகள் திருமணம் புரிந்து இல்லறம் நடத்த வேண்டும். சமுதாயம் பெண்களை அடிமைப்படுத்தாமல் கௌரவமாக நடத்தவேண்டும். இளங்கைம்பெண்கள் மறுமணம் புரியவேண்டும். வெறும் சாதகப் பொருத்தம் மட்டும் பாராமல், உணர்ச்சிப் பொருத்தம், உடலுறுதி, உள்ளன்பு இவற்றைப் பார்த்தே இருபாலாருக்கும் திருமணம் செய்ய வேண்டும். வயிற்றுக் கொடுமை தீரப் பெண்களுக்கு நல்ல கல்வியுடன் ஏதாவது தொழிலும் கற்பிக்கவேண்டும். இசை, நாடகம், நடனம், சிற்பம், சரித்திரம் முதலிய கலைகளைப் பெண்கள் பயில வேண்டும். மற்ஞெரு விஷயம்: இப்போது குடும்பச் சொத்தில் ஆண்களுக்கே பங்கிருக்கிறது. இனிப் பெண்களுக்கும் சமபங்கு தரவேண்டும். அந்தப் பங்கிலிருந்து இருபாலருக்கும் கல்வி, கலியாணம் எல்லாம் நடக்கவேண்டும். இவ்வாறு செய்தால் பெண்கள் நிலை உயரும். அவர்கள் மானமாக வாழ்வார்கள். இல்லறம் பொலியும். பெண்ணடிமை ஒழியும். வேசைவிடுதிகளுக்கு இடமிராது. ஆண்—பெண் சரிநிகர் சமானராக வாழலாம்.

**அகஸ்:** லோபாமுத்திரை, இவ்வளவு சீர்திருத்தம் போதுமென்று நினைக்கிறேன். ஸ்ரீமதி பொதுஜனம் கோரியதும் இதுவே. என்னருமைத் தமிழர்காள், விடைபெற்றுக் கொள்ளுகிறேன். இவ்வளவு உபதேசம் போதும். சொன்னபடி செய்து ஒற்றுமையாக முன்னேறுங்கள். எனது நண்பர் போகர் காத்திருக்கிறார். இருவரும் இனித் திருக்கைலை சென்று, வருங்கால உலகமைப்பைப் பற்றிச் சிவபிரானிடம் கலந்துகொள்ள வேண்டும். பிறகே அவர் விமானத்தில் மேற்கே செல்வார். உங்கள் நன்மைக்காக சில நூல்களை ஒரு சித்தர் மூலம் எழுதியுதவுவோம். அவற்றைக் கற்றுணர்ந்து, அன்புடன் ஆன்மநேயராக வாழுங்கள். எல்லாம் இனிது வாழ்க!

---

## 14. எனது திண்டாட்டம்

இந்தப் பேச்சு முடிந்ததோ இல்லையோ, என்னை இரண்டு படைகள் சூழ்ந்துகொண்டன: ஒன்று அன்புப்படை, இன்னொன்று எதிரிப்படை. அன்புப்படைத் தலைவி, ஸ்ரீமதி பொதுஜனம்; என் மனைவியும் அதில் சேர்ந்திருந்ததால் கொஞ்சம் தைரியம் வந்தது. "நல்ல காரியம் செய்தீர்கள்; அகஸ்தியர் எங்கள் உள்ளத்தையே எதிரொலித்தார். தாத்தா நல்லவர்; லோபாமுத்திரை இசைந்தால் எங்கள் சங்கத் தலைவியாகயிருக்கலாம். இந்த வாரக் கூட்டத்தில் அகத்தியருக்கும் லோபாமுத்திரைக்கும் நன்றி கூறித் தீர்மானம் நிறைவேற்றிப் பத்திரிகைகளுக்கு அனுப்புகிறோம்" என்றனர். மற்றொரு படை காலகோடி சர்ப்பக்கூட்டம் போலச் சீறிப்புடைத்து, கனல் கக்கி வந்தது:

—ஐயோ, போதும் ஆசீர்வாதம்—அண்ணா, மன்னிக்க வேண்டும்.

—மன்னிக்கவேண்டுமா?... உன்னைப் பெருமாளே கேட்க வேண்டும்.

—அண்ணா, பெருமாள் கேட்கட்டும். சரியான பதில் சொல்லுகிறேன்.

—அகத்தியராம், லோபாமுத்திரையாம், ரேடியோவில் பேசுவதாம்; ஸ்ரீமதிவிவாகமாம், விதவாவிவாக மாம்!...என்ன அநியாயம்? கலிமுற்றிப் போனது?

—அண்ணு, கலிமுற்றினுல் கிருதயுகம் பழுக்கும்; எல்லா ரும் சுதந்தரமாக வாழலாம்.

—உன் சுதந்திரத்திலே தீவைக்க! பிராசீன ஆசார அனுஷ்டானங்களை யெல்லாம் கெடுக்கவா, இந்த வேலை செய்தாய்? உனக்குப் பிராமண சாபம் வந்தது; உருப்படி யாகமாட்டாய்.

—அண்ணு, என் உரு, படியாகாது; அது எண்சாண் மனி தனுகவே யிருக்கும்!

—கேலியா செய்கிருய்? நாளைத் தெரியும். காலம் கெட் டுப்போனது. பெண்களுக்கு மீசை ஒன்றுதான் பாக்கி...அனுசாரம் முற்றிப்போனது; சந்தி மாத் யானம் இல்லை; பள்ளுப்பறை யில்லை.

—அண்ணு, உங்கள் வாயே பறையா யிருக்கிறதே; திரு வாக்கின்படி இனி நமது நாட்டில் தாழ்த்தப்பட்ட வரே இல்லையென்ருகட்டுமே. தீண்டாமை வேண் டோம். எல்லாரும் நம்மைப்போல மனிதர்களே. அவர்களும் கோயில் குளங்களுக்கு நம்முடன் வரட் டுமே.

—அட அனுசாரமே! தீண்டாப் பிள்ளைகளைத் தெருவில் விடலாம், கோவிலுள் விடலாம் என்று வேறு அகத் தியரைப் பேசச் சொல்லுவாயோ? அப்படி ஏதா வது நடந்தால், உன் தலையிலே இடி விழும்.கவனம்...

—அண்ணு, என் தலையிலே ஆயிரம் இடி விழுந்தாலும் பரவாயில்லை; நாமெல்லாரும் சாதிமத வேறுபாடில் லாமல், ஒரே குலமாக வாழ்ந்தால் போதும்.

—நீ வாழ்ந்தாய்! பாஷாண்டிப்பயலே, ஸ்மிருதியில் ஒரு வரி தெரியாது. சீர்திருத்தம் பேசுகிருனும்...

—நானு, பகவான் அகத்தியரே பேசுகிறுர்; அவருக்கு வேதம் ஸ்மிருதி எல்லாம் தலைகீழ்ப் பாடம். உலக மும் காலமும் அனுசரித்தே பேசுகிறுர்.

—எல்லாம் உன் சேட்டை. எங்கே, அகத்தியரும் போக ரும் எங்கள் தெரு யாகமண்டபத்திற்கு வந்து வைதீக சபையில் பேசட்டும்? சொல்லுகிறேும். யாரையோ பிடித்துப் பேர்வைத்து, இப்படி ஊரைக் கலக்கிஞய்; உன்னைச் சும்மா விடமாட்டோம். நாளை எங்கள் சபையில் வந்து மன்னிப்புக் கேட்டு பஞ்சகவ்யம் ஒரு படி குடித்துச் சங்கல்பம் சொல்லிக் காவேரியில் எருக்கு வைத்து மூழ்கி பள்ளிகொண்ட பெருமா ளுக்கு அர்ச்சனை நிவேதனம் செய்யவேண்டும். அப் படியானுல் தான் உன்னை ஜாதியில் சேர்ப்போம்.

—ஜாதியே வேண்டாம் ஸ்வாமி; பகவானும் நானுமாக வாழ்கிறேும்.

—பஹிஷ்கரித்தோம் உன்னை; இனி உனக்குப் பரகதி யில்லை. போ பிரஷ்டா?

இந்தக் கும்பல் போய்விட்டது. மற்றேுர் கும்பல் "புரட்சி வாழ்க!" என்று அட்டகாசம் செய்துகொண்டு வந்தது. அதன் தலைவர், பகுத்தறிவுப் பெருமாள்; என் கையில் ஒரு கேள்விச்சுருளைத் தந்தார். "இதற்குப் பதில் சொல்லியாகவேண்டும்; இன்றேல் இதோ பார்!" என்று சடசடவென்று தோழர் தடியரவம் செய்தனர். கடவுள் உண்டா? மதம் உண்டா? அகத்தியர் முனிவர் என்ப தெல்லாம் உன் புரட்டுத்தானே? சிவன் உண்டா? கயிலை உண்டா? தமிழைப் பேச வந்த குள்ளர் வேதாந்தம் சித்தாந்தம் என்று ஆத்மச்சரடு திரிப்பானேன்? உமது அகத்தியனைக் காட்ட முடியுமா? அவன் மனிதனுனல் முன்னே வரட்டுமே; திருமதி அகத்தியர் மறுமணத் திற்கு முப்பத்தைந்து வயதைக் குறித்ததேன்? நாற்ப தில் மணம் புரிந்தால் குழந்தை உண்டாகாதோ? ஆண் பெண் சம்பந்தத்திற்குப் புரோஹிதர் தேவையில்லை யென்று சொல்லாததேன்? பிடிக்காத ஆண்மகனைத்

தள்ளிவிட்டு இன்னொருவனைக் கூடலாம் என்று சொல்லாததேன்? கற்பு என்பதேன்?

—போதும், பகுத்தறியும் பெருமாளே; உமது சுருளை ஆடியமாவாசையில் அகத்தியர் குகையில் வைத்து விடும். பகவான் சித்தம் நடக்கட்டும்.

—பகவானும்! அமாவாசையாம்!—புரட்டு—புரட்டு—வாயைத் திற, சொல்லுகிறோம். [இவ்வாறு சொல்லிச் சுருளைப் பறித்துக்கொண்டு "எமது வெற்றி" என்று அந்தக் கூட்டம் சென்றது!]

எனக்கு உதறலெடுத்து விட்டது. 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததே; நான் தமிழர் நன்மைக்காக அகத்திய பகவானை வேண்ட, இப்படித் தொல்லையானதே! காத்தருள் பரம் பொருளே!' என்று நான் பாட்டிழுத்தேன். வந்தான் **தமாஷ் ரங்கன்.**

—பாட்டையா, எல்லாம் இப்பொழுதே அழுது விடாதேடா; நாளை ரேடியோவுக்குக் கொஞ்சம் மிச்சம் வைத்திரு.

—"இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே......தரனனறே...

—ஐயோ, இழுக்காதே; போதும் அழுகை; உனக்கென்ன துக்கம் வந்ததடா பாட்டையா?

—நண்பா, எனக்கு நாலு பக்கமும் இடி......எங்கும் வசவு......!

—அட பாட்டையா, பொதுநல உரலிற் புகுந்தால் உலக்கையிடிக்குப் பயந்து முடியுமா?

—எல்லாரும் என்னை உலக்கையால் தீட்டவேண்டும் என்கிறாயா? நான் பொதுநல உரலிற் புகவில்லை; இன்றிரவே கைலாச யாத்திரைக்குத் தயார்; தீர்மானந்தான்.

—அட, உனக்கு வயது ஐம்பது தானே; அதற்குள்ளா கைலாசப்ராப்தி; சை பாட்டையா, நீ மூட்டை

கட்டிக்கொடுத்த நூல்களெல்லாம் வெளிவர வேண்டும்; உன் பாட்டு தமிழ் நாட்டில் முழங்க வேண்டும்; உனக்கு மாலை போட்டு ஊர்வலம் நடத்த வேண்டும்; 'சபாஷ் பாட்டையா' என்று உன் முதுகில் நாலு வைக்க வேண்டும் என்றெல்லாம் நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். நீ சந்நியாசப் பயணம் பண்ணி விடாதே......

—நண்பா, நான் **தமிழை** நேசித்தேன்; **யோகத்தைக் காதலித்தேன்;** தமிழுக்கு வேண்டியதெல்லாம் எழுதி மூட்டை கட்டி உங்களிடம் முன்பே தந்துவிட்டேன்; இனி அன்பர் பொறுப்பு; எனக்குப் புகழ் மாலை வேண்டாம்; அதில் மொய்க்கும் **கொசுக்கடி**யும் வேண்டாம். என் பெயரே வெளியே தெரிய வேண்டாம்; நான் பாடியது எழுதியது எல்லாம் சிவார்ச்சனை. அர்ச்சனை மலர்களை அன்பரிடம் தந்துவிட்டேன்; அழகும் மணமும் இருந்தால் அவை பயனாகட்டும்; எனக்கு அந்தக் கவலை யில்லை. உபநிஷத்தும் வேதமும் எழுதிய அருட்புலவர், தமது பெயரைக்கூட சொல்லாமல் பரமஞானத்தைப் பாடியளித்தனர். தான் பாடிய திருவாசகத்தை மாணிக்க வாசகர் திருப்பிக்கூடப் பார்க்கவில்லை. நீண்ட காலத்திற்குப் பிறகு அது உலகிற்குப் பயனானது. ஆயிரம் ஆண்டிற்குப் பிறகே கம்பனையும் வள்ளுவரையும் உலகம் அறிந்தது. அப்படி என்னை அறிய வேண்டும் என்ற ஆசைகூட எனக்கு இல்லை. என் எழுத்தில் உலகிற்கு ஏதாவது பயனிருந்தால், அதன் நன்மைக்கே ஆகுக. உங்களுக்கு என் இலக்கிய மூட்டை கனத்தால், பேசாமல் சிதம்பரம் நடராஜப் பெருமான் திருவடியில் வைத்து விடுங்கள். அவனிச்சை நடக்கட்டும். நான் தமிழருக்குப் பேச வேண்டியதை, பகவான் அகத்தியர் பேசி விட்டார். இதோ "**அகஸ்தியர் யாத்திரை**"யும் எழுதி விட்டேன்! அவர் பேசியதெல்லாம் இதில் உள்ளது. இனி எனக்குச் சிவானந்தமே, ஆனந்தம்!

—அட, உன் ஆனந்தத்தில் கொள்ளி வைக்க; பைத்தியம் பிடித்துத்தான் உளறுகிறாய். 'நல்ல கவி' என்று உன்னைப் பிரசித்தப்படுத்த நினைத்தோம்; இப்படி ஆண்டித்தனமாகப் பேசுகிறாயே. சட்...பார் இதை!... நண்பன் ஒரு கடிதம் தந்தான்—ரேடியோக் கடிதம்:]

"ஐய, தாங்கள் அகத்தியரை அழைத்து வந்து எங்கள் நிலய ரேடியோவில் மாதா மாதம் பேசச் செய்ததற்காக, முன்னூறு ரூபாய் சன்மானமளிக்கிறோம். இது அகத்தியர் கட்டளை. நாளை, தாங்கள் அகத்தியருக்கு நன்றி கூறிவிட்டு, இத் தொகையை அம் முனிவர் பெயரால் பெற்றுக் கொள்ளுங்கள்......இப்படிக்கு......"

சரி; கைலாச யாத்திரைக்குப் பணம் கிடைத்தது என்று நான் மகிழ்ச்சி யடைந்து ஒப்புக் கொண்டேன்.

—பார்த்தாயா பாட்டையா, நாளை முதல் உனக்குச் சுக்கிர தசை, "இரவு எட்டு மணிக்குத் தயாராயிரு" என்று தமாஷ் ரங்கன் மேற்கொண்டு கிண்டல் செய்யாமல் சென்றான்.

நானும் உள்ளே சென்று இரண்டு பிடி அள்ளிப் போட்டுக் கொண்டு, நாளைப் பேச்சை எழுதி வைத்துப் படுத்தேன்.

* * * *

கனவு, கனவு! நான் சிறு வயது முதல் பேனாப் பிடித்ததும், இறைவனுக்குக் கவி மாலை தொடுத்ததும், பல பேனாக்களும் வசையம்புகளும் என்னை முள்ளம்பன்றி போல் குத்தியதும், நான் பட்ட அவஸ்தையும், பின்பு கதவை மூடிக்கொண்டு என் பணியைச் செய்து முடித்ததும், என் பேனாச் சுமையை உள்ளன்பரிடம் கொடுத்து விடுபட்டதும், முடிவாக அகத்தியரை ரேடியோவில் பேசச் செய்ததும், படச் சுருள்போலச் சித்தத் திரையில் விளையாடிச் சென்றன. முடிவில் என்னை ஒரு வசைப் பட்டாளம் சூழ்ந்து மிரட்டியது. நான், 'பகவானே, நீயே துணை' என்று உளறிக் கொண்டேன்.

பளிச்சென்று வெளிச்சம்; அகத்தியர் தோன்றினார்! "அன்பா, உன் மனதை அறிந்தோம்; உன் பணி முடிந்தது; சன்மார்க்கப் பணிகளுக்கு, இது காலமில்லை; இது அசுரயுகம்; சாதுக்களுக்கு இன்னொரு வேலை யுள்ளது. நானும் பல சித்தர்களும் கைலையில் பரமசிவனுடன் கலந்து, வருங்கால உலகிற்காகத் திட்டம் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்துடனே போகர் ஐரோப்பா செல்வார்; கிருத யுகம் பூக்க வேண்டும்; தேவஜாதி வர வேண்டும். அதற்கு உன்னைப் போன்ற சுயநலமற்ற சாதுக்கள் யோகம் செய்ய வேண்டும். அன்பா, நீ இன்றிரவே சிதம்பரம் சென்று நடராஜாவைத் தரிசி; அங்கிருந்து வழி துலங்கும்; கைலாச யாத்திரை செய்; பிறகு நடப்பதெல்லாம் சிவன் செயல். அன்பு, ஆசி, சிவோஹம்!" என்றார்.

அகத்தியர் மறைந்தார். நான், "யோகம், யோகம்' என்று உளறினேன். "இதோ இருக்கிறேனே!" என்று என் மனைவி என்னை எழுப்பினாள்! என் மனைவி யார் என்று தெரிந்து கொள்ளுங்கள்: **யோகம் (யோகாம்பாள்)**; யோகமும் நானும் ஏகமே!

---

## 15. முடிவுரை

ரேடியோ முன் நிற்கிறேன்; நிலையத் தலைவர் அறிவிக்கிறார்: "திருச்சிணப்பள்ளி ரேடியோ நிலயம்; இப்போது தொண்டன் **பாட்டையா** என்று தமிழர் அறிந்த **நடனஜோதி** பேசப் போகிறார்; நேயர்கள் இந்த ஆண்டு ஒவ்வொரு மாதமும் கேட்ட "**அகஸ்தியர் யாத்திரை**" **என்னும்** சொற்பொழிவுகளுக்கு நன்றி கூறுகிறார். இவரே அகத்தியர் குரலை நாம் அருவாகக் கேட்கச் செய்தவர்; இவர் அரிய கவி; அடக்கமானவர்; வருங்காலம் இவரை அறியும்" என்றார். என் **பேச்சின்** சுருக்கம்:—

"**என்னருமைத்** தமிழர்காள், உங்களிடம் அன்பு வைத்த ஒரு தொண்டன் குரலை இந்த ரேடியோவில்

கேட்கிறீர்கள்; இவன் நீண்டகாலம் நாவாலும் பேனுவாலும் தமிழர் முன்னேற்றத்திற்காகத் தன்னுல் இயன்றதைச் செய்தவன். தன் எண்ணங்களையெல்லாம் புனைபெயரால் வெளியிட்டான்; எழுதி எழுதி மூட்டைகட்டி அன்பரிடம் தந்துவிட்டான். தமிழரிடையே தன் சொல் ஏறவில்லையென்றறிந்து, அகத்திய பகவானை உபாசித்தான். பகவான் பிரத்யக்ஷமாகி "பாலகா, யாது வரம் வேண்டுகிருய்?" என்று கேட்டார். "பகவானே, திருச்சி ரேடியோவில் மாதம் ஒரு நாள் தமிழர் முன்னேற்றத்திற்காகத் தங்கள் திருவாயைத் திறக்க வேண்டும்!" என்று வேண்டினேன். பகவான் அவ்வாறே செய்யத் திருவுளம் பூத்தார். நம்புகிற பேர் நம்புங்கள்; அல்லாதார் பேச்சின் கருத்தையாவது நம்பிப் போற்றுங்கள். பகவான் அகத்தியர் இப்போது வருங்கால உலகைப் பிழைப்பிற்காகச் சிவயோக நிஷ்டையிலிருந்து திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிருர்; கைலை விட்டு, அணிமாசித்தியால் உடலை மறைத்து இங்கே வந்து தமது நீண்ட யாத்திரை அனுபவங்களை மிகவும் இனிமையாகப் பேசினுர். சிலர் நகைத்தனர்; சிலர் பகைத்தனர்; சிலர் உணர்ந்தனர்; அவர் கடமை தீர்ந்தது. இவன் கடமையும் இதோ இன்றுடன் தீர்ந்தது. அகத்தியர் திருவுள்ளத்தை மறுபடியும் உங்களுக்குச் சொல்லுகிறேன்: அகத்தியர் குமரிகண்டப் பேர்வழி; அக்காலம் முதல் மனித சமுதாயத்தை அவர் பார்த்து வருகிருர். தமிழர் நீண்ட காலம் அறிவும் திருவும் ஆற்றலும், வீரமும், கலையும் ஓங்கி உயர்ந்த நிலையிலிருந்ததை, அவர் பல நூற்றுண்டுகளாகப் பார்த்திருக்கிருர். தமிழர் அனைவரும் சாதிமத பேதமில்லாமல் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்று வாழ்ந்த வரிசையை அவர் அறிந்து விளக்கினுர். மூவேந்தர் காலம் வரையில் இப்படியே தமிழர் சிறந்தோங்கினர்: தமிழும் சன்மார்க்கமும் நாடெல்லாந் தழைத்தன. சுமார் ஐநூறு ஆண்டுகளாகத்தான் தமிழர் நிலைகுலைந்தனர். பல அன்னிய சக்திகள் வந்து மோதி நாடும் மொழியும் சீர்குலைந்தன. இன்று நமது நிலைமை இரங்கத்தக்கது; நாம் பழஞ் சுவடிகளில் பழைய மாமூல்களில் பெருமைகொண்டு புதுமையொளியை மறுக்கிருேம். பழமையின் நன்மையைக்

காத்து, நாம் காலத்திற்கேற்றபடி முன்னேற்றம் பெற வேண்டும். தமிழ் மண்ணில் பிறந்தவரெல்லாரும் எவராயினும் தமிழரே என்ற ஒருமை யுணர்ச்சி, நமது இரத்தத்தில் ஊறவேண்டும். பழைய பெரியார் வகுத்த நல்லொழுக்கங்களையும் நல்லறிவு நூல்களையும் நாம் காக்கவேண்டும்; இன்றுலகை ஐரோப்பியக் கலைகள் ஆளுகின்றன; அந்தக் கலைகளை யெல்லாம் நாம் நிறைவாக ஆராய்ந்து காலத்தை வெல்ல வேண்டும். நம்மவர், உலகில் பரவிய ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய பல மொழிகளையும் கற்று, அவற்றில் அடங்கிய அறிவுத்திரளைத் தமிழாக்கித் தமிழை வளப்படுத்த வேண்டும். இலக்கிய முயற்சி மட்டும் போதாது. ஐரோப்பியரைப்போல் நாமும் இயந்திரப் புலமை பெற்று நமது தேவைக்கு வேண்டிய சாமான்களை நமது நாட்டிலேயே செய்துகொள்ள வேண்டும். நமது செல்வம் நம்மவருக்கு உழைப்பும் பிழைப்பும் பெருகப் பல தொழில்களாக மாறவேண்டும். சங்க காலத் தமிழர் போன்று தமிழர் கப்பல் கட்டித் திரைகடலோட வேண்டும்; நமது செய்பொருள்களை உலகில் விற்கவேண்டும்.

நமக்கு ஒற்றுமை குறைவு; ஒருவரை ஒருவர் குத்திப் பேசுவதும், பொறாமைத்தடி வீசிப் புண்படுத்துவதுமாயிருக்கிறோம். சுத்த சன்மார்க்கத்தை விட்டு, ஏதேதோ சாதிமதச் சடங்குகளையும் பழைய மாமூல்களையும் பிடித்துச் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறோம். தமிழர் சாதிமத பேதங்களை மறந்து உள்ளத்தில் அந்தண்மையும் நரம்புகளில் வீரமும், உடலில் பொதுநலப்பணியும், கைகளில் தொழிலும் அணிந்து வாழவேண்டும். நமது சமுதாய ஊழல்கள் ஒழிய வேண்டும்; வீண் கட்டுப்பாடுகளின்றி ஆணும் பெண்ணும் சுதந்தரமாக வாழ வேண்டும். இருபாலாரும் பிரமசரியம் காத்துக் கல்வி நிறைந்து பிழைப்பிற்கு ஒரு நல்ல தொழிலைத் தேடிக் கொண்டே இல்லறம் புரிய வேண்டும்; திருக்குறள் தமிழருக்குப் பொது வேதமாகும்; அதன்படி அறம் பொருள் இன்பமும் அருளும் நிரம்பி வாழ வேண்டும். தமிழில் உள்ள திருமுறை நூல்களையும் அருட்பாடல்களையும் கலைப்பாடல்களையும் உலக மொழிகளில் மொழிபெயர்த்து

உலாவச் செய்ய வேண்டும். நமது கலைச்செல்வத்தை உலகிற்குத் தருவது, உலகின் கலைச்செல்வங்களைத் தமிழாக்குவது—ஆகிய இரண்டு காரியங்களை நமது புலவர்கள் மேற்கொள்ள வேண்டும். 'விதி, விதி' என்று பேசாமல், மதிப்பொலிவுடன் நாம் காலத்தை வென்று உலகில் தலைநிமிர வேண்டும். இடைவிடா முயற்சியினாலே தான் மற்ற நாடுகள் வல்லரசுகளாக விளங்குகின்றன. நாமும் மனித சக்தியை நன்முகப் பயன்படுத்திக் காரியசித்தி பெறவேண்டும். நியூடன், கொலம்பஸ், எடிசன், மார்க்கோனி, பாரடே, ஆர்கரைட் போன்ற நிபுணர்களை நாமும் உண்டாக்க வேண்டும். புலவர்களைப் படைத்தலே புகழ் படைத்தலாம். முடிவாக எல்லாரும் உள்ளத்தில் உள்ள பரம்பொருளை மனங்குவிந்து அருட்சக்தி பெற வேண்டும். இறைவன் அருளும் நமது உழைப்பும் அறிவாற்றலும் சேர்ந்து, நாம் உலகில் திறமை பெற்ற தீரர் கூட்டமாக வாழவேண்டும். இறைவனருளாலும் முனிவர் கருணையாலும் இந்தக் கலியுகம் மாறி சத்திய யுகம் மலரும்; அப்போதே தமிழர் சத்திய சன்மார்க்கச் சுடர்களாகப் பொலிவர்! தமிழர்காள், இதுவே அகத்திய பகவான் திருவுளம்; தொண்டன் கடமை தீர்ந்தது; உங்களிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். எந்தாய் வாழ்க; எல்லாரும் வாழ்க!"

பேச்சானதும் கையெழுத்துப் போட்டு ரூபாய் முன்னூறு பெற்றுக்கொண்டு, நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டேன். தமாஷ் ரங்கன் செவியில் மட்டும் கைலாசம் என்று சொல்லிக்கொண்டு வீடு சேர்ந்தேன். என் மனைவி யோகம் வீட்டிலுள்ள சட்டிபானைகளை யெல்லாம் பின்புறம் குடியிருந்த ஏழைகளுக்குத் தந்துவிட்டாள்; நான் துணிமணிகளை யெல்லாம் முன்பே உச்சிப்பிள்ளையார் கோயிலில் பரதேசிகளுக்குத் தந்தேன்.

—யோகம்!

—தெரியும்; நானும் கனவுகண்டுதான் தயாராயிருக்கிறேன்!

—யோகம், நீயும் நானும் ஏகம்!

—சிவபோகந்தான்; புறப்படுங்கள்!

*　　*　　*　　*

நான் "நடனஜோதிக் கைலாச யாத்திரை" என்று எழுதிக் கதவில் ஒட்டினேன். யோகமும் நானும் ஒன்றுதான்; அவளே, எனது சூக்ஷ்ம சரீரம்; இருவரும் உடனே சிதம்பரத்திற்குப் புறப்பட்டோம். நடராஜாவைச் சரண் புகுந்தோம்; அங்கே ஒரு துறவி எங்களை அன்புடன் தொடர்ந்தார். எல்லாரும் வடக்கே புறப்பட்டு தியானமும் ஜபமும் கீதமுமாக, மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தெரிசித்துக்கொண்டே காசிக்குப் போனோம்; கங்கையாடினோம்; அங்கே ஒரு பைராகிக்கூட்டம் கைலாச யாத்திரைக்குப் புறப்பட்டது. நாங்களும் புறப்பட்டோம்; எப்படியோ இமயமலை ஏறிச்சென்று திருக்கைலை சேர்ந்தோம். அகத்திய பகவானால் சிவதரிசனம் கிடைத்தது! பகவான் ஆணைப்படி, இப்போது கைலாசத்தில் இதய குகையில் யோகத்துடன் சுத்த போகம் அனுபவிக்கிறோம்! சத்தியயுகத்தை நாட்ட இனி பகவான் ஆணையால் வருவோம். அகத்தியர் யாத்திரை முற்றிற்று; என் யாத்திரையும் முற்றிற்று. ஓம் சிவம்.

# அன்பு நிலய நூல்கள்

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இயற்றியவை

ரூ. அ.

1. **சிலம்புச் செல்வம் (2-ஆம் பதிப்பு)** 3—0

இந்நூலில் இளங்கோவடிகள் வழங்கிய முத்தமிழ்ப் பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரக் கதையை எல்லோருக்கும் விளங்கும்படி, தெளிவான இளந் தமிழில் எழுதப் பெற்றுள்ளது.

2. **மீரா விஜயம் (அரிய இன்னிசை நாடகம்)** 1—6

இந்நாடகத்தில் பக்த மீராவின் வரலாற்றைப் படிக்கவும், நடிக்கவும் ஏற்றவாறு சுவை ததும்ப எழுதப் பெற்றுள்ளது.

3. **திருக்குறளின்பம் (4-ஆம் பதிப்பு)** 3—0

" இனிய எளிய நடையும், பொருட் செறிவும், உபமானஉபமேயங்களும்கலந்துவிளங்கும் திருக்குறள் இன்பத்தை இந்த முறையில் ஸ்ரீ பாரதியார் அவர்களைப் போன்று எடுத்துக் காட்டியவர் இதற்குமுன் வேறு யாருமிலர்"—டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

4. **கவிமாவின் காதல் முதலிய கதைகள்** 1—0

இந்நூலில் மனித சமுதாயத்திற்குப் புதிய உணர்வளிக்கும்ஆறு அரியஇனியகதைகள் அடங்கியுள்ளன.

5. **மீனாட்சிசுந்தரம் பிள்ளை** 0-10

புலவர் பெருமான் மீனாட்சிசுந்தரனாரின் வரலாறும், மணிவாசகங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன.

6. **திருநூல் (3-ஆம் பதிப்பு)** 2—4

இந்நூல், இறைவனடிபற்றி, தூய வாழ்வு வாழ்ந்து இன்ப நிறைவுற்றோங்குதற்கு வழிகாட்டுகிறது; ஒவ்வொரு இல்லறவாசியும் படிக்கத்தக்கது.

---

**Anbu Nilayam**

Publishers & Book-Sellers

RAMACHANDRAPURAM (P. O.)

Trichy Dist., S. India.

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 12 | 27 | குரைவை | குரவை |
| 57 | 30 | வைத்தியர் | வைத்தியம் |
| 103 | 9 | பார்க்கிறேன் | பார்க்கிறேனே |
| ,, | 26 | போகிறார் | போகிறாய் |
| 106 | 8 | காதலராகி | காதலராகிப் |
| 110 | 2 | ஸ்ரீமதி | ருதுமதி |
| 111 | 20 | பெருமாள் ; | பெருமாள், |
| 112 | 8 | எமது | எமதே |
| 116 | 14 | யிழைப்பிற்காகச் | உய்விக்கவே |
| 118 | 13 | மனங்குவிந்து அருட் | மனங்குவிந்து — தியானித்து அருட் |